www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
11/00
දිනමුරසු වාරමලර් ஆக.31–செப்.06,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 220

## நகர்வுகளும் - அதிர்வுகளும்

## இருவகைப் போர்முறை

எங்கே? எப்போது?



பரபரப்பான ஆசியல் தொடர்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

கலக்க வரும் புதுமுகம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கைதுகளும் காரணமும்...!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
ரூபவாகினி தொலைக்காட்சியில்
ஜனாதிபதியின் நேரடிப் பேட்டி
கடந்தவாரம் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் பேட்டியை
தமிழிலும் மொழி பெயர்த்தனர்.
உப்புச் சப்பில்லாத மொழிபெயர்ப்பு.
ஜனாதிபதிக்கு தமிழ் தெரியாதது
நல்லதாகப் போயிற்று!

"யுத்தம்
தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல!"
என்று ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதியின்
பேட்டி இடம்பெறுவதற்கு
சில நாட்களுக்கு முன்னரே
வன்னியில் இரண்டு தேவாலயங்கள்
விமானக் குண்டுவீச்சுக்கு
இலக்காகி இருந்தன!

பொதுமக்கள் ஒன்பது பேரும்
குறிதவறிய குண்டுவீச்சுக்கு
பலியாகி இருந்தனர்.

ஏவப்படும் ஷெல்கள்
மக்களை குடியெழுப்புவதுடன்
உயிர் பறித்துக் கொண்டுமிருக்கின்றன!

போர் நடைபெறும் பகுதியை
பொறுத்துத்தான்
போர் முறைகள் அமையவேண்டும்!
பொது மக்களின் குடியிருப்புக்கள்
நிறைந்த பகுதியில்
ஷெல்கள் சென்று
புலிகளைத் தேட முடியுமா?

விமானங்கள்கூட
குறிதவறி குண்டுவீசும்போது,
ஏவப்படும் ஷெல்கள்
இலக்கை சென்றடையும்
என்று எப்படி நம்புகிறார்கள்?

எப்படியாவது வெற்றி பெறுதல்
என்பதைத் தவிர
வேறெந்த நோக்கமும்
இன்றைய போர் முறையில்
இருப்பதாகத் தெரியவில்லை!

கொழும்பில் நடைபெறும்
தொடர் கைதுகள் தொடர்பாகவும்
கேள்வி எழுப்பப்பட்டது.

"புலிகளின் ஊடுருவல் இருப்பதால்,
பாதுகாப்பு நடவடிக்கைகள்
தவிர்க்க முடியாதவை"
என்று கூறியிருந்தார் ஜனாதிபதி!

அப்பாவி தமிழ் மக்களை
கைது செய்து
அவர்களிடம் பொலிசார்
பணம் பறிப்பதாகவும் ஜனாதிபதி
பேட்டியில் கூறியிருந்தார்.

இக் கருத்தை தமிழர் தரப்பில்
எவராவது கூறியிருந்தால்
இனவாதக் கருத்தாகவோ
புலிகளுக்கு சார்பான கருத்தாகவோ
சாயம் பூசப்பட்டிருக்கும்!
ஜனாதிபதியே கூறியிருப்பதால்
தப்பான அர்த்தம் கற்பிக்க இயலாது!

ஜனாதிபதி கூறியது
முற்றிலும் உண்மைதான்!
சகல பொலிஸார்மீதும்
நாம் குறை சொல்லவில்லை!
சில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள்
கைதுசெய்து, கறப்பதை
ஒரு தொழிலாகவே செய்து வருகிறார்கள்!
உண்மையை ஒளிவு மறைவின்றி
ஒத்துக்கொண்ட ஜனாதிபதியை
பாராட்டுகிறோம்.
ஆனால்-புகார்களை அறிந்தபின்னர்
"அமைச்சரவையில் சத்தம் போட்டேன்!"
"பாதுகாப்புச் சபையில் கூறினேன்!"
என்று ஜனாதிபதி சொன்னதுதான்
திருப்திகரமாக அமையவில்லை!

புகார் கிடைத்ததும்
உரிய விசாரணை மூலம்
தான் எடுத்த நடவடிக்கைகளை
ஜனாதிபதி கூறியிருந்தால்
நாம் அதனை மெச்சியிருக்கலாம்!

சர்வ அதிகாரம் படைத்த
ஜனாதிபதியால்கூட
தமிழ் மக்களை ஆட்டிப் படைக்கும்
குறிப்பிட்ட அதிகாரிகள்மீது
நடவடிக்கை எடுக்க முடியவில்லை,
அமைச்சரவையில்
சத்தமிட மட்டுமே முடிந்தது எனில்
சாதாரண மக்கள் நிலை என்ன?

ஆளும் கட்சி- எதிர்க்கட்சி
இடையேயான மோதல்களில்
ஆளும் கட்சியினரின் புகார் நிமித்தம்
பொலிஸ் அதிகாரிகள்மீது
உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது!

அப்பாவி தமிழ் மக்கள்
பாதிக்கப்படும் விடயங்களில்
காரணமான அதிகாரிகள்மீது
உடனடி நடவடிக்கை
எடுக்க மட்டும் தயக்கம் ஏன்?

பாதிக்கப்படும் தமிழ் மக்கள்
அரசிடம் இருந்தும்
ஜனாதிபதியிடம் இருந்தும்
எதிர்பார்ப்பது
அனுதாபமான வார்த்தைகளையல்ல
ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையே!

இன்றைய அணுகுமுறைகள்
தவிர்க்க முடியாதவை என்று
அரசு கூறுமானால்
தமிழ் மக்களையும், புலிகளையும்
தனித்தனியாக பிரிக்கும் முயற்சியில்
தோல்வி ஏற்பட்டுள்ளது
என்பதையே ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### இறைவனிடம் சரணடையுங்கள்!



பொதுவாக மக்களிடம் நாம் காணுகின்ற ஒரு குணமுள்ளது; எந்த ஒரு வேலையை செய்யத் தொடங்கும் பொழுதும், 'இது மிக கஷ்டமாக இருக்குமோ? என்னால் செய்ய முடியுமாயிருக்குமோ?' என்று எண்ணுவது. இது நீங்களும், நானும் இயல்பாகக் காணுகின்ற ஒரு விடயம் இல்லையா?

இப்படிப்பட்டவர்களைப் பார்த்து, இரட்சகராகிய இயேசு மிக மேன்மையான ஒரு கருத்தைக் கூறியுள்ளார். தன் உடன்பிறந்தவனை அழைப்பதுபோல் அழைக்கிறார்.

"சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே! எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள் மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் சாந்தமும், மனத்தாழ்ச்சியும் உள்ளவர். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்," ஆம். என் நுகம் இனிது; என் சுமை எளிதானது.

எல்லாவற்றையும் தொடங்கும்பொழுது ஆண்டவனை எண்ணிக் கொண்டு தொடங்கினால் இனிதாக இருக்கும். சுமை எளிதாக இருக்கும்.

நம் இதயத்தில் இறைவனிருக்கும் பொழுது எல்லாம் நலமே!

ஏ.பி.வி.கோமஸ்.

### நபிகளார் மொழிந்த நற் செயல்களின் விவரணங்கள்

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நவின்றார்கள். "இரண்டு மனிதர்களுக்கிடையில் சமாதானம் செய்து வைத்துவிடும். இதுவும் நற்செயலே.

ஒருவரை உம் வாகனத்தில் அமர்த்திக் கொள்ளும். அல்லது அவர் சுமையை உமது வாகனத்தில் ஏற்றிக் கொள்ளும். இதுவும் நற்செயலே;

நல்ல சொல் உரைப்பதுவும் நற் செயலே;

தொழுகைக்காக நீர் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் நற்செயலே.

பாதையில் இருந்து முட்களையும் கற்களையும் அகற்றி விடுவதும் நற் செயலே!"

மேலும் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

"நீர் நற்செயலை அற்பமானதாகக் கருதாதீர். நீர் உம் சகோதரரை மலர்ந்த முகத்துடன் சந்திப்பதும் கூட ஒரு நற்செயலேயாகும்.

உமது வாளியிலுள்ள தண்ணீரை உம் சகோதரரின் வாளியில் ஊற்றுவதும் கூட ஒரு நற்செயலே."

எம்.என்.எம். அனஸ், அக்குறணை.

## கவிதைப் போட்டி இல. 217



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

#### மனச்சுமை!

ஆற்றோரக்காற்றும்
தலைச் சுமையும் இதமாகும்!
சீரழியும் வாழ்வில்
மனச் சுமையே பாரமாகும்!
ஆற நிழல் தேடி
நெடுந்தூரம் பயணமோ?
வற்றாத வளபூமி
வல்லவர்க்கே சொந்தமாமோ?

ம.திருவரசுராசா- தவசிகுளம், வவுனியா.

#### சத்தியமாய் சொல்லுகிறோம்!

நாள் பார்த்து கோள் பார்த்து
குடிபுகநாம் போகவில்லை!
கும்மிருட்டில் இங்கு
மூண்டுவிட்ட போராலே
மூட்டை முடிச்சோடு
விட்டை விட்டே ஓடுகிறோம்!

தர்ஷிக்கா கனகசிங்கம்-கல்லடி, மட்டக்களப்பு.

#### முடிவுத் திகதி

அகதி வாழ்வு,
முடிவுற-ஒரு
திகதி வேண்டி
அலைகிறோம்!

ஏ.டபிள்யூ.எம். ஆரிப்-
தீ.ட.சி.,அட்டாளைச்சேனை.

#### நீங்காதன

அகதி வாழ்வு தந்த
அற்புதப் பயணம்!
நிழல்கள் நீங்கா
போர் மேகங்கள்!

திருமதி யே.மஞ்சுளா-
நீர்கொழும்பு.

#### பயணங்கள்

தலைகளில் பாரம்
விழிகளில் ஈரம்
போர்தந்த வரம்
போவது வெகு தூரம்!

ஜயத்தன்- துறைநீலாவணை-08.

#### பிஞ்சு

எட்டிநட இல்லை என்றால்
இதையும் இழப்போம்!
பிஞ்சுகளாவது-இங்கு
நமியில் மிஞ்சட்டும்!

திருமதி புஸ்பலதா தவராஜா-
செட்டிபாளயம்.

#### நிஜவாழ்வு

மனச் சுமையைவிட-இந்த
மண் சுமை பாரமல்ல!
நிழல் மட்டுமா இருள்...?
நிஜவாழ்வும் அதுதானே!

செ.ஞானராசா- திருகோணமலை.

#### பொதி

'பொதி பொதி.'யென
நீங்கள் கூறுவது?
பொதி சுமந்து,
புண்பட்டு-நாம்
புலம்பெயரும்
அவலத்தையோ?

எம்.வேல்முருகன்,
மாதென்ன,
பலாங்கொடை.

#### எங்களம்மா! எங்களப்பா!

போருடைத்த விடுகளைப்
புதுப்பிக்க முடியாது-ஆயினும்
குடிசைக்கு மண்சுமக்க
கூடஇல்லை எங்களம்மா
கூண்டுக்குள் எங்களப்பா!

இரா.லோகேஸ்பரன்-
மல்லிகைத்தீவு, முதூர்.

#### புரியவில்லை!

அஞ்சிப் பயந்தழுது
அலைவதுதான் வாழ்க்கையாச்சு!
தஞ்சம் புகுவதற்கும்
தக்கதோர் இடமில்லை!
எங்கு செல்கின்றோம்?
எங்களுக்கே புரியவில்லை!

ரேணுகா நிபாய்தீன்- ஏறாவூர்-02.

#### எப்போது முடிவுறுமோ....?

எங்கே போகின்றோம்....?
எமக்கே புரியவில்லை
இடம்பெயர் தொடர்கதைகள்
எப்போது முடிவுறுமோ...?

அலஸ்மரியதாஸ்- வஞ்சியன்குளம்,
நானாட்டான்.

#### சுமையான துயரம்!

போரான இருளாலே உறவிழந்தோம்!
விடிவான ஒரு காலம் நாம் இழந்தோம்!
நீரோடு நிழலாகும் விம்பங்கள்-எம்
வாழ்வோடு சுமையாகும் துயரங்கள்!


தெ.லோஜனா, கொழும்பு-15.

#### எதிர் நீச்சல்!

தொன்று தொட்டு வாழ்ந்த இடம்
குண்டு பட்டு அழிந்ததால்,
வரண்டு விட்ட வாழ்க்கைக்கு
வழி தேடும் எதிர் நீச்சல்!

செல்வி சுவர்ணா விநாயகமூர்த்தி-
ஆரையம்பதி-1.

## கவிதைப் போட்டி இல.220



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 06.09.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.220
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை

தின'முரசு' வழங்கி வரும் பூலான் தேவி கதையை தொடர்ந்து வாசித்து வருகின்றோம். ஆனால் பூலானின் கதையில் தொடர் 57, எங்கள் யாவரையும் கண் கலங்க வைத்துவிட்டது. மல்லாவின் மரணம் இவ்வளவு சீக்கிரத்தில் வரும் என்று எதிர்பார்க்கவே இல்லை.

டக்ளஸ் ஏபிரகாம்- வெளிசற, ராகம.

■ ■

தித்திக்கும் தேன் தமிழில்,
எத்திக்கும் சென்றொலிக்கும்
என் இனிய 'தினமுரசே'!

நீ வாரா வாரம் ரசிகன் மூலம் தரும் 'பூலான்' தொடர் ஒவ்வொரு வாரமும் என் மனதை சோகத்தில் ஆழ்த்தும்! 'விக்கிரம் மல்லா'வின், 'அழகான, இளம் வாலிபனின்' துர் மரண புகைப்படத்தை வெளியிட்டு என்னை கண்ணீரில் மூழ்கடித்துவிட்டாய்! பூலானுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்!

எம்.ஹில்மி ஜலீல்- மாவனல்லை.

■ ■

### மல்லாவின் மரணம்

ரசிகன்மீது எனக்கு பொல்லாத கோபம். மல்லாவை கொன்றுவிட்டாரே. மல்லாவை பாலைவனத்தில் பூத்த ரோஜா போன்று மெருகூட்டிவிட்டு இப்படி இடைநடுவே கொன்றுபோடலாமா? என்று கோபம் வந்தாலும், உண்மையாக நடந்த நிகழ்வை மாற்ற முடியாதே என்பதால் ரசிகனை மன்னிக்கிறேன். மல்லாவின் மரணம் உண்மையாகவே கண்ணீரை வரவழைத்துவிட்டது. கதையை படித்த எம்மாலேயே தாங்க இயலவில்லை. பூலான் எப்படித்தான் தாங்கினாளோ? என்றுதான் நினைத்து வருந்தினேன்.

செல்வி எம்.ஷர்மிளா- அப்புத்தளை.

### சுருக்குக் கயிறு

யாழ்ப்பாணத் தரைப்பாதை திறப்பின் நோக்கங்களை விளக்கி விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கையை பிரசுரித்திருந்தீர்கள். அதனை சுருக்குக் கயிறு என்று விபரித்திருந்தனர். சுருக்குக் கயிற்றை இறுக்க துணைபோகிறவர்களும் இருக்கிறார்கள். நிற்க: தரைப்பாதையை திறக்க அரசு உண்மையாகவே விரும்பினால், மன்னார் பாதையூடாக சென்றிருக்கலாம் தானே. இத்தனை இழப்புக்கள் இரு தரப்பிலும் ஏற்பட்டிருக்காதே.

வி.பெரியதங்கன்- வவுனியா.

### மூத்த அரசியல்வாதியின் முரண்பாடு

அன்புள்ள முரசுக்கு!

கடந்தவாரம் ஒரு பத்திரிகையில் அரசியல் தீர்வு முயற்சி இழுத்தடிக்கப்படுவதாக கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம் கவலை தெரிவித்ததை கவனித்தீரா? இதனைத்தானே நமது முரசம் அன்று தொட்டே கூறிவருகிறது. அதனை அவதூறு, குழப்பல் என்று கூறினார் இந்த முன்னாள் தலைவர். இப்போது அவரே புலம்புகிறார். அவரது வார்த்தையில் கூறினால் குழப்புகிறார். இந்த மனிதர்மேல் மூத்தவர் என்று நான் வைத்திருந்த கொஞ்ச நஞ்ச மதிப்பும் இல்லாமல் போய்விட்டது.

க.பூலோகசிங்கம்- கொழும்பு-06.

### விசேஷ ஏற்பாடு

இனிய முரசுக்கு!

"வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு தனித்துவமான தீர்வை வழங்கினால் சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள்" என்று நீதியமைச்சர் கூறியதை இராஜதந்திரி அலசியவிதம் அருமை. கிழக்கில் தனி முஸ்லிம் மாகாணம்கூட விசேஷ ஏற்பாடுதானே. தமிழ்-முஸ்லிம் கட்சிகளுக்கிடையே பிரச்சனையாக இழுபடக்கூடிய விசேஷ ஏற்பாட்டுக்கு பச்சைக் கொடி. ஏனைய விடயங்களுக்கு மட்டும் சிவப்புக் கொடியா? முஸ்லிம் மக்களுக்கு தனிமாகாணம் கொடுப்பதை நான் எதிர்ப்பவனல்ல. ஆனால் நீதியமைச்சரின் கூற்றில் உள்ள முன்னுக்குப் பின் முரண்பாட்டை சுட்டிக்காட்டவே அதனை குறிப்பிட்டுள்ளேன்.

பா.மணிவாசகம்- திருக்கோணமலை.

### கொலைப் பட்டியல் பாதிதான்



அரசியல் தொடரில் இந்தியப் படைகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் நடத்திய கொலைப்பட்டியலை வெளியிட்டிருந்தீர். அது பாதிதானே. மீதி எங்கே? எனது சகோதரர் முறையான ஒருவரையும் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொன்றார்கள். (அப்பன் என்று அழைக்கப்படும் கணேசதாஸ்) எந்த இயக்கத் தொடர்பும் இல்லாதவர். இயக்கப் பொடியன் ஒருவனுடன் ஏற்பட்ட தகராறு கொலையில் முடிந்தது. ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிமுடித்தார்கள். இன்று ஜனநாயகம் பேசுகின்றனர்.

இ.கிருஷ்ணகுமார்- கொழும்பு-11.

### உணர்வுள்ள படையல்

'கனவு மெய்ப்பட வேண்டும்' அருமையாகச் செல்கிறது. இவ்வாறான தொடர்கள் தமிழில் அவசியம் வரவேண்டியவை. பிரபஞ்சன் இதனை கதையாக எழுதவில்லை. உணர்வுபூர்வமான ஒரு படைப்பாக உள்ளம் உருகி எழுதியிருக்கிறார் என்று நினைக்கிறேன். ஜனரஞ்சக பத்திரிகைகள் பெண்களையும், பெண் விடுதலையையும் மட்டரகமாக கிண்டல் செய்வதையே வழக்கமாக கொண்டிருந்தன. தமிழக ஜனரஞ்சக பத்திரிகை உலகில் இருந்து, இங்குள்ளோரும் கற்றுக் கொண்ட கிண்டல் அல்லது காப்பியடித்தல். 'முரசு' மாறுபட்ட தொடர்களாக 'தாய்' 'தூக்கு மேடை குறிப்பு' இப்போது 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்பவற்றை தந்துள்ளமை நிச்சயம் போற்றத்தக்கதே. தொடரட்டும் இத்தகைய இனிய முயற்சிகள்.

திருமதி கா.லோகநாயகி- மட்டக்களப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கில் தொடரப்போகும் ஷெல் யுத்தம்

## தாக்குதலை தீவிரமாக்க புலிகள் மூஸ்தீபு!

## வன்னியில் கைப்பற்றியதாக புலிகள் வெளியிட்ட பட்டியல்

வன்னியில் 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையை வருட இறுதிக்குள் முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து மேலும் துருப்புக்களை வன்னிக்கு கொண்டுசெல்லக்கூடும் என்று புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது.

இதனால் கிழக்கில் பரவலான தாக்குதல்கள் இனிவரும் வாரங்களில் மேலும் தீவிரமாகலாம் என்று தெரிகிறது.

படையினர் கிழக்கில் இருந்து வன்னிக்கு கொண்டுசெல்லப்பட்டால் கிழக்கின் பலபகுதிகளை இழக்கும் நிலை ஏற்படலாம் என்பதை உணர்த்தும் முகமாக தாக்குதல்களை தீவிரமாக்க புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

24.08.97 மாலையில் மட்டக்களப்பு நகரில் படைநிலைகள்மீதும், புளொட் இயக்க முகாம் மீதும் நடத்தப்பட்ட ஆட்டிலெறி ஷெல் தாக்குதல் தம்மால் நடத்தப்பட்டதாக புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

புளுக்குணாவவில் புலிகள் இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்ட 81 எம்.எம்.ரக ஆட்டிலெறி மூலமாகவே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை.

கிழக்கில் படை நிலைகள்மீதான ஆட்டிலெறித் தாக்குதலை புலிகள் தொடர்வர் என்றும், இதனால் நகர்ப்புறத்தில் பாரிய படைநிலைகளை பாதுகாக்க மேலும் முன்னரங்க முகாம்களை படையினர் அமைக்க வேண்டி ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது. அப்படி மேலும் முகாம்கள் அமைக்கப்பட்டால் படையினரின் எண்ணிக்கையை கிழக்கில் அதிகரிக்க வேண்டி இருக்கும்.

தமது கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு சமீபமாகவுள்ள பகுதி படை நிலைகள்மீது மோட்டர் ஷெல் தாக்குதல்களையும், எட்ட உள்ள படை நிலைகள்மீது ஆட்டிலெறி தாக்குதல்களையும் கிழக்கில் புலிகள் நடத்திவருகின்றனர்.

படையினரின் பதில் ஷெல் தாக்குதலில் சிக்காமல் இருப்பதற்காக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள பிரதான முகாம்கள் இடம்மாற்றப்பட்டுள்ளன. படைநிலைகள்மீது ஷெல் தாக்குதல்கள் தொடர இருப்பதையே புலிகளின் ஏற்பாடுகள் மூலம் அறியமுடிகிறது.

மட்டக்களப்பில் உள்ள இராணுவத் தலைமையகம், விமானத்தளம் போன்றவற்றின் பாதுகாப்புக்கு புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதல் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

மட்டக்களப்பில் நடைபெறும் ஷெல் யுத்தத்தால் பொதுமக்கள் பெரிதும் கலக்கமடைந்துள்ளனர்.

### 22 டாங்கிகள் இழப்பு

பரந்தன் கிளிநொச்சி சமர் உட்பட வன்னிப் போர்முனையில் தமது தாக்குதலில் 22 டாங்கிகளை படையினர் இழந்துள்ளனர் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

புளியங்குளத்தில் கடந்த 19ம் திகதி நடைபெற்ற முதல்நாள் சண்டையில் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் வெளியிட்டுள்ள ஆயுதப்பட்டியலில்; 73 எம்.எம். துப்பாக்கி-01, அதற்கான ஷெல்கள்- 27, ஏ.கே.எல்.எம்.ஜி-01, எலெக்ரோனிக் பி.கே-01, ரி.56-07, ஜி.எம். -ரவைகள்- 14750, பி.கே. ரவைகள் 4500, பி.கே. ரவை லிங்குடன்-650, மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள், கனரக துருப்புக் காவி வாகனம் ஒன்று ஆகியன கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிபிர் விமானம்மீது புலிகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக படையினர் கூறியிருந்தனர். ஆனால் புலிகள் இதுவரை அது தொடர்பாக எதனையும் தெரிவிக்கவில்லை.

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பது ஒன்றும் இரகசியமல்ல. ஏற்கனவே ஏவுகணைத் தாக்குதல்கள் மூலம் அவ்ரோ விமானங்களும், புக்காராவும் தாக்கி வீழ்த்தப்பட்டிருந்தன. ஆனால் புலிகளிடம் இருப்பது சாம் 7 ரக ஏவுகணையா? ஸ்ரிஞ்சர் ஏவுகணையா? என்பதை படையினரால் அறியமுடியாதுள்ளது. அவ்வாறு அறிந்தால் தான் அவற்றில் இருந்து தப்பக்கூடிய விமானங்களை வாங்க முடியும்.

புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணையை மட்டுமல்லாமல், விமான எதிர்ப்புத் துப்பாக்கியையும் பயன்படுத்தி வருகின்றனர்.

புலிகளிடம் விமானங்கள் இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் முல்லைத்தீவு முகாமில் வைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்பு துப்பாக்கியை புலிகள் கைப்பற்றியிருந்தனர். ஓமந்தை பகுதியில் புலிகள் நடத்திய மூன்றாவது ஊடறுப்பு தாக்குதலிலும் விமான எதிர்ப்பு துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது.

அத் துப்பாக்கியைத்தான் புலிகள் கிபிர் மீது பரிசீலித்துப் பார்த்தனரா என்பது தெரியவில்லை.

## இழப்புக்கள் பற்றி தவறான தகவல்கள்

## படையினர் மீது புலிகள் குற்றச்சாட்டு

புளியங்குளம் பகுதியில் ஆகஸ்ட் 19ம் திகதி முதல் நடைபெற்ற சமர் தொடர்பாக புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் படைத்தரப்பினர்மீது புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். தமது தரப்பு இழப்புத் தொடர்பாக படையினர் மனம்போன போக்கில் செய்தி வெளியிடுவதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளின் இழப்புக்களை மனம்போன போக்கில் பெரிதுபடுத்தி வருகிறது.

கடந்த சில நாட்களாக நடைபெற்ற சண்டைகளில் புலிகள் தரப்பில் பலநூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் புலிகள் கொல்லப்பட்டதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தவறான பிரசாரத்தில் ஈடுபட்டது.

விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடையும் போராளிகளின் தொகை பற்றிய விபரங்களை எமது இயக்கம் எக் காலகட்டத்திலும் மறைத்ததில்லை. தமிழீழ தேசத்திற்காக ஆயுதம் தரித்த நாள் முதல் இதனை எமது இயக்கம் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வருகிறது. வீரச்சாவடையும் போராளிகளின் எண்ணிக்கையை மறைப்பது அப் போராளிகளுக்குச் செய்யும் துரோகமாகவே எமது இயக்கம் கருதிவருகிறது. ஆகஸ்ட் 19ம் திகதி முதல் 22ம் திகதி வரையான நான்கு நாள் மோதலில் 76 புலிகள் பலியாகியுள்ளனர். இதில் 74 புலிகள் சண்டையிலும், 2 பேர் காயமடைந்த நிலையில் மறுநாளும் பலியாகினர்." இவ்வாறு புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடரும் தேடுதல் வேட்டை!

யாழ்ப்பாணம் கொக்குவில், உயரப்புலம், மானிப்பாய், சுதுமலை, தாவடி, இணுவில் ஆகிய பகுதிகளில் கடந்த 19ம் திகதி படையினரின் சுற்றிவளைப்பு தேடுதல் நடத்தப்பட்டது.

கோண்டாவில், மானிப்பாய் பகுதிகளில் 18ம் 19ம் திகதிகளில் நடத்தப்பட்ட இருவேறு சம்பவங்களில் 2 பேர் கொல்லப்பட்டனர். அவர்கள் புலிகள் என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

25, 35 வயது மதிக்கத்தக்க இரண்டு பேரினதும் சடலங்கள் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

யாழ் குடாநாட்டில் அடிக்கடி பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன.

## திருடருக்கு அன்பளிப்பு

யாழ் குடாநாட்டில் இணுவில் பகுதியில் மாடுகள் திருட்டுப் போவது அதிகரித்துவிட்டது. வழக்கமாக திருடர்களைக் கண்டால் தர்ம அடி கொடுப்பதுதான் வழக்கம். இணுவில் பகுதியில் தங்கள் மாடுகளை யார் திருடியது என்று தெரிந்தால் அத்திருடர்களுக்கு பணம் கொடுத்து மாடுகளை மீட்டுவருகின்றனர் உரிமையாளர்கள்.

5 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்டுக்கடாவை திருடிய திருடனுக்கு ஆயிரம் ரூபா செலுத்திவிட்டு மீட்டுவந்தார் ஒருவர். இணுவிலில் காணாமல்போன பசுவையும் கன்றையும் தாவடியில் கண்ட ஒருவர் அதனைத் திருடியவனுக்கு 500 ரூபா கொடுத்து கெஞ்சிக் கூத்தாடி மீட்டுவந்தாராம். திருடர் பாடு கொண்டாட்டம்.

## கைதிகள் ஓட்டம்

மன்னார் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் சொந்தமான பிக்-அப் வாகனம் ஒன்று கடந்த 20.08.97 அன்று புலிகளால் கடத்தப்பட்டுள்ளது.

கச்சேரியில் வழமை போன்று நிறுத்திவிட்டு மறுநாட் காலை இந்த வாகனத்தைக் கொண்டு வந்து மேற்படி அலுவலகத்திற்கு கொண்டு சென்ற சாரதியிடம் துப்பாக்கியைக் காட்டி இதனை, கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் காலை 8.15 மணியளவில் நடைபெற்றது. இதனையடுத்து இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று தாழப் பறந்து சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

எனினும் மன்னார்த்தீவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் இந்த வாகனம் சில நாட்கள் வரை ஓடித்திரிந்ததாக கூறப்படுகின்றது.

இந்த வாகனம் படகுகள் மூலம் மடுப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இதே தினம் மன்னார் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு கைதிகள் சிறையிலிருந்து தப்பியோடிவிட்டதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மன்னாரில் போதைப் பொருள்

(மன்னார் நிருபர்)

தற்போது மன்னாருக்குள் கடத்தி வரப்படும் போதைப் பொருட்களின் அளவு என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

வாகனங்களுக்குள்ளும், பொருட்களின் நடுவேயும் மறைத்துக் கொண்டு இவை கடத்தி வரப்படுகின்றன. இதனால் வாகனங்களும், பொருட்களும் தற்போது பலத்த சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

அண்மையில் தடை செய்யப்பட்ட பொருட்களான பற்றரி, வேல்டிங் கம்பி போன்றவற்றுடன் பெருமளவான போதைப் பொருட்களும் வேன் ஒன்றின் கதவுப் பகுதியில் மறைத்து வைத்து கொண்டுவரப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப் பொருளே அதிகளவில் கடத்திவரப்படுவதாக கூறப்படுகின்றது. கஞ்சா, அபின் போன்றவையும் குறைந்த அளவில் கொண்டுவரப்படுகின்றது.

இதனால் தற்போது இப்பகுதியில் போதைப் பொருள் பாவிப்போரின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருகின்றது.

அதிகமான இளைஞர்கள் இதனைப் பாவிப்பதில் முன் நிற்பதாக அறிய வருகின்றது. மன்னார் நகர் பகுதியிலுள்ளோர் அதிக விலை கொடுத்து இதனை வாங்கி நல்ல விலைக்கு விற்பனை செய்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

## திடீர் விலையேற்றத்தால் திகைப்பு!

### ஆளும் அணிக்குள் கசப்பு

அண்மையில் அரசாங்கம் மாவின் விலையையும் சீனியின் விலையையும் உயர்த்தியமையினால் ஆளும் கட்சிக்குள் கசப்புணர்வுகள் பூதாகாரமாகத் தலையெடுத்திருப்பதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன. அமைச்சரவையினருக்குக்கூட இத்திடீர் விலையேற்றம் பற்றி செய்தி ஊடகங்கள் மூலமாகத்தான் தெரிந்ததாம்.

திடீர் விலையேற்றம் காரணமாக பொது மக்கள் மத்தியில் பரவலான அதிருப்தி அலைகள் வீசுகின்றன. இதனால் வாக்காளர்களைச் சந்திக்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக ஆளும் கட்சி எம்.பீ.க்கள் குமுறுகின்றனர். இந்நாட்டின் பெரும்பாலான பாமர மக்களின் அன்றாட உணவாக பாணும் 'பிளேன் டீ'யும் இருப்பதனால் இத்திடீர் விலையேற்றம் அவர்களை வெகுவாகப் பாதிக்கும் சமாச்சாரமாகும் என்று அவர்கள் முறையிடுகின்றனர்.

ஆளும் கட்சிக்குள் அங்கம் வகிக்கும் சமசமாஜக் கட்சி, சிறிலங்கா மகாஜன பெரமுன, தேசபாலன ஜனதா விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகள் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றன.

நாட்டு மக்களை நேரடியாகப் பாதிக்கும் எத்தகைய முடிவையும் எடுப்பதற்கு முன்னர் அரசாங்கம் இக்கட்சிகளுடன் எந்த வகையிலும் தொடர்பு கொண்டு அபிப்பிராயம் கோருவதேயில்லையாம்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களில் தம்மைக் கலந்தாலோசிக்காமல் முடிவெடுப்பதனால் பாராளுமன்றத்தில் சட்ட மூலங்களுக்கான வாக்கெடுப்புகளின் போது, வாக்களிக்காமல் இருந்துவிடுவதே தமக்கு ஒரே வழி என்று இக் கட்சிகள் கருதுவதாகத் தெரிகிறது. தங்களுடைய இம் முடிவினை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு எழுத்து மூலம் அறிவிக்க உள்ளனவாம்.

## யாழில் படையினரின் தாக்குதல்

### டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடி

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளில் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக படையினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஆகஸ்ட் 16ம் திகதி நண்பகல் 12.30 மணியளவில் ரோந்து சென்ற படையினரைக் கண்ட இரண்டு புலிகள் தப்பியோடினர். பின்னர் அப்பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின்போது ரி-56 துப்பாக்கி 01, மகசீன் 01, ரவைகள் 26 என்பவை கைப்பற்றப்பட்டன.

அதேநாள் இடைக்காட்டில் புலிகளால் வைக்கப்பட்ட டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடியை கண்டுபிடித்த படையினர் அதனை அழித்தனர்.

16ம் திகதி பிற்பகல் 6.15 மணியளவில் குளாவத்தை பகுதியில் புலிகள் நடமாடுவதாகப் படையினருக்கு தகவல் கிடைத்தது. அங்கு விரைந்த படையினர் நடத்திய தேடுதலில் ரி.56 துப்பாக்கி- 01.கிரனைட்- 04, வயர்- 100 மீட்டர் என்பவற்றை கைப்பற்றினர். சந்தேகத்தின்பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

## இருவர் பலி

யாழ் குடாநாட்டில் சுதுமலை அம்மன் கோவிலடியில் புலிகளை எதிர்பார்த்து படையினர் பதுங்கியிருந்தனர். அப்போது அப்பாதை வழியாக வந்த இரண்டுபேர் டோர்ச் லைட் அடித்தனர். புலிகள்தான் சிக்னல் காட்டுகிறார்கள் என்று நினைத்தோ என்னவோ படையினர் சுட்டனர். துப்பாக்கிச் சூட்டில் இரண்டுபேரும் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் கடந்த 20ம் திகதி அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றது. அப்போது ஊரடங்கு அமுலில் இருந்தது.

மகாலிங்கம் உதயகுமார் (24)- சுதுமலை வடக்கு, ஏ.ரமேஷ்- தெல்லிப்பளை ஆகியோரே பலியானவர்களாவர். இருவரும் தொலைக்காட்சி பார்த்துவிட்டு வந்ததாக கூறப்படுகிறது.

## பாலியல் வன்முறைகளை நிறுத்தக் கோரிக்கை!

### ஜனாதிபதிக்கு ஆயிரக்கணக்கான தபாலட்டைகள்!

"விஜில் கோலிசன்" என்ற அமைப்பு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவுக்கு கடந்த 17.08.97ம் திகதி தொடக்கம் பொது மக்களுக்கூடாகவும், உதவி அமைப்புக்களுக்கூடாகவும் ஆயிரக்கணக்கான தபாலட்டைகளை அனுப்பிக்கொண்டிருக்கிறது. அத் தபாலட்டைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களுக்கு,

இலங்கை அரசாங்கப் படையினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் பாலியல் வன்முறை, கொலை மற்றும் சாட்சி சொல்ல முன்வருவோருக்கு விடுக்கப்படும் மிரட்டல் போன்றவை தொடர்பாக எங்களது ஆழ்ந்த கவலையையும் அக்கறையையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

எனவே, கீழே குறிப்பிட்டுள்ள அம்சங்களை உடனடியாக அமுல்படுத்தும்படி தங்களைத் தாழ்மையுடன் கோருகின்றோம்.

1. பெண்களுக்கெதிரான சகல வன்முறைகளையும் விசாரிப்பதற்கும், உரிய நடவடிக்கையெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் அனுபவமும் திறமையுமுள்ள பெண் மனித உரிமைவாதியொருவரைத் தலைவராகக் கொண்ட விசேஷ வழக்காடு மன்றமொன்று நியமிக்கப்படவேண்டும்.

2. அரச படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவரானாலும், அரச சட்டத்தரணியின் உதவி வழங்கப்படவேண்டும்.

3. அரசாங்கப் படையினரால் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படும்போது குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு பாதிக்கப்பட்ட பெண்ணின்மீது சுமத்தப்படாமல், குற்றஞ்சாட்டப்பட்டவரே தன்னை நிரபராதியென்று நிரூபிக்க விடப்படவேண்டும். இதற்கான சட்டமூலத் திருத்தம் செய்யப்படவேண்டும்," என்று கோரப்பட்டுள்ளது.

## புலிகளின் நிதிப் பொறுப்பாளர் சரண்!

### புதிய கட்டுப்பாடுகள் அமுல்!

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீப சில நாட்களுக்கு முன்னர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நிதிப் பொறுப்பாளர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரிடம் பெருந்தொகையான பணத்துடன் சரணடைந்தாரென்பதும், மேலும் ஒரு நிதிப் பொறுப்பாளர் மட்டக்களப்பு கொம்மாதுறையிலுள்ள பாதுகாப்புப் படையினரிடம் சரணடையத் தயாராக இருந்த சமயம் புலிகள் இயக்கத்தினரால் கைதானார் என்பதும் தெரிந்த விசயம்.

ஏற்கனவே விசேட அதிரடிப்படையினரிடம் புலிகள் இயக்க நிதிப் பொறுப்பாளர் சரணடைந்ததைத் தொடர்ந்து அவரது சகாக்களான மேலும் சிலர் சரணடையத் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சரணடைந்த நிதிப் பொறுப்பாளர் எங்கிருக்கின்றார் என்ற விபரம் இன்னமும் தெரிவிக்கப்படவில்லை. நிதிப் பொறுப்பாளர் படையினரிடம் சரணடைந்தபோது பொதுமக்களிடமிருந்து வசூலிப்புச் செய்த சுமார் 28 இலட்ச ரூபாவுக்கு அதிகமான தொகை அவரது கைவசம் இருந்ததாகவும் பரவலாகக் கூறப்படுகின்றது.

இது இப்படியிருக்க, புலிகள் இயக்கத்தினர் தமது ஆளுகைக்குள் உள்ள பகுதிகளுக்குச் சென்று வியாபாரம், விவசாயம், மீன்பிடி மற்றும் தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் மக்களுக்கு ஏற்கனவே முழுமையான அனுமதி வழங்கியிருந்தனர் என்பதும், புலிகள் இயக்கத்தினர் தமது தளங்கள் இருக்குமிடங்களைத் தாண்டியும் குறித்த சில முஸ்லிம்களை தொழிலுக்குச் சென்றுவர அனுமதித்திருந்தனர் என்பதும் தெரிந்ததே.

இக்காலப் பகுதியில் தொழில்களில் ஈடுபட்ட சில முஸ்லிம்கள் புலிகள் இயக்கத்தின் நிதிப் பொறுப்பாளர்கள் உட்பட பல உயர்மட்ட முக்கியஸ்தர்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தனர். அந்த வகையில் புலிகள் இயக்கத்தினர் சிலர் படையினரிடம் சரணடைவதற்கு தம்மிடம் நெருக்கமாகப் பழகிய முஸ்லிம்களின் உதவியை நாடியிருக்கக் கூடும் என்று புலிகள் இயக்கத்தினர் கருதுவதாகவும், அதனால் கடந்த ஆகஸ்ட் 19 ஆம் திகதி முதல் முஸ்லிம்கள் தமது ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் தொழிலுக்காகச் சென்று வருவது குறித்து புதிய அறிவித்தல்களை விடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. தங்களால் மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை குறித்த சில பகுதிகளைத் தாண்டி எந்தவொரு அலுவலுக்கும் வரக்கூடாது என்று கூறியதைத் தொடர்ந்து, கடந்த வாரம் சிறு அச்ச நிலை உருவானது.

இந்த அறிவித்தலினால் தாம் தொழிற்றுறைகளில் ஈடுபட்ட தமிழ் பகுதிகளில் பெருந்தொகையான பணக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்துள்ளதாகவும், அவற்றைப்பெற முடியாது போனால் தாம் பாதிக்கப்படும் நிலையிருப்பதாகவும் முஸ்லிம்கள் புலிகள் இயக்கத்தினரிடம் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை முடித்துக்கொள்ள அல்லது தங்களிடம் அறிவித்துத் தங்கள் மூலமாக முடித்துக்கொள்ள 5 நாட்கள் கால அவகாசம் வழங்கியதாகவும் கூறப்படுகின்றது. இதன்படி கடந்த ஆகஸ்ட் 25ம் திகதியுடன் அந்தக் கால அவகாசம் முடிவடைந்தது.

அதேவேளை புலிகள் இயக்கத்தினர் தமது பகுதிகளுக்கு வர வேண்டாம் என்று காலக்கெடு விதித்த காலப்பகுதியில் அப்பகுதிகளில் நிரந்தரமாக வசிக்கும் தமிழ்மக்களைத் தவிர, வேறுபகுதித் தமிழ்மக்கள் விடயத்திலும் கூடக் கட்டுப்பாடுகளை விதித்ததாகக் கூறப்படுகின்றது.

21.07.97 அன்று மட்டக்களப்பு சித்தாண்டியில் படையினர்மீதான புலிகளின் தாக்குதல் முயற்சி ஒன்று தோல்வியில் முடிந்தது தெரிந்ததே. 32 புலிகள் படையினரின் தாக்குதலில் பலியாகி இருந்தனர். அத்தாக்குதல் தோல்விக்கு காரணமானவர்கள்மீது புலிகளின் கிழக்கு மாகாண தலைமைப்பீடம் நடவடிக்கை எடுத்ததை அடுத்தே சில உறுப்பினர்கள் தப்பியோடவும், படையினரிடம் சரணடையவும் முற்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

## திருக்கடலூர் துப்பாக்கிச் சூடு!-படை அதிகாரி போதனை!

(சஞ்சீவன்)

திருக்கோணமலையில் உள்ள திருக்கடலூரில் 18.08.97 அன்று படையினரும், பொலிசாரும் கூட்டாக நடத்திய சுற்றிவளைப்பின்போது பொதுமகன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது உடலை பெறச் சென்ற உறவினர்களிடம் பலியானவர் ஒரு புலி என்று ஒப்புக்கொண்டு கையொப்பமிடுமாறு கோரப்பட்டது.

இதனையடுத்து திருக்கடலூர் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இப்பிரச்சனையில் ஈ.பி.டி.பியினர் தலையிட்டு தீர்த்துவைத்தனர்.

திருக்கடலூர் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும், தமது சொற்படி கேட்க மறுத்ததும் படையினருக்கும், பொலிசாருக்கும் கௌரவப் பிரச்சனையாக மாறிவிட்டது.

22.08.97 அன்று காலையில் திருக்கடலூர் வாசகசாலையில் படை அதிகாரி ஒருவரால் கூட்டம் நடத்தப்பட்டது. படை அதிகாரியுடன் புளொட் இயக்க முக்கியஸ்தர்களும் சென்றிருந்தனர்.

நடந்த சம்பவத்துக்காக மன்னிப்புக் கேட்ட படை அதிகாரி, அச் சம்பவத்தை அடுத்து பொதுமக்கள் நடந்துகொண்ட முறை சரியானதல்ல என்று அதிருப்தி தெரிவித்தார். "படையினரை பொதுமக்கள் தூஷித்து அவர்கள் கடமையைச் செய்யவிடாமல் தடுத்துள்ளனர். அச் சமயத்தில் நான் இங்கு இருந்திருந்தால் நிலமை விபரீதமாகியிருக்கும், கடும் நடவடிக்கை எடுத்திருப்பேன். அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் எவரும் என்னை ஒன்றும் செய்யமுடியாது," என்றும் படை அதிகாரி கூறினார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய புளொட் அமைப்பாளர் தமிழ்வாசன், "நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களுக்கும் தங்களுக்கும் ஒரு தொடர்புமில்லை" என்று படை அதிகாரி முன்பாக கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# ஊரின் பெயர் எழுதத் தெரியாத ஆசிரியர்கள்!

## பரீட்சை வினாத்தாளில் குளறுபடிகள்

(திருமலை நிருபர்)


2. பின்வரும் செய்யுளின் பொருளை வசன நடையில் தருக. அவற்றில் காணப்படும் அணிகளை விளக்குக.
அ. நாடிமடவன்னத்தை நல்ல மயிற்குழாய் மோடி வலைக்கின்ற தொப்பவே நீடிய நற்பைங் கூந்தல் வல்லியர் பற்றிக் கொடுபோற்று தங்கோவின் முன் வைத்தார் தாழ்ந்து.
ஆ. உறக்குந்துணையதோ ராலம் வித் தீண்டு இறப்ப நிழற்பயத் தாஅங் - கறப்பயனும் தான் சிறிதாயினும் தக்கார் கைப் பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்து விடும்.

முதூர் ஈச்சளம்பற்று பிரதேச மட்ட
இரண்டாந்தவணைப் பரீட்சை 1997

"மூதூர் ஈச்சிலம்பற்றுப் பிரதேச தமிழ் மாணவர்களிடமிருந்து தாய்த்தமிழைப் பிரித்து விடும் முயற்சியில் கல்விக் காரியாலயம் இறங்கியுள்ளதா? பெற்றோர் சொந்த மண்ணுக்கு அந்நியப்பட்டுப் போய் நிற்க, பிள்ளைகள் சொந்த மொழிக்கு அந்நியர்களாகப் போகட்டும்" என்ற எண்ணமா கல்விப் பகுதியாருக்கு?

இரண்டாந் தவணைக்குரிய பத்தாம் ஆண்டு தமிழ்மொழி வினாத்தாளைப் பார்த்தவர்கள் வினாத்தாளுடன் 'முரசு' நிருபரைச் சந்தித்துக் கேட்ட கேள்விகளே இவை:

மேற்படி வினாத்தாளில் பிரதேசத்தின் பெயர் பிழையாக எழுதப்பட்டிருக்கிறது. 'தவணை' என்பதற்குப் பதிலாக தவ'னை' என இரண்டு சுழி 'னகரம்' எழுதப்பட்டிருக்கிறது.

முதலாம் வினாவில் நான்கு தற்கூற்று வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் இவற்றுக்கு மேற்கோள் அடையாளங்கள் இடப்படவில்லை. அதுவுமல்லாமல் எழுத்துப் பிழைகளும் காணப்படுகின்றன.

இரண்டாவது வினாவில் நான்கு செய்யுள்கள் தரப்பட்டு பொருளை வசன நடையில் எழுதுமாறும், அணிகளை விளக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நான்கு செய்யுள்களும் செய்யுள் வடிவத்தில் எழுதப்படவில்லை என்பதுடன் ஒவ்வொரு செய்யுளிலும் தாராளமாக எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள் என்பன விடப்பட்டுள்ளன.

இத்தனைக்கும் தற்கூற்று, செய்யுள் என்பவை பாடப்புத்தகத்திலிருந்து பார்த்து எழுதப்பட்ட தரவுகளே என்பதும் குறிப்பிடத்தக்கது.

"ஊரின் பெயரை எழுதத் தெரியாதவர்களும், பார்த்து எழுதக் கூடக் பழகாதவர்களும் ஆசிரியர்களாக இருந்து சம்பளம் எடுக்கட்டும் பரவாயில்லை. ஆனால் அடுத்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்களை ஏன் இப்படிப் பாழடிக்க வேண்டும்? தானே படிக்காத நிலையில் பிறருக்குப் பரீட்சை வைப்பதில் என்ன நியாயம்?" என்று அந்தப்பகுதி மக்கள் பொரிந்து தள்ளுகிறார்கள்.

கல்விச் செயலாளர் கவனத்திற் கொள்வாரா?

# ஜப்பானிய அம்பியூலன்ஸ் வண்டி அன்பளிப்பு!

"பதுளை- பசறைத் தேர்தல் தொகுதி மக்களுக்கு முறையான சுகாதார வசதிகள் காலங்காலமாக இல்லாதிருப்பதால் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். முக்கியமாக பசறை, லுணுகலைப் பகுதித் தோட்டத் தொழிலாள மக்கள் சுகாதார, சௌக்கிய நலன்கள் இல்லாது கஷ்டப்படுகிறார்கள். இதன் காரணமாக ஜப்பானைச் சேர்ந்த 'சகுரா வங்கா' பல்கலைக் கழகத்தைப் பசறைப் பகுதியிலுள்ள சுகாதார நலன்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்ட தற்கிணங்க அவர்கள் சுமார் 20 இலட்ச ரூபாவுக்கு மேற்பட்ட, பெறுமதியான அம்பியூலன்ஸ் வண்டியொன்றை அன்பளிப்புச் செய்திருக்கிறார்கள். இவ்வுதவி 'இக்கி மாச்சி' நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டிருக்கிறது. பசறை, லுணுகலைப் பகுதி நோயாளிகளை பதுளைக்குக் கொண்டு செல்வதில் இதுகாலவரை இருந்து வந்த குறை தற்போது நீங்கியுள்ளது.

அத்துடன் 'இக்கி மாச்சி' நிறுவனம் இப்பகுதிகளிலுள்ள பாடசாலை நூலக அபிவிருத்திக்கு 80 ஆயிரம் ரூபாவையும், பாடசாலை இசைக் கருவிகளுக்காக 84 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளது. இவ்வுதவிகளை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்வதன் மூலம் மேற்படி ஜப்பானிய நிறுவனத்திற்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாவோம்" என்று ஊவா மாகாண சபை உறுப்பினர் அமரா மல்வத்த பீரிஸ் சமீபத்தில் பசறைப் பிரதேச சபையில் நடந்த விசேட கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார்.

இக்கூட்டத்தில் பசறைப் பிரதேச சபை உறுப்பினர் சனத் சிசிர ரஞ்சித், தேசிய இளைஞர் நிலையத்தின் பசறைப் பகுதித் தலைவர் ஆர். சமன், செயலாளர் செல்வி எஸ். சுவர்ணலதா ஆகியோரும் பங்கு பற்றினர்.

# மீளக் குடியமர்த்துமாறு பிரிகேடியர் பணிப்பு!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லையிலுள்ள வடமுனை, ஊத்துச்சேனை போன்ற பகுதிகளிலிருந்து, கடந்த 1990ல் இடம்பெயர்ந்து தற்சமயம் வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவில் அகதி முகாம்களிலும் உறவினர் நண்பர் வீடுகளிலும் தங்கியுள்ள சுமார் 435 குடும்பங்களை அவர்கள் இடம் பெயர்ந்து வந்த அதே இடத்தில் மீளக் குடியமர்த்துமாறு வாழைச்சேனைப் பகுதி பிரிகேடியர் கேர்ணல் சில்வா பிரதேச செயலாளரைக் கேட்டுள்ளார்.

இவ் அகதிக் குடும்பங்கள் முன்னர் வசித்த பகுதி தற்சமயம் பாதுகாப்புக் கண்காணிப்பின் கீழ் வந்துள்ளதாகவும் அதனாலேயே இந்நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறும் பிரிகேடியர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் குறித்த பகுதிகள் படையினரின் கண்காணிப்பிற்கு அப்பாற்பட்டு பல மைல் தூரத்தில் அமைந்துள்ள புலிகளின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மீள் குடியேற்றம் சம்பந்தமாகப் பிரதேச செயலாளர் திரு.கே. கதிர்காமநாதன் அகதிக் குடும்பங்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது "தங்களுக்குரிய அத்தியாவசியத் தேவைகளை முதலில் நிறைவு செய்து தரும் பட்சத்தில் மீள் குடியேற்றத்திற்குத் தாம் சம்மதிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து, உணவு விநியோகம், கல்வி, சுகாதாரம் என்பனவற்றை வாய்ச்சொல்லளவில் செய்து தருவதாக உறுதியளிக்காது, செயற்படுத்தித் தர ஆவன செய்யவேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். ஏற்கனவே வாகரைப் பகுதிக்கான உணவு விநியோகம், பஸ் போக்குவரத்து என்பன நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். இதுபோன்ற நிர்க்கதி தமக்கும் ஏற்படக்கூடாது" என அகதிக்குடும்பங்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இவ்விடயங்கள் குறித்து பிரதேச செயலாளர் விரிவான அறிக்கையொன்றை பிரிகேடியருக்கும், அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

# விளம்பரம் உடனடி ரத்து

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் 2.8.97 நாளிதழ்களில் செய்யப்பட்ட சுதேச வைத்தியத்துறைக்கான மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கான விளம்பரத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு திருகோணமலை ஆயுள்வேத பாதுகாப்புச் சபை கோரியுள்ளது.

விளம்பரப்படுத்தப்பட்டுள்ள கல்வித் தகைமைகளில் தெளிவின்மை தற்போதைய ஆயுள்வேதப் பணிப்பாளருடன் கலந்தாலோசியாமை, ஆயுள்வேத வைத்திய சேவை யாப்பு தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்ற வேளையில், அவசரமாக விளம்பரம் செய்தமை ஆகிய காரணங்களை முன் வைத்து இதனை இரத்துச் செய்யும்படி ஆளுநரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இவற்றின் பிரதிகள் வடக்கு-கிழக்கு பிரதம செயலர், பிரதிப் பிரதம செயலர், சுகாதார அமைச்சின் செயலர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மூதூர் மாவட்ட வைத்தியசாலையில் எம்.பி.பி.எஸ்.தர வைத்தியர்களது தேவை குறித்து சமாதான நீதவானும் சமூகசேவகருமான திரு.எஸ். குணநாயகம் அவர்கள் சுகாதார தேசிய வைத்திய அமைச்சுடன் தொடர்பு கொண்டதற்கிணங்க இரண்டு எம்.பி.பி.எஸ். தர வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக மேற்படி அமைச்சு அறிவித்துள்ளது.

# இருவர் பலி

மன்னார் உயிலங்குளம் பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து, படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினார்கள். ஷெல் வீச்சில் பொதுமக்கள் இருவர் பலியானார்கள்.

நிக்கலஸ் அன்ரனி (22) பேதுறு செபமாலை (34) ஆகியோரே பலியானவர்களாவர்.

# தமிழில் கிரிக்கெட் வர்ணனை?

சிங்கள வர்ணனையாளரின் அருமையான வர்ணனையால் இலட்சக் கணக்கானோர் ஈர்க்கப்பட்டு வானொலிப் பெட்டியை மொய்ப்பது சாதாரண காட்சியாகும்!

ஆனால் இடையிடையே நம்மவர் வருகிறாரே- சனத் அடித்த சிக்சர் பந்தை இந்திய வீரர்கள் தேடுவதுபோல் சொற்களை தேடித் தேடி, தட்டுத் தடுமாறி- "போங்க கிரிக்கெட் தமிழ் வர்ணனையே வேண்டாம்!" என்று போகிறது.

"தமிழிலும் அறிவிப்பு வேண்டும்" என்று பிடிவாதம் பிடிப்பவர்கள் அறிவிப்பாளர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கும்படி வானொலி நிலைய அதிகாரியை தூண்டினால் என்ன? அறிவிப்பாளர்களும் கேட்போரை மகிழ்விக்கும் வண்ணம் சிறப்பாக வர்ணனை செய்ய முயன்றால் என்ன?

இதேபோல் ஒரு சில ஆண், பெண் செய்தி வாசிப்போர் ரூபவாஹினியில் ஏதோ பாடசாலை மாணவன் வாசிப்பதுபோல் சொற்களை சிதைத்தும், விட்டும், நகைப்பிற்கிடமாக மாற்றியும் வாசித்து செய்தி கேட்போரையே சலிப்படையச் செய்வதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது. நன்றி.

ஏ. மரியகுசை, ஹட்டன்.

# அம்மனிடம் திருட்டு


யாழ் குடாநாட்டில் திருட்டுக் குற்றங்கள் அதிகரித்து வருவது தெரிந்ததே. திருடர்கள் கோயில்களிலும் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

யாழ்ப்பாணம் கந்தர் மடம் பகுதியில் உள்ள அம்மன் ஆலயம் ஒன்றில் விக்கிரகத்தில் இருந்த தங்கச்சங்கிலி களவாடப்பட்டுள்ளது. அங்கிருந்த விநாயகர் விக்கிரகத்தை புரட்டி கீழே இருந்த இயந்திரத் தகடையும் எடுத்துச் சென்றுள்ளனர். கோயில் உண்டியல் ஒன்றும் உடைக்கப்பட்டுள்ளது.

## விளம்பரப் பகுதி


**UNION**
யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு. கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

**மட்டக்களப்பு மாந்திரீகம்**
உங்கள் நிறைவேறாத பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சியும், வெற்றியும் பெறுவதற்கு மட்டக்களப்பு மாந்திரீக சக்தி உதவி புரியும். பரம்பரை வைத்திய நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் விபரங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியம் வெளியாகாது.
DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD, NINTAVUR-21 SRI LANKA.



**மலையாள மாந்திரிகம்**
மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோனாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி. மே பில்ட் ரோட், கொழும்பு-13
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி Fax-00941342464 Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்- 342463-344831

**சித்தர் மாந்திரீகம்**
அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA, 8/2, SRI SIDDARTHA ROAD, KIRILAPONE, COLOMBO-5. TELE PHONE: 823465. (பொலிஸ் நிலைய எதிரில்)
21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20317
வியாழன் விடுமுறை

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6.
T.P. 586218

**AFTER A/L WHAT'S NEXT ?**
SPECIALLY DESIGNED FOR SCHOOL LEAVERS

DIPLOMA IN COMPUTER STUDIES
Information Technology, Dos, Windows, Word, Excel, Programming Techniques, Turbo Pascal, Dbase & Clipper
காலம் : 3 மாதம் கட்டணம் : Rs 4,500/-

MICROSOFT OFFICE
Information Technology, Dos, Windows, Word, Excel, Powerpoint, Access
காலம் : 3 மாதம் கட்டணம் : Rs 6,000/-

COMPUTERISED ACCOUNTING
Information Technology, Dos, Windows, Ms Excel, Any One Of The Following Accounting Packages ACCPAC PLUS, QUICK BOOKS, M.Y.O.B
காலம் : 3 மாதம் கட்டணம் : Rs 5,000/-
U.K. CERTIFICATE WILL BE ISSUED ON REQUEST

INSTITUTE OF INFORMATION SYSTEMS
IIS 4C, First Floor, Fussels Lane, Wellawatte. Opposite Wellawatte Market. T.P : 074-517390

**தொழில் வாய்ப்புக்கள் நிறைந்த கம்ப்யூட்டர் பயிற்சி நெறி**
தேசிய (NCCA, NIBM) சர்வதேச (ACS, IDPM) கம்பியூட்டர் பயிற்சி நெறிகளுக்கு இது ஓர் முன்பள்ளியாகும்.
மொழி மூலம் : தமிழ், ஆங்கிலம்.
Certificate In Computer Studies
காலம் : 3 மாதம் கட்டணம் : 1950.00
விண்ணப்ப முடிவு திகதி : 15-09-1997.
Certificate In Typesetting
காலம் : 3 மாதம் கட்டணம் : 4000.00
Internet & E-Mail Training Course
காலம் : 1 மாதம் கட்டணம் : 950.00
எமது ஏனைய சேவைகள் :-
- தவணைக் கட்டண வசதிகள் உள்ளன.
- கம்பியூட்டர் விற்பனை, பராமறித்தல், பழுது பார்த்தல்.
தரமான சேவை தயவான கட்டணம்

MICS 36, Second Cross Street, Puttalam. ☎ 032 - 65370. E-Mail : Infak@slt.lk


## 31ம் நாள் நினைவாஞ்சலியும் நன்றி-நவிலலும்

மலர்வு 05 - 03 - 1932



உதிர்வு 28 - 07 - 1997

**திருமதி பூமணி கனகரட்ணம்**

[யாழ் வண்ணார்பண்ணை-லோட்டஸ் ரோடு]

குடும்ப விளக்காக ஒளி வீசி நின்றெம்மை
இடும்பை களைந்து நிதம் காத்து நின்ற தெய்வமே!
உடம்பைத் துறந்து மறைந்தோடி விட்டாலும்
திடம் கொண்டுமை நித்தம் துதிசெய்ய மறவோமே!

அன்னாரின் மறைவையொட்டிய இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் வேறு பல ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் எங்கள் நன்றியறிதலை இத்தால் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எங்கள் தெய்வம் அமரத்துவமடைந்த 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 27.08.1997 புதன்கிழமை கொழும்பு-கொட்டாஞ்சேனை நியுஹம் சதுக்கம் 32ம் இலக்க இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், ஆகிய அனைவருக்கும் எமது நன்றியைக் கூறிக்கொள்கிறோம்.

இவ்வண்ணம்,
நா. கனகரட்ணம் (கணவன்),
மகன்மார், மகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.
தகவல்:- க. தனபாலசிங்கம்
(உரிமையாளர்:- ராஜன் ஐஸ்வர்யா இன், லொட்ஜ்)

ஐ. சின்னத்தம்பி.



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வன்னிக் கள நகர்வும் அதிர்வுகளும்!

## 120 மணி நேரம்+20 ஆயிரம் படைகள்= ஒரு கிலோ மீற்றர்

நாரதர்

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை ஆரம்பமான பின்னர் செவ்வாய் தினங்களில்தான் போர் வாய் அடிக்கடி திறக்கிறது.

'ஜயசிக்குறுய்' ஆரம்பித்ததும் செவ்வாய்க்கிழமை. புலிகள் 'ஜயசிக்குறுய்' படைகள் மீது தாண்டிக்குளத்தில் முதலாவது அழித்தொழிப்பு சமர் நடத்தியதும் செவ்வாய்க்கிழமைதான். புலிகளின் இரண்டாவது அழித்தொழிப்பு சமர் ஓமந்தையில் நடத்தப்பட்டதும் செவ்வாய்க்கிழமைதான்.

புளியங்குளத்தை கைப்பற்ற 'ஜயசிக்குறுய்' மறுபடி கடும் சண்டையை தொடங்கியதும் ஆகஸ்ட் 19 செவ்வாய்க்கிழமைதான்.

பருவமழை காலத்தின் முன்பாக மற்றொரு முன்னேற்ற முயற்சியில் படையினர் இறங்குவர் என்று கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம். ஆகஸ்ட் 19 அதிகாலை படையினரின் நகர்வு முயற்சி இரு முனைகளில் ஆரம்பமானது. சில செய்திகளில் பல முனைகள் என்று கூறப்பட்டாலும் பிரதான முனைகள் இரண்டுதான். அவர்களுக்குள் கிளையாக உள்ள முனைகளே ஏனையவை.

வவுனியா-யாழ்சாலையில் நிலைகொண்டிருக்கும் 55வது படைப்பிரிவும், நெடுங்கேணியில் நிலைகொண்டிருக்கும் 53வது படைபிரிவும்தான் இரு முனைகளில் முன்னேறத் தொடங்கின.

புலிகளின் எதிர்ச் சமர் முனைப்பை பரவலாக்கி அதன் வீரியத்தை குறைப்பதற்காகவே ஒரே நேரத்தில் இரு பிரதான முனைகளால் முன்னேறும் முயற்சியை படையினர் மேற்கொள்கின்றனர்.

விமானப்படை உதவியோடு, தரை நகர்வுக்கு டாங்கிகளும், கவசவாகனங்களும் கவசமாக முன்னேசெல்ல, ஆட்டிலெறி ஷெல்களை புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி மழையெனப் பொழிந்தபடி ஜயசிக்குறுய் படைகள் முன்னேறத் தொடங்கின.

நெடுங்கேணியில் உள்ள 53வது படைப்பிரிவு புளியங்குளத்தை கைப்பற்ற வேண்டுமானால் புளியங்குளம் நெடுங்கேணி சாலை வழியாக 20 கிலோமீட்டர் தூரத்தை கடந்தாகவேண்டும்.

புளியங்குளம் அருகே தரித்து நிற்கும் 55வது படைப்பிரிவு புளியங்குளத்தை கைப்பற்றுவதானால் மேலும் மூன்று, நாலு கிலோமீட்டர்கள் முன்னேறினால் போதும். புளியங்குளம் கைக்கு வந்துவிடும்.

**இரு பிரதான முனைகளில் படையினரின் பிரதான முன்னேற்றம் அமைந்திருந்தாலும் 55வது படைப்பிரிவு மூலம் புளியங்குளத்தை கைப்பற்றுவதே ஆகஸ்ட் 19ம் திகதி ஆரம்பமான சண்டையில் முக்கிய இலக்காக அமைந்திருந்தது.**

55வது படைப்பிரிவு மீது புலிகள் ஒன்றுதிரண்ட எதிர்ச்சமரை நடத்த முடியாதவாறு, புலிகளின் அணிகளில் ஒருபகுதியை திசைதிருப்பி சண்டையிடுவதுதான் நெடுங்கேணியில் இருந்து முன்னேற முயன்ற 53வது படைப்பிரிவின் நோக்கமாக இருந்தது.

புலிகள் இரண்டு விதமாக எதிர்ச்சமர் தொடுத்தனர். ஒன்று; தமது பாதுகாப்பு அரண்களில் எட்டத்தில் இருந்தபடி எறிகணை வீச்சு நடத்துவது. இரண்டு; முன்னேறும் படையினரை பக்கவாட்டில் நெருங்கி தாக்குவது.

நெடுங்கேணியில் இருந்து முன்னேறிய 53வது படைப்பிரிவை நோக்கி எறிகணை வீச்சையே புலிகள் பிரதானமாக நடத்தினார்கள். அதனால் புலிகளின் அணிகளை பெருமளவில் திசை திருப்பி வைத்திருக்கும் நோக்கம் ஈடேறவில்லை.

படையினரின் பிரதான இலக்கு புளியங்குளத்தை கைப்பற்றுவதுதான் என்பதை கணிப்பிட்டு தமது பிரதான எதிர்ச்சமரை 55வது படைப்பிரிவுக்கு எதிராக புலிகள் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

புளியங்குளத்திலும், புளியங்குளத்துக்கு அப்பாலும் உள்ள புலிகளின் பாதுகாப்பு அரண்களை இனம் கண்டு தாக்குவது விமானப் படையினருக்கு கடினமாக இருக்கிறது. நன்கு உருமறைப்புச் செய்யப்பட்டதும், குண்டுவீச்சுக்களையும், ஷெல் வீச்சுக்களையும் தாங்கி நிற்கக்கூடியதுமான பதுங்கு நிலைகளாகவும் அவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் படையினரின் முன்னேற்றத்துக்கு டாங்கிகளும், ஆட்டிலெறி வீச்சுக்களுமே பிரதான உபயோகமாக இருந்தன.

ஆனால் வன்னிக்கள நிலவரம் முற்றிலும் மாறாக இருக்கிறது. படையிரின் பிரதான பலத்தை உணர்ந்து அதில் இருந்து தற்காப்புத் தேடும் பாதுகாப்பு அரண்களையும், உபாயங்களையும் புலிகள் ஏற்பாடு செய்துவிட்டனர்.

படையினரின் விமானக் குண்டுவீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் மத்தியிலும் புலிகளின் ஷெல்கள் படையினரை நோக்கி பறந்து வந்து கொண்டிருந்தன.

படையினர் நகரும் களத்தை இனம் கண்டு புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தக்கூடியதாகவும், புலிகளின் பதுங்கு நிலைகளை அறிந்து படையினர் பதிலடி நடத்த முடியாதளவுக்கும் கள நிலவரம் அமைந்திருந்தது.

ஆட்டிலெறிகளைவிட மோட்டார் பீரங்கிகளையே புலிகள் பெருமளவில் பயன்படுத்துகிறார்கள். சரமாரியாக விழுந்து வெடித்த ஷெல்களால் படையினர் பலியாகியும், காயமடைந்த நிலையில் நகர்வு மந்த நிலையை அடைந்தது.

**அதேநேரம் புலிகளின் சிறப்புப் படையணி முன்னேறிய படையினரை நோக்கி மேற்கு பக்கமுள்ள பாலமோட்டை காட்டுப் பகுதியில் இருந்து பாய்ச்சல் நடத்தியது.**

**சண்டை தொடங்கிய முதல் நாளன்றுதான் இப் பாய்ச்சல் நடத்தப்பட்டது. டாங்கிகளின் பாதுகாப்போடு முன்னேறிக் கொண்டிருந்தனர் படையினர்.**

முதலில் பதுங்கு நிலையில் இருந்து கொண்டு டாங்கிகளை குறிவைத்து டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களான ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர் மற்றும் டாங்கி எதிர்ப்பு கிரனேட் லோஞ்சர் என்பவற்றால் புலிகள் தாக்கினார்கள்.

டாங்கிகள் வெடித்து சிதறியதும் பின்னால் வந்த படையினர் பலர் பலியாகினர். ஏனையோர் பதுங்கு நிலை எடுத்தனர். அந்த அதிர்வு ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து படையினர் மீள முன்னரே புலிகளின் அணிகள் முன்னேறித் தாக்கத் தொடங்கின.

புளியங்குளம் நோக்கி நகர்ந்த 55வது படைப்பிரிவின் முகப்பகுதியில் நடத்தப்பட்ட புலிகளின் பதிலடியாக இது அமைந்தது.

படையினரும் புலிகளின் அணிகளை நோக்கி தாக்கத் தொடங்கினார்கள். எனினும் டாங்கிகள் வெடித்த அதிர்வால் ஏற்பட்ட கால அவகாசம் புலிகளின் அணிகளுக்கு சாதகமாக அமைந்தது.

படையினர் பின்னடைந்து செல்ல புலிகள் பலியான படையினரின் எட்டு உடல்களையும், பலியான தமது உறுப்பினர்களின் உடல்களையும் தூக்கிக்கொண்டு தமது அரண்களுக்குச் சென்றனர்.

இந்தச் சண்டையில் படையினரின் செய்திப்படி 29 படையினர் வரை பலியாகினர். நூறுபேர் வரை காயமடைந்தனர். சீனத் தயாரிப்பான ரி 56 ரக யுத்த டாங்கிகள் இரண்டு பலத்த சேதத்துக்கு உள்ளாகின. மேலும் இரண்டு டாங்கிகள் முற்றாக அழிந்தன. படையினர் கைவிட்டுச் சென்ற ரி.வை.எஸ்.73 எம்.எம். துப்பாக்கி பொருத்தப்பட்ட துருப்புக் காவி கவச வாகனம் ஒன்றை புலிகள் எடுத்துச் சென்றனர்.

இச் சண்டையில் தமது தரப்பில் ஏழுபேர் பலியானதாக புலிகள் தெரிவித்தனர்.

ஆகஸ்ட் 19ம் திகதி நடைபெற்ற இந்த பாரிய சண்டை தொடர்பாக படை வட்டாரங்களில் இருந்து முன்னுக்குப் பின் முரணான செய்திகளே கிடைக்கப்பெற்றன.


முதல்நாள் சண்டையில் தமது தரப்பில் 7 படையினர் பலியானதாகவும், புலிகள் தரப்பில் 50 பேர் பலியானதாகவும் படையினர் முதலில் அறிவித்தனர். **புலிகள் படையினரின் எட்டு உடல்களை எடுத்துச் சென்றிருக்க படையினரோ 7 பேர் மட்டுமே பலியானதாக அறிவித்தது சரியான தரவாக அமையவில்லை. பின்னர் தமது தரப்பில் பலியானோர் எண்ணிக்கை அதிகம் என்பதை படையினரின் செய்தி தெரிவித்தது.**

புலிகளின் தரப்பு இழப்பை தமது தரப்பு இழப்பைவிட அதிகமாகக் கூறிவிட்டே படையினர் தமது தரப்பு இழப்பை கூறுவது வாடிக்கையாக இருக்கிறது.

**புலிகளின் வானொலியை இடைமறித்துக் கேட்டதாக படைச் செய்திகளில் அடிக்கடி கூறப்படுகிறது. தொலைத் தொடர்பு சாதனத்தையும் வானொலி என்று அழைப்பது உண்டு. அதேநேரம் புலிகளின் குரல் வானொலியும் வன்னியில் இருந்து ஒலிபரப்பாகிறது.**

புலிகளின் குரலை இடைமறித்துக் கேட்கத் தேவையில்லை. யாவரும் கேட்பதற்காக பகிரங்கமாகவே ஒலிபரப்பாகிறது. ஆனால் புலிகளின் குரல் வானொலியில் முதல் நாள் சண்டையில் 7 பேர் தமது தரப்பில் பலியானதாகவே புலிகள் அறிவித்தனர்.

தொலைத் தொடர்பு சாதனத்தின் ஊடாக தமது இழப்பு விபரங்களையோ இரகசிய செய்திகளையோ புலிகள் பேசிக் கொள்ளும் தேவை இருக்காது. ஏனெனில் வன்னியில்தான் தலைமை இருக்கிறது. நேரடியாகவே இரகசியமான செய்திகளை சொல்லிக்கொள்ள முடியும்.




**புலிகளின் குரல் வானொலி வவுனியா நகரிலும் கேட்கிறது. வவுனியா நகரில் உள்ள செய்தியாளர்கள் அதனை செவிமடுக்கின்றனர். அதனால்தான் எந்த வானொலி என்று சொல்லாமல் புலிகளின் வானொலியை இடைமறித்துக் கேட்டோம் என்று புத்திசாலித்தனமாக பொதுவாக அறிவித்து வருகின்றனர்.**

புலிகளின் தரப்பு இரகசிய செய்திகள் மற்றும் அவர்களது நகர்வுகளை படையினர் அறியமுடியாத காரணத்தால்தான் கிபீர் விமானத்தை நோக்கி ஏவப்பட்டது சாம் 7 ஏவுகணையா? ஸ்ரிஞ்சர் ஏவுகணையா, அல்லது விமான எதிர்ப்புத் துப்பாக்கியின் தோட்டாவா என்பதை அறியமுடியாமல் வெளிநாட்டு நிபுணர்களை அழைக்கவேண்டியிருக்கிறது.

படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விவரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை என்று சிங்கள, ஆங்கில பத்திரிகையாளர்களை குற்றம் சாட்ட தொடங்கியுள்ளனர்.

துருப்புக்காவி வாகனத்தையும், படையினரின் உடல்களையும் முதல்நாள் சண்டையில் புலிகள் கொண்டு சென்றுள்ளனர்.

**புலிகள் தரப்பில் 50 பேர் பலியானதாகக் கூறியும் புலிகளின் ஒரு உடலைக்கூட படையினர் கைப்பற்றவில்லை. இது ஒன்றே புளியங்குளத்தில் முதல் நாள் சண்டைக்கள நிலவரத்தை ஊகிக்க போதுமானதாக இருக்கிறது.**

இரண்டாம் நாள் புதன்கிழமை மறுபடியும் 'ஜயசிக்குறுய்' படையினர் இரு முனைகளில் நகர்வை தொடங்கினர். புளியங்குளத்தின் மத்திய பகுதியை நோக்கி 55வது படையணி நகரத் தொடங்கியது.

நன்கு அரண்செய்யப்பட்ட நிலைகளில் இருந்து புலிகள் எறிகணைகளை ஏவத் தொடங்கினர். முன்னேறிய டாங்கிகள்மீது டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களால் புலிகள் தாக்கியதில் மூன்று டாங்கிகள் சேதமடைந்தன. ஒரு டாங்கி முற்றாக அழிக்கப்பட்டதாக புலிகளின் தகவல் தெரிவிக்கிறது.

இருநாள், சண்டையிலும் மொத்தம் ஏழு டாங்கிகள் சேதமடைந்தும், தகர்க்கப்பட்டும் பயனற்றுப் போயின. ஒரு யுத்த டாங்கியின் விலை கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய்களாகும். சற்று பழைய ரக டாங்கிகள் என்பதால் இந்த விலை.

இரண்டாம் நாள் மோதலில் புலிகள் தரப்பில் 19 பேர் பலியானார்கள். படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக சரியான தரவுகள் பெற முடியவில்லை.

இரண்டாம் நாள் மோதலில் 205 படையினர் காயமடைந்து கொழும்பு, அநுராதபுரம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். அன்று முழுவதும் காயமடைந்த படையினரை ஏற்றி இறக்கும் பணியில் ஆம்புலன்ஸ் வண்டிகள் வவுனியாவில் ஓடித்திரிந்தன.

இரண்டுநாள் கடும் சண்டையின் பின்னர் படையினரின் நகர்வு மந்தமாக இருந்தது. முதல்நாள் சண்டையில் கிபீர் விமானம் மீது புலிகள் ஏவுகணைத் தாக்குதல் தொடுத்தனர் என்று கருதப்பட்டதால், விமானப்படை விமானங்களை முன்புபோல முழுவீச்சில் பயன்படுத்த தயங்கினார்கள். தாழப் பறந்து குண்டுவீசினால் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்று அஞ்சப்பட்டது.

டாங்கிகளை நம்பி முன்னேறும் உபாயத்தையும் புலிகளின் டாங்கி எதிர்ப்பு அணியினர் எதிர்கொள்ளத் தொடங்கியிருப்பதால் படையினரின் முன்னேற்றம் எதிர்பார்த்தளவு விரைவு பெறவில்லை.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு நாட்களும் சண்டை உக்கிரமாக தொடர்ந்தது. வெள்ளியன்று தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து புளியங்குளம் ரயில் நிலையத்தை படையினர் அண்மித்தனர். சனியன்று சிறு மோதல்கள் இடம்பெற்றன.

புளியங்குளம் ரயில் நிலையம் புளியங்குளத்தின் நகருக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ளது. புளியங்குளம் மத்திய பகுதியில் இருக்கிறது பஸ் நிலையம். அதுதான் மத்திய பகுதி. ரயில் நிலையத்தில் இருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ளது புளியங்குளம் நகரம்.

**வெள்ளியன்று புளியங்குளம் ரயில் நிலையத்தை அண்மிக்கும் நகர்வுக்காக பின்னரங்க படைகளையும் முன்னே நகர்த்தி பலத்தை ஒன்று குவிக்கும் தேவை ஏற்பட்டது. படையினரின் உக்கிரமான நகர்வை அவதானித்த புலிகள் தமது அணிகளை பின்னெடுத்துவிட்டு, மற்றொரு உபாயம் வகுத்தனர்.**

**முன்னேறிய படையினரின் வயிற்றுப்பக்கமான ஓமந்தை படை நிலைகள்மீது புலிகளின் சிறப்புப் படையணிகள் பலத்த தாக்குதல் தொடுத்தன. வெள்ளியன்று இரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.**

இதனால் படையினருக்கு ஓமந்தை பாதுகாப்பையும் பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் முன்னே நகர்ந்தால் புலிகளின் அணிகள் தமது பின்புறமாக சுற்றிவந்து தாக்கலாம் என்பதால் படையினர் சண்டையை நிறுத்தினர்.

நகரும் படையணிகளை எதிர்ச்சமர் மூலம் தடுத்து நிறுத்தல்; நிலைகொண்டுள்ள படையினர் மீது திடீர் தாக்குதல் என்னும் இரு உபாயங்களை புலிகள் பின்பற்றுவதால், முன்னேறவும் வேண்டும், பின்னரங்க நிலைகளை பாதுகாக்கவும் வேண்டும் என்றும் இரட்டைச் சுமையை படையினர் தாங்க வேண்டியுள்ளது.

ஆகஸ்ட் 19ம் திகதி ஆரம்பித்து 5 நாட்கள் மொத்தம் 120 மணிநேரங்கள் நடைபெற்ற சண்டையில் தாம் முன்னர் நிலைகொண்டிருந்த பகுதியில் இருந்து ஆகக்கூடியது ஒரு கிலோமீட்டர் தூரம்வரைதான் 55வது படைப்பிரிவு முன்னேறியுள்ளது. நெடுங்கேணியில் இருந்து 53வது படைப்பிரிவு முன்னேற இயலவில்லை.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தொடங்கப்பட்டு ஆகஸ்ட் 27ம் திகதியுடன் 107 நாட்களாகிவிட்டன. படையினர் முன்னேறிச் செல்வதற்காக இதுவரை நடத்தப்பட்ட சமரில் புளியங்குளச் சமர்தான் பாரியதாகும். உக்கிரமும் வெகு அதிகம்.

**தரைப் படைக்கல பலம், வான் படைப் பலம், அதிகூடிய ஆட்பலம் என்பவற்றுடன் நகரும் மரபுப் படையணி கெரில்லாப் படையணியிடம் இருந்து ஒரு கிலோமீட்டர் பகுதியை கைப்பற்ற ஐந்து நாட்கள் சண்டையிட நேர்ந்துள்ளது.**

ஐந்துநாள் சண்டையில் இரு தரப்பிலுமாக 418 பேர் பலி என்று பாதுகாப்பு படை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. தமது தரப்பு எண்ணிக்கை எத்தனை என்று தனியாக குறிப்பிடாமல் படைத்தரப்பு செய்தி தெரிவித்திருப்பது அவர்கள் தரப்பில் இழப்பு அதிகம் என்பதையே உணர்த்துகிறது.

புலிகள் தரப்பு இழப்பு என்று ஐந்துநாள் சண்டையில் தினமும் படையினர் அறிவித்த எண்ணிக்கையை கழித்துப் பார்த்தால்கூட, 418 பேரில் பலியான படையினர் எண்ணிக்கை 150 பேர்வரை வருகிறது. இதுதவிர 400 படையினர்வரை காயமடைந்துள்ளனர்.

**புலிகளின் செய்திப்படி ஐந்துநாள் சண்டையில் 79 புலிகள்தான் பலியாகி உள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**படையினர் கூற்றுப்படி 250 புலிகள் வரை பலியாகி இருந்தால் குறிப்பிட்ட சண்டை நடந்த முனைகளில் இருந்து புலிகள் பின்வாங்கியிருக்க வேண்டும். தமது உடல்களை எடுத்துச் செல்லவும் சந்தர்ப்பம் இருந்திருக்காது. தமது தரப்பில் இழப்பு சிறிதாகவும் புலிகள் தரப்பு இழப்பு பாரியதாகவும் உள்ள போர்முனையில் ஒரு கிலோமீட்டர் வரைதான் படையினரால் முன்னேற முடிந்ததா?**

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புலிகள் தரப்பில் இரண்டாயிரம் பேர் வரை பலியானதாகவும் படைத் தரப்பினர் கூறியுள்ளனர். எனினும் தமது தரப்பில் பலியானோரின் மொத்த எண்ணிக்கையை இதுவரை சரியாக படையினர் வெளியிடவில்லை.

சூரியக்கதிர் முதல் இன்று ஜயசிக்குறுய் வரை படையினர் தம்மால் கொல்லப்பட்டதாக கூறப்பட்ட புலிகளின் எண்ணிக்கையை கணக்கிட்டால் பேராச்சரியம் ஒன்று ஏற்படும். இப்போதுள்ள புலிகள் எல்லாம் இறந்து பின் மீண்டும் பிறந்திருக்க வேண்டும்.

வன்னிக்கள நிலவரத்தை உற்றுநோக்கினால் படையினர் தமது பின்னடைவுகளை ஆட்பலத்தாலும், படைக்கல பலத்தாலும், பிரசார பலத்தாலும் பூசி மெழுகி வருவதை காணமுடிகிறது.

**இதுவரை வன்னியில் படையினர் முன்னேறியுள்ள பகுதிகளைவிட, இனிமேல் முன்னேறவேண்டிய பகுதிகளில் உக்கிரச் சமர் காத்திருப்பதையும் புளியங்குளம் கடும் சமர் புலப்படுத்துகிறது.**

புளியங்குளத்தை கடும் பலப் பிரயோகம் மூலம் படையினர் கைப்பற்ற முடியும். ஆனால் அதற்காக கொடுக்கும் விலை அதிகமாக இருப்பதுடன், மேலும் முன்னேறிச் செல்லும் படை வலுவையும் சேதமாக்கும்.

**இந்த வருட இறுதிக்குள் வன்னிப் போரை முடித்துவிடலாம் என்று அரச தரப்பு நினைக்கிறது. அதனை உத்தேசித்தே அரசியல் தீர்வு வருட இறுதியில் என்று தள்ளிப்போட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.**

50வது சுதந்திர தினத்துக்கு முன்னதாக வன்னிப் போரில் ஒரு கரை கண்டுவிட அரசு முயற்சிக்கிறது. ஆனால் முன்னேறும் ஒவ்வொரு கிலோமீட்டர் தூரத்துக்கும் பலத்த இழப்பை படையினர் சந்திக்கும் போது புலிகள் தமது பலத்தை தக்கவைத்தபடி சண்டை செய்கின்றனர்.

வன்னிச் சமரில் படையினரிடமிருந்தே விமான எதிர்ப்புத் துப்பாக்கி, டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், ஆட்டிலெறிகள், ஷெல்கள், மோட்டார் பீரங்கிகள் என்பவற்றையும் புலிகள் கைப்பற்றி தமது படைக்கல வலுவையும் புலிகள் அதிகரித்துள்ளனர்.

இவ்வாறான களநிலவரத்தில் இவ்வருட இறுதிக்குள் 'ஜயசிக்குறுய்' படைகள் இலக்கை எட்டுவது இயலாத காரியமாகவே தெரிகிறது.

தற்போதைய சண்டையை 'ஜயசிக்குறுய்' கட்டம் மூன்று என்று படையினர் அழைக்கின்றனர். சமரைப் பொறுத்தவரை கட்டம் மூன்றாக இருக்கலாம். ஆனால் 'ஜயசிக்குறுய்' படையினரின் இலக்கை பொறுத்தவரை கட்டம் ஒன்று இன்னமும் பூர்த்தியாகவில்லை. புளியங்குளத்தை கைப்பற்றி அங்கிருந்து நெடுங்கேணியையும் இணைப்பதுதான் கட்டம் ஒன்று.

**மூன்று மாதங்களில் கூட கட்டம் ஒன்றை பூர்த்தி செய்ய முடியவில்லை. வருடம் முடிய நான்கு மாதங்கள் உள்ளன. முதற் கட்டம் முடிந்தால்கூட முழுக் கட்டத்தை பூர்த்தி செய்ய மேலும் கடக்கவேண்டிய தூரம் 51 கிலோமீட்டர்கள்.**

**அந்த 51 கிலோமீட்டர்களும் அடர் காடு சார்ந்த பகுதிகள். இதுவரை கடந்த 20 கிலோமீட்டரில் 10 கிலோமீட்டர்தான் காடு சார்ந்த களமாக இருந்தது.** புளியங்குளத்தில்கூட ஓரளவு வயல்வெளி சார்ந்த பகுதிகள் உள்ளன. புளியங்குளம் தாண்டினால் மேலும் அடர் காடு சார்ந்த பகுதிகள் வரும்.

எனவே இனிவரும் நான்கு மாதங்களுக்குள் வன்னிப் போரின் முடிவு என்பது எட்டாத கனவுதான் என்றே தோன்றுகிறது. ■



"ஒரே தேசம், ஒரே மக்கள் நாம். சிறீலங்காக்காரர்." வெண் தாமரை இயக்கத்தின் புதிய கோஷம் இதுதான். இலங்கை பல்வின நாடு. இரு தேசங்களையும் இரு பிரதான தேசிய இனங்களையும் கொண்ட நாடு. வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்கள் தாயகம் எண்டு மூச்சுமுட்ட முழங்கிய தமிழ்க்கட்சிகள் மூச்சும் காட்டேல்லை. அநுராதபுரத்திலிருந்து புதிய கோஷம் வானை முட்டியிருக்கிறது. யோசித்துப் பார்த்தால் பிரமிப்பாக இருக்குது. இறுதி நோக்கம் என்னவென்ற உண்மையை இத்தனைகெதியாகச் சொல்லிப்போட்டினம். "ஒரேதேசம். ஒரே மக்கள்."

**ரெண்டு எழுத்தாருக்கு** வான்பறவை வாங்க முயற்சி, கைது, வேலை நீக்கம் எண்டெல்லாம் செய்திகள் அடிபடுகிறதல்லோ? விஷயம் வேறு விவகாரம். மூவினத்தைச் சேர்ந்த மூவர் சம்பந்தப்பட்டிருக்கினமாம். வாடகைக்கு ஓடவிடத்தான் சில மேலிட உதவியுடன் வாங்க முற்பட்டவையாம். பின்னர் ஏதோ போட்டியில் விஷயம் பிழைத்துப் போய்விட்டதாம். இப்போது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடப்படுவதாக விஷயமறிந்த ஒருவர் விகடம் கூறினார்.

**வடபகுதிக்கு** ஒலிபரப்பு இனிமேல் தெளிவாகக் கேட்க ஏற்பாடாம். இனிமேல் மக்களுக்கு உண்மைச் செய்திகள் மளமளவென்று காதில் பாயும். "பச்சைத் தரப்பார் பல்லாயிரம்பேர் அங்கிருப்பதால்தான் இத்தனை செலவில் ஒலிபரப்பு கிளியராக்கப்பட்டிருக்கிறது. நீர் புளகாங்கிதப் படாதீர்" எண்டு என் வம்புபிடிச்ச நண்பர் ஒருத்தர் சொல்லுறார். "சரி, யார் புண்ணியத்திலோ வட மக்கள் பாடல்கள் கேட்டு களித்திருக்கட்டுமேன் சாமி, நீர் ஏன் வயிறு எரிகிறீர்?" எண்டு கேட்டுப்போட்டு நழுவிவந்துவிட்டேன்.

## அதிரடி அய்யாத்துரை

**வெகுஜன சபை** ஆள்போதாமல் ஒத்திவைக்கப்பட்ட கதை யாவரும் அறிந்ததே. மேலைப்பகுதி தனித்துவக்கட்சி பிரதிநிதி ஒருவர் பச்சை அணியினர் தன்னைக் கையில் பிடித்து இழுத்தது எண்டு சொன்னதில் உண்மை இல்லையாம். சபை ஒத்திவைக்கப்பட்டபின்னர் வெளியே இருந்து வந்தவரைத்தான் பச்சை அணியினர் கையில் பிடித்துக் கதைத்தவையாம். பச்சை அணியோடு ஒட்டானவர்தான் அவரும். ஒட்டில்லை. உறவில்லை எண்டு காட்டத்தான் கையில் பிடித்து இழுத்ததாக விட்டாரோ கதை? "கையில் பிடித்து இழுத்தால் உதறிவிட்டுப் போகக்கூட பலமில்லாமல் போச்சுதே எங்கள் பிரதிநிதிக்கு. மேடையில் மட்டும்தான் வீரமெல்லாமோ?" இது வாக்குப்போட்ட ஒருத்தர் சொன்ன நெத்தியடியான விமர்சனம்-'சதா' காலமும் 'சிவம் சிவம்' என்று பூஜித்தால் பயம் விலகும். பலம் சேரும்.

**மலைப்பகுதி** தனித்துவக் கட்சிக்காரர் போட்டிக்கு தமிழ்விழா நடத்தி முடிச்சப்போட்டினம். பச்சை அணித் தலைவர் பெயரையும் கௌரவ விருந்தினராகப் போட்டிருந்தவை. வரமாட்டார் எண்டு தெரிஞ்சுகொண்டு தனித்தலைவர் ஏவிய ராஜதந்திர ஏவுகணையாம் பெயர் போட்ட விஷயம். அதிகாரத்தரப்பில் பலியான உறுப்பினர் பெயரில் அரங்கம். அங்கு பச்சை அணித் தலைவர் விருந்தாளி. தப்பித் தவறி அவர் வரநினைத்தாலும் வராமல் இருக்கட்டும் எண்டுதான் காரியம் பார்த்தினமோ? தற்போதைக்கு பச்சை அணியோடு கடும் புகைச்சல் எண்டு அதிகாரத்தரப்பாருக்கு உணர்த்த நினைக்கிறாராம் தனித்துவ தலைவர். அப்படிச் செய்தால்தானே நிலத்தரப்பின் சந்தேகப் பார்வை சந்தோசப் பார்வையாகும்! சும்மா ஆடுமோ. சோழியன் குடுமி எண்டானாம்.

**திருவானமலையில்** நடந்த துப்பாக்கிச் சூடும், பின்னர் சனம் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியதும் தெரிந்த சங்கதி. இந்த விடயத்தில் ஜனநாயகக் கட்சி தலையிட்டு தீர்த்து வைக்க, அச் செய்தி சில பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வர, மற்றொரு தமிழ் கட்சிக்கு நெஞ்சு பொறுக்கவில்லையாம். பச்சைத்தரப்பாரை தூண்டிவிட்டதோடு கிராம மக்களையும் "உப்பிடியெல்லாம் செய்யலாமோ கட்டல்லோ போடுவினம்" எண்டு பயம் காட்டினவையாம். கட்சிச் சண்டையால் சனத்தின் தலை நிமிரவும் விடமாட்டினம் போலக் கிடக்கு.

**யாழ் குடாநாட்டில்** ஏன் சுட்டோம், எதற்குச் சுட்டோம் எண்டு பச்சை உடையினர் அறிக்கை விடுவது வழக்கமாய்போச்சு. கைப்பற்றிய ஆயுதப்பட்டியலில் கட்டாயம் ஒரு கைக்குண்டாவது இடம்பெறுகிறது. யார் கை பற்றிய கைக்குண்டோ?

**தமிழ்க்கட்சி** ஒன்றின் தலைவர் சென்னையில் கைது செய்யப்பட்டார். சொந்த வியாபார விடயமாக சென்ற இடத்தில் அந்நியச் செலவாணி சமாச்சாரத்தில் கைதானாராம். இந்த விஷயத்தை கேள்விப்பட்ட அந்த தமிழ்க்கட்சியுடன் கூட்டுவைத்துள்ள கட்சியினர் சிலர் சகல பத்திரிகைகளுக்கும் ஃபோன் செய்து துள்ளி துள்ளி செய்தி கொடுத்தவையாம். கொடுத்த செய்தியில் கை காலும் வைச்சுக் கொடுத்திருக்கினம். சபாஷ், சரியான ஐக்கியம்.

**மாக்கிய வெல்லியின்** ஒரு பொன்மொழி:

"உடைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்– நீங்கள் எப்படி காட்சியளிக்கிறீர்கள் என்பதைத்தான் ஒவ்வொருவரும் காண்கிறார்கள்– நீங்கள் எப்பேர்ப்பட்டவர் என்பதை வெகு சிலரே புரிந்து கொள்கிறார்கள்!" ■



படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# நாடாளுமன்றத் தேர்தலும் பொதுப் பட்டியலும்!

## கட்டுப்பாடு எங்கே?

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதிகாரத்திற்கு வந்ததும் அதன் உறுப்பினர்களின் அட்டகாசங்கள் மேலும் தீவிரமாகின.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் தொல்லைகள் தொடர்பாக இந்தியப் படையினரிடம் ஏராளமான புகார்கள் சென்றன.

இந்திய அரசுடன் நெருக்கமாக இருந்த இயக்கம் என்பதால் இந்திய அமைதிப்படை அதிகாரிகளால் புகார்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் சில நடவடிக்கைகள் இந்தியப் படையினரின் தலையிலும் விழுந்தன. இதனால் இந்தியப் படை மூத்த அதிகாரிகள் சிலர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.மீது அதிருப்தி கொண்டிருந்தனர்.

புலிகளுடன் இந்தியப் படையினர் சண்டையிட்டுக் கொண்டிருந்தபோதும், புலிகளின் கட்டுப்பாடு, இராணுவரீதியான திட்டமிட்ட செயற்பாடுகள் தொடர்பாக அவர்கள்மீது இந்தியப் படையினருக்கு குறிப்பாக மூத்த அதிகாரிகளுக்கு உள்ளூர மதிப்பு இருந்தது.

இந்திய அமைதிப் படைத் தளபதிகள் பின்னர் தங்கள் அனுபவங்கள் தொடர்பாக எழுதிய நூல்களில்கூட தங்களுடன் இணைந்து நின்ற இயக்கங்களை மறந்தும்கூட பாராட்டவில்லை என்பதைக் காணலாம்.



வன்னிக்காட்டில் பெண் புலிகள் பயிற்சி

யாழ்ப்பாணத்தில் அசோகா ஹொட்டலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் தங்கியிருந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பாக பெருந்தொகையான உறுப்பினர்கள் தங்கியிருந்தனர்.

அசோகா ஹொட்டலில் மதுபான விடுதியும் இருந்தது. அந்த விடுதியில் மட்டும் மதுபானம் வாங்கியதில் பல இலட்ச ரூபாய்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் கடனாக செலுத்த வேண்டி இருந்தது.



மது அருந்துவது என்பது தவறல்ல. புலிகள் இயக்கத்தினரைத் தவிர ஏனைய இயக்கங்கள் மது அருந்துவதை ஓரளவு அனுமதித்தே இருந்தன. ஆயினும் ஒரு வரைமுறைக்கு அப்பாற்பட்டதாக மது அருந்துதல் மாறிவிட்டது. கட்டுப்பாட்டையே வேரறுக்கும் காரணிகளில் ஒன்றாகவும் மது அருந்துதல் மாறிக்கொண்டிருந்தது.

மாலையானால் மதுமயக்கம் என்று கூறுமளவுக்கு பல உறுப்பினர்கள் மதுப் பழக்கத்திற்கு அடிமையானார்கள். அசோகா ஹொட்டலில் பெட்டி பெட்டியாக மதுப்புட்டிகள் வந்திறங்கின.

கட்டாய ஆட்சேர்ப்பிலும், தங்களை பெரிய இயக்கம் என்று காட்டுவதிலும் இருந்த அக்கறை கட்டுப்பாடான உறுப்பினர்களை வளர்த்தெடுப்பதிலும், பொறுப்புக்களில் அவர்களை அமர்த்துவதிலும் இல்லாமல் போனது. கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பது, தண்டிக்க வேண்டிய நேரத்தில் தண்டிப்பது, தட்டிக்கொடுத்து தகுதியானவர்களை முன்னுக்கு கொண்டுவருவது போன்றவற்றை செய்வதற்கு யாரும் இல்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.,ரெலோ போன்ற இயக்கங்களில் அப்போதும் போர்க்குணம் கொண்ட உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களைவிட கட்டுபாடற்ற உறுப்பினர்கள் தொகை மேலோங்கியதால் அவர்கள் ஓரம் கட்டப்பட்டனர்.

மக்களிடமும் நல்ல பெயர் எடுக்க முடியவில்லை. தாங்கள் இணைந்து நின்ற இந்தியப் படையினரிடமும் மரியாதையைப் பெறமுடியவில்லை. இரண்டும் கெட்டான் நிலைக்கு சென்றுவிட்டனர்.

இக் கட்டத்தில்தான் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான அறிவிப்பு வெளியானது.

## நாடாளுமன்றத் தேர்தல்

1988 பெப்ரவரியில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவிப்பு வெளியானது.

நாடாளுமன்றத் தேர்தலை வடக்கு-கிழக்கில் ஜனநாயகம் நிலவுவதாகக் காட்டும் வகையில் நடத்தி முடிக்க திட்டமிட்டது இந்திய அரசு.

இதனையடுத்து சுவாரசியமான இராஜதந்திர நாடகங்கள் அரங்கேறத் தொடங்கின.

மாகாணசபையில் ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தினர் ஆளும் கட்சியாக இருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு முக்கிய பாத்திரம் வழங்க முடிவு செய்தது இந்திய அரசு.

அப்போது கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள அரசு விடுதியில் தங்கியிருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கொழும்பு சென்று தேர்தலில் போட்டியிடும் ஏற்பாடுகளை கவனிக்குமாறு இந்திய அரசிடமிருந்து அமிர்தலிங்கத்துக்கு தகவல் சென்றது.

அமிர்தலிங்கம் கொழும்புக்கு விரைந்தார். அவரை இந்தியத் தூதர் திக்ஷித் சந்தித்து பேச்சு நடத்தினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் ஈ.பி.ஆர். எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய இந்திய சார்பு இயக்கங்கள் போட்டியிடவேண்டும். தேர்தல் பிரசாரம் செய்ய கூட்டணியினருக்கு போதிய பாதுகாப்பை இந்தியப் படை வழங்கும் என்று இந்தியத் தரப்பால் கூறப்பட்டது.

ஈரோஸ் இயக்கத்தினரை தனியாகப் போட்டியிட வைக்கலாம் என்றும் இந்திய தரப்பு முதலிலேயே முடிவு செய்துவிட்டது. போட்டியிருந்தால்தான் வடக்கு-கிழக்கில் ஜனநாயகம் இருப்பதாக உலகுக்கு காட்ட முடியும். இந்திய மக்களுக்கும் இந்தியப் படையின் சாதனையாக அதனை சுட்டிக்காட்ட முடியும்.

புளொட் இயக்கமும் தனியாகப் போட்டியிடப்போவதாக கூறிவிட்டது. அப்போது புளொட் இயக்க நிலைப்பாடு தொடர்பாக இந்திய அரசு அத்தனை ஆர்வம் காட்டவில்லை. இந்திய அரசுப் பக்கமும் சாராமல், புலிகள் பக்கமும் சாராமல் இலங்கை அரசின் உதவியுடன் புளொட் அப்போது செயற்பட்டுக் கொண்டிருந்தது.

கூட்டணியினரின் சின்னத்தின் கீழ், பொதுப் பட்டியலில் போட்டியிடுவதை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அவ்வளவாக விரும்பவில்லை. குறிப்பாக வரதராஜப்பெருமாள் விரும்பவில்லை.

அதேநேரம் இந்திய அரசின் ஆசிர்வாதத்துடன் கூட்டணியினர் தனியாகப் போட்டியிட்டால் வடக்கு-கிழக்கில் தமக்கெதிராக கூட்டணியினருக்கே மக்கள் வாக்களித்துவிடக்கூடும் என்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அஞ்சியது.

கூட்டணியினரை தனியாகப் போட்டியிடவிடுவதைக் காட்டிலும், அவர்களுடன் சேர்ந்து நின்றே வேலையைக் காட்டினால் என்ன? என்று யோசித்தது ஈ.பி.ஆர். எல்.எஃப்.

இந்திய அரசும் பொதுப் பட்டியல் விடயத்தில் உறுதியாக நின்றதால் அக் கட்டளைக்கும் செவிமடுத்தாக வேண்டிய கட்டாயமும் இருந்தது.

கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் ஈ.பி.டி.பி செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடன் நல்லுறவு வைத்திருந்தார். தேர்தல் நடவடிக்கைக்காக கொழும்பு வருவதற்கு முன்னர் சென்னையில் ஈ.பி.டி.பி.யினரைச் சந்தித்து அமிர்தலிங்கம் பேச்சு நடத்தியிருந்தார்.

அப்போது பொதுப்பட்டியல் விடயம் அமிர்தலிங்கத்துக்கு தெரிந்திருக்கவில்லை. தேர்தலில் கூட்டணியுடன் இணைந்து ஈ.பி.டி.பி. போட்டியிடுவது தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டது.

கொழும்பில் ஈ.பி.டி.பி. பிரதிநிதியாக அப்போதிருந்தவர் மு.சந்திரகுமார். கொழும்பு வந்த அமிர்தலிங்கம் சந்திரகுமாரைச் சந்தித்தும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக பேசியிருந்தார். கூட்டணிக்குள் அவ்விடயம் குறித்து பேசிவிட்டு முடிவை தெரிவிப்பதாகவும் கூறியிருந்தார்.

இக் கூட்டத்தில்தான் கூட்டணி தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்கள் கூட்டாக போட்டியிடுவதற்கான இணக்கத்தை இந்தியத் தூதர் திக்ஷித் ஏற்படுத்தி முடித்தார்.

பொதுப்பட்டியல் தொடர்பாக பேசுவதற்கான கூட்டம் ஒன்று கொழும்பில் நடத்தப்பட்டது.

கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பொதுப்பட்டியலில் ஈ.பி.டி.பி.யையும் இணைப்பது பற்றி அமிர்தலிங்கம் பிரஸ்தாபித்திருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.,ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கப் பிரதிநிதிகள் அதனை கடுமையாக ஆட்சேபித்தனர். இந்தியத் தரப்பினரும் ஈ.பி.டி.பி.யை பொதுப்பட்டியலில் சேர்ப்பதை அவ்வளவாக விரும்பவில்லை.

அதனால் ஈ.பி.டி.பி.யை இணைத்துக் கொள்ள அமிர்தலிங்கம் எடுத்த முயற்சி கைகூடவில்லை.

## பொதுப் பட்டியல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட விரும்பினார் அமிர்தலிங்கம்.

# பிரபா வழங்கிய அனுமதி பின்னர் வந்த எச்சரிக்கை!

அதனால் மட்டக்களப்பு மாவட்ட பொதுப்பட்டியலில் அமிர்தலிங்கம் தலைமையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர்.

யாழ் மாவட்டம், திருமலை மாவட்டம், அம்பாறை மாவட்டம், வவுனியா மாவட்டம் ஆகியவற்றில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் உதயசூரியன் சின்னத்தில் பொதுப்பட்டியலில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர்.

கூட்டணியின் தலைமையில் பொதுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அடுத்த காயை நகர்த்தியது இந்தியத் தரப்பு.

புதுடில்லியில் இருந்து இந்திய அரசு ஈரோஸ் தலைவர் பாலகுமாருக்கு தகவல் அனுப்பியது. "நீங்களும் தேர்தலில் போட்டியிடலாம். போதிய பாதுகாப்பை உங்களுக்கு வழங்குமாறு இந்திய அமைதிப்படை தளபதிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது."

முன்னர் மாகாண சபைத் தேர்தலிலும் யாழ்ப்பாணத்தில் சுயேட்சைக் குழுவை நிறுத்த ஈரோஸ் செய்த முயற்சி பற்றி இத் தொடரில் விபரிக்கப்பட்டிருந்தது.

## பிரபா அனுமதி

மாகாணசபைத் தேர்தலில் தடுக்கப்பட்ட முயற்சியை, நாடாளுமன்றத் தேர்தலில் செய்து பார்க்க நினைத்தது ஈரோஸ்.

ஆனால் ஒரே தடை இருந்தது. அந்தத் தடையைக் கடந்தால்தான் தேர்தலில் துணிந்து போட்டியிடலாம். வேட்பாளர்களும் போட்டியிட முன்வருவர்.

அந்தத் தடை-புலிகள். அவர்களது சம்மதம் பெறாமல் போட்டியிட பாலகுமார் தயாராக இல்லை.

பிரபாகரனை சந்திக்க விரும்புவதாகத் தகவல் அனுப்பினார் பாலகுமார். சந்திக்க அனுமதி கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக் காட்டுக்கு பாலகுமார் தலைமையில் ஈரோஸ் குழு ஒன்று சென்றது. பாலகுமார் உட்பட ஐந்துபேர் அக் குழுவில் இருந்தனர்.

ஈரோஸ் குழுவினரை காட்டுக்குள் சுற்றி சுற்றி அழைத்துச் சென்றனர் புலிகள். கடைசியாக ஒரு முகாமை சென்றடைந்தனர்.

நடந்து நடந்து ஈரோஸ் குழுவினருக்கு கால்கள் களைத்துவிட்டன. முகாமை சென்றடைந்ததும் நிம்மதி. அம் முகாமில்தான் பிரபாகரன் இருப்பதாக நினைத்து சந்திக்கத் தயாராக இருந்தனர்.

சில மணிநேரங்களில் வந்து சேர்ந்தார் மாத்தையா. ஈரோஸ் குழுவினரை உபசரித்துவிட்டு, மாத்தையா கூறினார்: "நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தலைவரைப் பார்க்க பாலகுமாரை மட்டும் அழைத்துச் செல்லப் போகிறேன். நீங்கள் இந்த முகாமிலேயே இருந்து கொள்ளுங்கள். நாங்கள் போய் வருகிறோம். பாலகுமார் சந்தித்துவிட்டு உங்களிடம் வந்து சேருவார்."

பாலகுமாரும் மாத்தையாவுடன் புறப்பட்டுச் சென்றுவிட்டார். பாலகுமாருடன் சென்றவர்கள் அந்த முகாமிலேயே பாலகுமார் திரும்பி வரும்வரை காத்திருந்தனர்.

வன்னிக் காட்டுக்குள் வேறு ஒரு பாது காப்பான இடத்தில் இருந்த முகாமில் பிரபாகரனை நேரில் சந்தித்தார் பாலகுமார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் போட்டியிடவேண்டிய காரணத்தைப் பற்றி பிரபாவிடம் எடுத்துக் கூறினார் பாலகுமார்.

ஈரோஸ் போட்டியிடாவிட்டால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற இயக்கங்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதாகிவிடும். ஈரோஸ் பாராளுமன்றம் சென்றால்கூட புலிகளின் எண்ணங்களுக்கு மாறாக செயற்படாது. ஈ.பி.ஆர். எல்.எஃப். போன்ற இயக்கங்களுக்கு மக்கள் ஆதரவு கிடையாது என்று நிருபிக்க இதனை ஒரு வாய்ப்பாகக் கொள்ளலாம் என்று பாலகுமார் விளக்கினார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பிரபா இறுதியாகக் கூறினார்:

**"நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதால் சிலவற்றை சாதிக்கலாம் என்று கூறுகிறீர்கள். எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. நீங்கள் முயன்றுபார்க்கலாம் நாங்கள் தடை செய்ய மாட்டோம். ஆனால் ஒரு வரையறைக்குள் உங்கள் நடவடிக்கைகள் இருக்கவேண்டும். தமிழீழ இலட்சியத்துக்கு மாறானதாக உங்கள் நடவடிக்கைகள் அமையுமானால் உங்கள் தொடர்பாக நாங்கள் வேறு முடிவுகளுக்கு செல்ல நேரும். அப்படியொரு நெருக்கடியை எனக்கு ஏற்படுத்தி விடாதீர்கள்"**

பிரபாகரனே பச்சைக் கொடி காட்டி விட்டார் என்ற திருப்தியோடு திரும்பினார் பாலகுமார்.



ஈரோஸ் இயக்கத்தின் வெகுஜன அமைப்பாக இருந்தது ஈழவர் ஜனநாயக முன்னணி. அதன் சார்பாகவே தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

வேட்பாளர் பட்டியலில் புலிகள் இயக்க ஆதரவாளர்களையும் இடம்பெறச் செய்வது என்றும் தீர்மானித்தனர்.

யாழ்ப்பாணத்தில் எட்வேட் செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொறுப்பாளராக இருந்தவர் எட்வேட்.

ஈரோஸ் இயக்க ஸ்தாபகர் இரட்ணசபாபதி, பரராஜசிங்கம் ஆகிய ஈரோஸ் முக்கியஸ்தர்களும் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டனர்.

புலிகள் இயக்க அனுதாபிகளான சிவானந்தராசா, கணபதிப்பிள்ளை, ராஜேந்திரா ஆகியோரின் பெயர்களும் பட்டியலில் இருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சௌந்தர்ராஜன் தலைமையில் ஈரோஸ் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். திருமலையில் இரட்ணராஜா தலைமையிலும், வவுனியாவில் சந்திரசேகரன் தலைமையிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பில் ஈரோசின் பட்டியலில் பசீர் சேகுதாவூத் மட்டுமே ஈரோஸ் இயக்க உறுப்பினர். ஏனையோர் சமூகத்தில் செல்வாக்குள்ளவர்கள். மற்றும் சிலர் புலிகள் இயக்க அனுதாபிகள்.

திருமலையில் மட்டுமே ஈரோஸ் பட்டியலில் போட்டியிட்டவர்கள் அனைவரும் ஈரோஸ் உறுப்பினர்களாக இருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் ஈரோஸ் போட்டியிடவில்லை.

அம்பாறையில் ஈரோசும் போட்டியிட்டால் அங்கிருந்து தமிழ் பிரதிநிதியை தெரிவு செய்யக்கூடிய வாக்கு எண்ணிக்கை சிதறிவிடும். அதனால் போட்டியிடுவதை தவிர்க்குமாறு கூட்டணிப் பிரமுகர்கள் சிலர் ஈரோசுடன் பேச்சு நடத்தினார்கள்.

அம்பாறை மாவட்ட ஈரோஸ் உறுப்பினர்களும் வாக்குகள் சிதறுவதை விரும்பவில்லை. அதனால் அங்கு போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்தது ஈரோஸ்.

## கொலை மிரட்டல்

'வடக்கு-கிழக்கில் ஈரோஸ் போட்டியிடும். போதிய பாதுகாப்பை வழங்குக' என்று இந்திய அமைதிப் படைக்கு புதுடில்லியில் இருந்து உத்தரவு பறந்து வந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க நடவடிக்கைகளால் இந்தியப் படை மூத்த அதிகாரிகள் சிலர் அதிருப்தி அடைந்திருந்தனர் என்று கூறியிருந்தேன் அல்லவா.

புதுடில்லியில் இருந்து உத்தரவு வந்ததும் அந்த அதிகாரிகள் ஈரோஸ் கேட்கும் உதவிகளை சிரத்தையுடன் செய்து கொடுக்க ஆரம்பித்தனர்.

ஈரோஸ் தேர்தலில் போட்டியிடப் போகிறது என்றதும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப்., ரெலோ ஆகிய மூன்று இயக்கங்களும் கடும் கோபம் கொண்டன.

ஈரோஸ் நிறுத்தியுள்ள வேட்பாளர்கள் தனிமனிதர்களும் அல்ல, ஈரோஸ்காரர்களும் அல்ல, புலிகள்தான் ஈரோஸின் பெயரில் தங்கள் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளனர் என்ற பிரசாரத்தை பெரியளவில் தொடங்கினார்கள்.

ஈரோஸின் பட்டியலில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் ஈரோஸ் உறுப்பினர்களதும், வேட்பாளர்களதும் வீடுகளுக்கு நள்ளிரவில் சென்று மிரட்டினார்கள்.

ஈரோஸ் இயக்க உறுப்பினர்கள் ஒன்பதுபேர் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இக் கொலைகளை அடுத்து எட்வேட் செபஸ்தியாம்பிள்ளையின் பெயரில் ஒரு அறிக்கை வெளியானது.

"ஈழவர் ஜனநாயக முன்னணி வேட்பாளர்களுக்கு போதிய பாதுகாப்பு உத்தரவாதம் தரப்படாவிட்டால், தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலக வேண்டிய நிலை ஏற்படும்" என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இதனையடுத்து வேட்பாளர்களுக்கு இந்தியப் படையினர் கூடுதலான பாதுகாப்பை வழங்கினார்கள்.

ஈரோஸ் போட்டியில் இருந்து விலகிவிட்டால் நடைபெறும் தேர்தலை ஜனநாயகத் தேர்தலாக காட்ட முடியாதே என்று இந்திய அரசும் நினைத்தது.

ஈரோஸ் போட்டியிலிருந்து விலகிவிடக் கூடாது என்று பாலகுமாருக்கு இந்தியத் தரப்பால் வேண்டுகோள் விடப்பட்டதுடன், தேவையான உதவிகள் செய்யப்படும் என்றும் உத்தரவாதம் கொடுக்கப்பட்டது.

## திடீர் திருப்பம்

ஈரோஸ் பட்டியலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவருக்கும் திடீரென்று ஒருநாள் எச்சரிக்கை கடிதங்கள் வந்து சேர்ந்தன.

கடிதத்தை அனுப்பியிருந்தது வேறு யாருமல்ல, புலிகள் இயக்கத்தினர்தான்.

வேட்பாளர்கள் பலர் திகைத்துப் போனார்கள். ஏனைய இயக்கங்களின் அச்சுறுத்தலை எதிர்நோக்க அவர்கள் தயாராக இருந்தனர். புலிகள் இயக்கத்தினரின் எச்சரிக்கையைக் கண்டுதான் பயந்து போனார்கள்.

ஈரோஸ் இயக்கத்தினரும் குழம்பிவிட்டனர். பாலகுமார் உடனடியாக பிரபாகரனுக்கு செய்தி அனுப்பினார். சந்திப்புக்கு அனுமதி கேட்டார்.

வன்னிக்கு வருமாறு அழைக்கப்பட்டார். புறப்பட்டுச் செல்லும் இறுதி நேரத்தில் பாலகுமாருக்கு புலிகளிடமிருந்து தகவல் வந்தது.

"தலைவரின் பிரதிநிதி உங்களைச் சந்திப்பார். நீங்கள் வரவேண்டாம்."

காத்திருந்தார் பாலகுமார்.

பிரபாகரனின் பிரதிநிதி வந்தார். வந்தவர் பொட்டம்மான்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# வன்னிச்சமர் முடிவா - தொடரா?

## அலசுவது- இராஜதந்திரி

**வ**ன்னியில் புலிகளை பலவீனமாக்கி, வடக்கிற்கு வழியமைப்பதற்கான யுத்தம் மீண்டும் சூடுபிடித்துள்ளது.

இந்த யுத்தம் 'வெற்றி நிச்சயம்' என்று ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் பாரிய இழப்புக்களையே எதிர் கொண்டுவருகின்றது. இருதரப்பினருமே காயமடைந்தும் உயிரிழந்தும் ஜீவமரணப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

எத்தகைய இழப்புக்கள் ஏற்பட்டாலும் வன்னியில் வழி திறக்கும் யுத்தத்தை நிறுத்துவதில்லை என்ற பிடிவாதத்துடன் ஆயுதப்படையினர் செயலில் இறங்கியுள்ளனர்.



"எதிரி பலமாக உள்ள போது பின்வாங்கு, ஓடுவதுபோல பொய்ப் போக்குக்காட்டி இழுத்தடி. எதிரி பலவீனமாக உள்ளபோது முன்னேறித் தாக்கு"
-மா.ஓ.சேதுங்-

மறுபுறம் படையினரது முயற்சியைக் கைகூடவிடுவதில்லை என்று திடசங்கற்பத்துடன் புலிகளும் எதிர்த்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

வெற்றி நிச்சயம் ஆரம்பமானது முதற்கொண்டு மூன்று தடவைகள் புலிகளின் கடுந்தாக்குதல்களுக்குள்ளாகியிருந்தது. இத்தாக்குதல்களின்போது ஆயுதக்கிடங்குகள், ஆட்டிலறிப்பீரங்கிகள் டாங்கிகள் என்பன அழிக்கப்பட்டதுடன் பெருமளவு ஆட்சேதமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் ஆயுதப்படையினர் இந்த வழிதிறக்கும் யுத்தத்தை நிறுத்தி விடுவதாகவோ, அல்லது வாபஸ் பெற்று விடுவதாகவோ இல்லை.

யாழ் குடாநாட்டில் தமது பிடியை இழந்த நிலையில் வன்னிக் காடுகளுக்குள்ளேயே தமிழீழ விடுதலைப் புலிகள் தற்சமயம் காலூன்றியுள்ளனர். இதுதவிர வன்னிக்காடுகளே எப்போதும் புலிகளின் பிரதான தளங்களாக இருந்து வந்துள்ளன.

இந்நிலையில் 'வெற்றி நிச்சயம்' படை நகர்வின் போது வன்னியின் கேந்திரப் பகுதிகள் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் முழுமூச்சாகவே இருப்பர். வன்னியில் கேந்திரப் பகுதிகள் வீழ்ச்சியடைந்து அரசு எதிர்பார்ப்பதுபோல வழிதிறக்கும் படலம் வெற்றியளித்துவிட்டால் புலிகள் தரப்பிலும் சில நெருக்கடிகள் தோன்றலாம்.

ஜயசிக்குறுய், அதாவது வெற்றிநிச்சயம் படையெடுப்பு ஆரம்பமானது முதல் படையினர் தரப்பில் பலத்த இழப்புக்களை புலிகள் ஏற்படுத்திவருகின்றனர்.



"படையினரின் பணி முகாம்களில் முடங்கியிருப்பதல்ல. படையினர் போரிட்டுக் கொண்டே இருப்பர்."
-அமைச்சர் ரத்வத்தை-

**ஆரம்பத்தில் தாண்டிக்குளத்திலும், பின்னர் ஓமந்தையில் இரண்டு ஊடறுப்புகளும் நடத்தப்பட்டன. இதனையடுத்து வெற்றி நிச்சயம் படையெடுப்பைத் தொடர்ந்து மேற்கொள்வதைக் கைவிட்டு விடுமளவுக்கு இராணுவம் உடைந்து போயுள்ளதென இராணுவ விமர்சகர்கள் பலரும் தெரிவித்திருந்தனர்; உண்மை**

**நிலையும் அதுவே.**

'வெற்றி நிச்சயம்' ஆரம்பிக்கப்பட்டது முதற்கொண்டு பொதுஜன தொடர்பு சாதனங்கள் மூலமாக படைகளில் ஆட்சேர்ப்புக்கு இடையறாத விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதையே அவதானிக்க முடிந்தது.

படைகளில் இருந்து தப்பியோடியவர்களை மீண்டும் படைகளில் சேர்க்கும் முயற்சியும் எதிர்பார்த்த பலனை கொடுக்கவில்லை. இதனையடுத்து தெற்கில் படையினரே படையினரைத் தேடி வேட்டை நடத்தவேண்டி ஏற்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தற்போதும் புதிதாக இளைஞர்களும், யுவதிகளும் இணைந்து கொண்டிருக்கின்றனர். புதிய படையணிகளையும் புலிகள் உருவாக்கி வருகின்றனர்.

அதேசமயம் படையினர் தரப்பில் இருந்து தப்பியோடுபவர்கள் எண்ணிக்கை உயர்ந்துவருகிறது. வெற்றி நிச்சயம் படை நடவடிக்கையில் புலிகளின் அழித்தொழிப்பு ஊடறுப்பு சமர்களை அடுத்து படையினரில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் தப்பிச் சென்றுள்ளனர்; காணாமல் போனோர் பட்டியலில் அவர்கள் இடம்பெற்றுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

தாண்டிக்குளத்தில் புலிகள் ஊடறுப்புச் சமர் நடத்தியபோது தப்பிவந்த படையினரில் ஒரு பகுதியினர் வவுனியாவில் இருந்து ரயில் மூலமாக திரும்பியதை நகர வாசிகள் கண்டிருந்தனர்.

இதுதவிர, பல நூற்றுக்கணக்கான பொலிசாரும் வன்னிப் போர்முனையில் இருந்து தப்பிச் சென்றிருக்கின்றனர்.

**புலிகள் இயக்கத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்துகொண்டிருக்கும்போது, மறுபுறம் படையினரில் ஆட்பல வீழ்ச்சி ஏற்பட்டுவருவதையே நோக்க முடிகிறது. எனினும் புலிகளுடன் ஒப்பிட்டால் முப்படைகளின் ஆட்பல எண்ணிக்கை பல மடங்கு அதிகமாகவே இருக்கிறது.**

ஆயினும் படையினரின் தற்போதைய ஆட்பல எண்ணிக்கை யுத்தத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிக்க கூடியதாக அமையப் போவதில்லை.

பிரதேசங்களை கைப்பற்றி வைத்திருக்கவும், புளியங்குளத்தில் மேற்கொண்டதுபோல மூர்க்கத்தனமான பலப் பிரயோகம் மூலம் முன்னேறவும் ஆட்பலமும், படைக்கலப் பலமும் உதவுமே தவிர, புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களில் இருந்து தமது இழப்பை படையினர் தவிர்ப்பது கடினமான காரியமாகவே இருக்கும்.

**படைக்கலரீதியில் பெரும் பலம் கொண்ட மரபுப்படையும், கனரக படைக்கல பலத்திலும், ஆட்பலத்திலும் குறைந்த கெரில்லாப் படைகளும் போரிடும்போது குறிப்பிட்ட நிலப்பகுதிகளை மரபுப்படைகள் கைப்பற்றுவது சாத்தியமற்ற ஒன்றல்ல. அவ்வாறு கைப்பற்றுவதைப் பிரமாண்டமான வெற்றியாக கணிப்பது சரியானதல்ல.**

இரண்டு மரபுப் படைகள் போரிடும்போது நிலப்பகுதிகள் கைப்பற்றப்படுவதும், எதிர்த்தரப்பு மரபுப்படையை பின்வாங்கச் செய்வதும் வெற்றியாக கருதப்படலாம்.

இரண்டு மரபுப்படைகளுக்கிடையிலான போர் என்றால் இரு பக்கமும் டாங்கிகளும், கவசவாகனங்களும், ஆட்டிலெறிகளும் இருக்கும். விமானப்படையும் இருக்கும். அவர்கள் இங்கே அடிக்க, இவர்கள் அங்கே அடிக்க மரபுப்போர் நடக்கும். அதில் யார் வெற்றிபெறுகிறார்களோ அவர்களே வெற்றிக்குரியவர்களாக கருதப்படுவர்.

**ஆனால் வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தமானது மரபுப்போர் படை ஒன்றுக்கும், கெரில்லாப் படையணிகளுக்கும் இடையிலான யுத்தமாகும். இந்த யுத்தத்தில் தமது ஆட்பலத்தையும், படைக்கலப் பலத்தையும் முழுவதுமாக பிரயோகித்து யுத்தத்தை நடத்துகின்றனர் அரச படையினர். புலிகளோ தமது ஆட்பலத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர்.**

டாங்கிகள், போர் விமானங்கள் என்பவை கக்கும் குண்டுகளை எதிர்த்து டாங்கிகள் மூலமோ, விமானங்கள் மூலமோ பதிலடி கொடுக்கும் படைக்கல வசதி புலிகளிடம் இல்லை. எனவே தற்காப்புக்கான அரண்களையே புலிகள் பெரிதும் நம்பியிருக்கின்றனர்.

பாதுகாப்பு அரண்களை அமைப்பதிலும், அவற்றில் இருந்து தாக்குதல் நடத்தக்கூடிய திறனிலுமே மரபுப்படையின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் சமரில் புலிகளின் பலம் தங்கி நிற்கிறது.

அதேவேளை புலிகள் சண்டையிடும் ஆற்றல், சண்டை அனுபவம் என்பவற்றில் முன்னேற்றம் கண்டவர்களாக இருப்பதால் ஒரு கெரில்லா போரின் அதி உயர் தன்மைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

படையினரிடம் இருந்து பெறப்பட்ட கனரக ஆயுதங்களான ஆட்டிலெறிகள், நீண்டதூர மோட்டார்கள், அவற்றுக்கான ஷெல்கள் என்பவையும் வன்னிப் போர்க் களத்தில் புலிகளின் பலத்தை உயர்த்தியுள்ளன. அதாவது கெரில்லாக்களாக மட்டுமல்லாமல், மரபுப்போர் படைக்குரிய ஆயுத பலத்தையும் புலிகள் ஓரளவு பெற்றிருக்கின்றார்கள். அதனால் கெரில்லா தாக்குதல்களில் மட்டுமல்லாமல், மரபுப்போரின் குணாம்சத்தைக் கொண்ட ஆட்டிலெறித் தாக்குதல்கள், மோட்டார் ஷெல் தாக்குதல்கள் என்பவற்றிலும் புலிகள் ஈடுபட்டு வருகின்றன.

படையினரிடம் கைப்பற்றப்பட்ட டாங்கிகள் சிலவும் புலிகளின் தளத்தில் உள்ளன. எனினும் படையினரிடம் உள்ள வான்படைப் பலம் புலிகளிடம் இல்லை. அதனால் படையினரைப் போல் அல்லாமல் தமது ஆட்டிலெறிகளையும், கனரக ஆயுதங்களையும் மறைத்துவைத்தே புலிகள் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் விமானத் தாக்குதல்களில் அவற்றை இழந்துவிடும் அபாயம் உள்ளது.

**எனவே- வடக்கு-கிழக்கிலும் குறிப்பாக தற்போது வன்னியிலும் நடைபெறுவது மரபுப்படைக்கும், கெரில்லாப் படைக்கும் இடையிலான யுத்தமாகும். இந்த யுத்தத்தில் வியப்புக்குரியதாக கருதப்படுவது மரபுப்படையின் முன்னேற்றம் அல்ல. சகல போர் வளமும் கொண்ட மரபுப்படையை தடுத்து நிறுத்துமளவுக்கு கெரில்லாப் படையணிகள் பெற்றுள்ள திறனும், சண்டையிடும் ஆற்றலுமே உண்மையில் வியப்புக்குரியதாகும்.**

சர்வதேசஅளவில் கெரில்லா அமைப்புக்கள் பல இருந்துள்ளன. ஆற்றலுடன் போரிட்டும் உள்ளன.

ஆனால் அக் கெரில்லா அமைப்புக்கள் தமது எதிரி பலமாக உள்ள முனைகளில் சண்டையிடுவதை தவிர்த்துச் செல்வதையே பிரதான உபாயமாகக் கொண்டிருந்தன.

புலிகளும் அவ்வாறான உபாயத்தையே யாழ்குடாநாட்டு சமரில் கையாண்டனர். ஆனால் வன்னிச் சமரில் பலம் அனைத்தையும் ஒன்றுதிரட்டி படையினர் முன்னேறும் களத்திலும் புலிகள் எதிர்ச் சமர் நடத்திக்கொண்டிருக்கின்றனர். வன்னியில் மரபுப்படையை கெரில்லாக்கள் இதுவரை நூறு நாட்களாக எதிர்கொண்டு தடுத்துப் போரிட்டுவருகின்றனர். இது கெரில்லாப் போர் முறையில் புதிய பரிமாணம் என்பதை மறுக்க இயலாது. இது வெறுமனே புகழ்ச்சிக்காக கூறப்படும் அம்சமல்ல. சர்வதேச கெரில்லாப் போர் வரலாறுகளை நன்கு அறிந்தவர்கள் இதன் தாற்பரியத்தை உணரவே செய்வர்.

சீனாவில் கெரில்லாப் போர் முறைகளை நன்கு வகுத்து நெறிப்படுத்தியவர் மா ஓ சேதுங். 'எதிரி பலமாக உள்ளபோது பின்வாங்கு. எதிரி பலவீனமாக உள்ளபோது போரிடு' என்பதையே அவர் கூறியிருந்தார். சீனாவின் கெரில்லாக்கள் மாபெரும் மரபுப் படைச் சேனையாக உருவாகும்வரை எதிரி பலமாக உள்ள களங்களில் போரிடுவதை தவிர்த்தே வந்தனர்.

எதிரி பலமாக உள்ள களங்களில் போரிடுதல் மூலம் ஏற்படும் இழப்புக்கள் கெரில்லாக்களுக்கே பாதகமாக முடியும். தனது பலமான வியூகத்திற்குள் கெரில்லாக்களை சண்டைக்குள் இழுத்து அழித்தொழிக்க மரபுப்படைகள் முயல்வதும் வழக்கம். அதனால்தான் கெரில்லாக்கள் தமது அணிகளை தக்கவைக்க பின்வாங்கிவிடவேண்டும் என்பது பிரதான உபாயமாக இருந்திருக்கிறது.

**ஆனால் படையினரின் பலம் கொண்ட போர்முனையில் போரிடும் புலிகள் தமது ஆட்பல இழப்பையும் தவிர்க்கும் வகையில் உபாயங்களை வகுத்து சண்டையிட்டுவருகின்றனர். படையினரின் வலிந்து சண்டைக்கிழுக்கும் உத்திகளுக்குள்ளும் சிக்காமல் நழுவிச் செல்கின்றனர்.**

புளியங்குளம் நோக்கி முன்னேறிய படையினரை புலிகள் கடுமையாக எதிர்த்து தடுத்து நிறுத்தினர். அச்



"எதிரியின் பலவீனத்தை அறி. அதிலேயே ஓங்கி அடி"
-பிரபாகரன்-

சமரில் படையினருக்கே புலிகளைவிட அதிக இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. படையினர் மூர்க்கமாக முன்னேறியபோது புலிகள் தமது அணிகளை முரட்டுத்தனமான மோதலில் ஈடுபடுத்தி இழப்புக்களை எதிர்நோக்காமல் பின்னெடுத்தனர்.

படையினர் வன்னியில் தமது முழுப்பலத்தையும் திரட்டி முன்னேற முடியும். ஆனால் அதற்கான விலையாக ஆட்பலத்திலும், படைக்கல பலத்திலும் பாரிய சேதங்களையும், இழப்புக்களையும் சந்தித்தே ஆகவேண்டும். அது மட்டுமல்லாமல் தமது முழுப் பலத்தையும் வன்னியில் முடக்கி வைத்துக் கொண்டு நீண்டகால போரில் அங்கு ஈடுபட்டுக்கொண்டிருக்க வேண்டிய தேவையும் ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் புலிகள் ஏனைய பகுதிகளில் தமது தாக்குதல்களையும், பலத்தையும் விரிவு படுத்திச் செல்வர்.

எவ்வாறு நோக்கினும் வன்னிச் சமர் போரின் முடிவல்ல. அங்கு பெறப்படும் வெற்றி தோல்விகள் நிரந்தரமானவையும் அல்ல என்பதே இராணுவ ஆய்வாளர்களின் ஒருமித்த கருத்தாக அமைந்துள்ளது.

**புலிகளுடன் அரசியல்ரீதியில் பேச்சு நடத்த தயார் என்று அரசு கூறினாலும், அக் கூற்று உலகத்தின் முன்பாக உதட்டளவில் கூறப்படும் கூற்றேயாகும்.**


தற்போதைய நிலையில் புலிகளும் பேச்சுக்கு முன்வரமாட்டார்கள். ஆயுதத்தை கைவிட்டு வந்தால் ஆட்டம் முடிந்துவிடும் என்பதை ஏனைய தமிழ் கட்சிகளின் அனுபவங்களில் இருந்து புலிகள் புரிந்துகொண்டுள்ளனர். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடாக பேச்சு நடத்த தயாராக இருப்பதாக புலிகள் அறிவித்துள்ளனர். அதற்கு



"கெரில்லாக்கள் தங்கள் பலத்தை தக்கவைத்தல் பிரதானமானதாகும். சாதகம் இல்லாத களங்களில் கெரில்லாக்கள் போரிடக்கூடாது."
-சேகுவேரா-

அரசு முன்வராது. அப்படிப் பேச்சு நடத்தினால் 'போர் மூலம் புலிகளை ஒடுக்கிய அரசு' என்ற அபிப்பிராயம் அடிபட்டுப் போய்விடும் என்றே அரசு நினைக்கிறது. எனவே போரும் அவலங்களும் தற்போதைக்கு தொடர்கதையாகவே இருக்கும் என்பது தெளிவு. ■

# பாராளுமன்றக் கட்சிகள் என்பது பெருமையா?



**பா**ராளுமன்றம் 'கோரம்' இல்லையென்று ஒத்திவைக்கப்பட்டதென்று செய்திகள் கண்டிருப்பீர்கள். பாராளுமன்றக் கூட்டம் நடைபெறவேண்டுமானால் குறைந்த பட்சம் 20 உறுப்பினர்களாவது பங்குகொள்ள வேண்டும். இருபது பேர் இல்லையானால் பாராளுமன்ற மணி ஒலிக்கும்.

உணவு விடுதிகளிலோ அல்லது பாராளுமன்ற கட்டடத்தில் வேறு எங்காவது அரட்டையிலோ இருக்கும் உறுப்பினர்கள் மணி ஒலிப்பதைக் கேட்டு வந்து சேருவார்கள். அப்படியும் வராவிட்டால் ஒத்திவைப்புத்தான்.

பாராளுமன்றத்துக்கு இப்போது முன்பு போல முக்கியத்துவமில்லை. ஜனாதிபதி ஆட்சிமுறை இருப்பதால் பாராளுமன்றம் அதிகாரமில்லாத ஒரு அமைப்பாகிவிட்டது.

பாராளுமன்றம் அதிகாரமில்லாததாக மாறியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் அதிக வசதிகளைப் பெறுசிறவர்களாக மாறியிருக்கிறார்கள். அதுதான் இன்றைய நிலை.

பாராளுமன்ற ஜனநாயகம் நம்நாட்டில் ஒரு பேருக்குத்தான் இருக்கிறது. பாராளுமன்றத்தில் பேசப்படும் உரைகளைப் படிக்கும் மக்கள் ஏதோ அரசின் செவிகளிலேயே நேரடியாக சொல்லப்படும் விடயங்களாக அவற்றை நினைக்கின்றனர். ஆனால் உண்மையில் பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயங்களை கூர்ந்து கவனிப்பதோ, கூறப்படும் குறைகளை செவிமடுத்து கேட்டு நிவர்த்தி செய்யும் நடைமுறையோ இல்லாதொழிந்து வருகிறது. ஆக, பாராளுமன்ற உரைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகவே மாறி வருகின்றன.

பாராளுமன்றத்துக்கு சென்று உரையாற்றுவதே மறுநாள் பத்திரிகைகளில் செய்தியாக வருவதற்காகத்தான் என்று நினைக்குமளவுக்கு வந்துவிட்டது. உரைகளைப் படிக்கும் மக்கள் தமது பிரதிநிதி காரசாரமாகத்தான் உரையாற்றி இருக்கிறார். துணிச்சலோடு பிரச்சனைகளை புட்டுப் புட்டு வைத்துள்ளார் என்றே நினைப்பர்.

குறிப்பிட்ட பிரதிநிதி உரையாற்றும்போது பாராளுமன்ற நாற்காலிகள் பெரும்பாலும் காலியாகவே இருந்தன என்பதை மக்கள் அறியார். பாராளுமன்ற உரைகளை மேலே பலகனியில் இருக்கும் பத்திரிகையாளர்கள் தான் சிரத்தையுடன் குறிப்பெடுத்துக் கொண்டிருப்பர்.

பாராளுமன்றம் மூலம் காரியம் ஆகாவிட்டாலும் ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி அதனை பத்திரிகைகள் வாயிலாக வெளியிடவைக்கும் களமாக அமைகின்றன.

தமிழ்க் கட்சிகள் குறிப்பாக வடக்கு-கிழக்கு கட்சிகள் நிலைதான் பரிதாபம். 'பாராளுமன்றம் மூலம் இனப்பிரச்சனை தீரப்போவதில்லை. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளும் கிட்டப் போவதில்லை' என்று கூறிய கட்சிகள் தம்மை பாராளுமன்ற கட்சிகள் என்று அழைப்பதில் இன்று பெருமை கொள்கின்றன.

பாராளுமன்றம் மூலம் பிரச்சனைகளை தீர்க்கலாம் என்பதுபோலவும், பாராளுமன்ற உரைகளில் விஷயம் உள்ளதுபோலவும் தமிழ் மக்களை நம்பவைப்பதில் முன்னாள் போராளி இயக்கங்களான இந்நாள் கட்சிகள் கவனம் செலுத்துகின்றன.

மக்கள்மீதான படையினரின் தாக்குதல்கள், அன்றாட அவலங்கள் போன்ற பிரச்சனைகளுக்கு மக்களைத் திரட்டி போராட்டம் நடத்த இக் கட்சிகள் தயாராக இல்லை. வெகுஜனப் போராட்டங்களை ஒழுங்கமைக்கும் கட்சி அமைப்பும், பலமும் இவற்றிடம் இல்லை. அதனால் பாராளுமன்ற உரைகளை போராட்ட வடிவங்களாகவும், தமது துணிச்சலான நடவடிக்கைகளாகவும் சித்தரிக்க இக் கட்சிகள் முனைவதைக் காணலாம்.

பாராளுமன்றத்தை நம்பியிருந்தால் பிரச்சனை தீராது. மக்கள் தமது உரிமைகளுக்கு தாமே போராடவேண்டும். வெகுஜன எழுச்சிகள் தோன்றவேண்டும். அவற்றுக்கு துணையாக பாராளுமன்றத்திலும் குரல் கொடுக்கலாம். அதைவிடுத்து பாராளுமன்ற மாயையில் மக்களை ஆழ்த்தி வைத்திருக்கவும், வரும் தேர்தலில் மீண்டும் அங்கு செல்லக்கூடிய ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளிலுமே தமிழ் கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

அதனால்தான் தம்மை பாராளுமன்றக் கட்சிகள் என்று அழைத்துக் கொள்வதை இக் கட்சிகள் விரும்புகின்றன.

பாராளுமன்றக் கட்சி என்றால் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட கட்சி. பாராளுமன்றம் மூலம் மாற்றங்கள் கொண்டுவரலாம் என்னும் கொள்கையுடைய கட்சி என்றே அர்த்தம். தமிழ் கட்சிகள் பாராளுமன்றக் கட்சிகளாக தம்மை கருதிக் கொண்டால் அவற்றால் இனிமேல் செய்யக் கூடியது எதுவும் கிடையாது என்ற முடிவுக்கே நாம் வரமுடியும்.

ஏனெனில் மக்களின் அவலங்களை ஒரு சிறந்த உரையாக தயாரித்து பாராளுமன்றத்தில் உரையாற்றுவதுடன் இவர்கள் பணி முடிவடைந்துவிடும். ஆனால் பிரச்சனைகள் தீராது.

பாராளுமன்ற கட்சி என்று பிரிட்டனில் உள்ள கட்சி ஒன்றோ, அமெரிக்காவில் உள்ள கட்சி ஒன்றோ தம்மை அழைத்துக் கொள்வதில் பெருமை இருக்கலாம்.

ஆனால் நம்நாட்டில் பிரச்சனைகளின் தீர்வு பாராளுமன்ற விவாதங்களிலோ, பாராளுமன்ற வளாகத்துக்குள்ளோ கிடைக்கப் போவதில்லை.

போராட்டம் என்னும்போது ஆயுதம் ஏந்தாத போராட்ட வடிவங்களும் உள்ளன. மக்களை திரட்டி அவர்களது அன்றாட பிரச்சனைகளுக்கு எதிராக வீதி ஆர்ப்பாட்டங்கள் நடத்துதல்கூட ஒரு போராட்டம்தான். இத்தகைய போராட்டங்கள் எல்லாம் வெற்றியாக முடியுமா? என்று கேட்கலாம். வெற்றியாக முடியாவிட்டாலும் மக்களிடம் விழிப்புணர்வையும், அடிபணியும் மனோபாவங்களை இல்லாதொழிப்பதையும் அப்போராட்டங்கள் பயனாகத் தரும்.

தமிழ் கட்சிகள் இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் உள்ளன. பந்தா-பகட்டு-பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது மூலம் ஒரு கௌரவம், தங்களுக்கு உயர் மட்டங்களுடன் உள்ள பரிச்சயத்தை நாலுபேர் அறியச் செய்வதில் நாட்டம் என்பவையே பாராளுமன்ற அரசியலை நாடும் கட்சிகளின் முக்கிய குணாம்சமாகும்.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க்கட்சிகள் மறுபடியும் பாராளுமன்றம் செல்வதற்கான, பாராளுமன்ற அரசியல் நடத்துவதில் கவனம் கொள்கின்றன. பாராளுமன்றத்துக்கு செல்ல இம்முறை வாய்ப்பு கிடைக்காத கட்சிகள் அடுத்த முறையாவது ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கின்றன. அதற்கேற்ப தம் அரசியலை வகுத்துக் கொண்டுள்ளன.

பாராளுமன்ற அரசியல் என்பது மக்களை தூக்கத்தில் வைத்திருக்கவும், பாராளுமன்றத்தில் உங்கள் பிரச்சனையை பேசிவிட்டோம் என்று பாதிக்கப்பட்ட மக்களின் எழுச்சிகளை திசைதிருப்பும் ஒன்றாகவுமே தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை அமைந்துள்ளது.

ஆனால் பாராளுமன்றம் போதிய உறுப்பினர்கள் வரவு இன்றி ஒத்திவைக்கப்பட்ட செய்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே பாராளுமன்ற நடைமுறைகளில் ஆர்வம் இல்லையென்பதையே காட்டியிருக்கிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி 59

தருவது ரசிகன்

பாகம் 2

**பூலான்தேவியை** கடந்த வாரம் கிராமம் ஒன்றுக்கு கொண்டு செல்கிறார்கள். கடல் நடுவே வேராவை சுட்டுக் கொல்கிறார்கள். பூலானை ஸ்ரீராமின் சகோதரன் லாலாராம் பாலியல் வேட்டைக்கு இரையாக்குகிறான். குசுமா பூலானை அவமானப்படுத்த ஸ்ரீராமிடம் யோசனை சொல்கிறாள். இனி....



பூலான்

குசுமா சொன்ன யோசனையைக் கேட்டதும் ஸ்ரீராமின் உதட்டில் அசிங்கமான சிரிப்பொன்று தொங்கியது.

அந்த யோசனையைச் சொன்னதற்காக குசுமாவின் திரண்ட பின்புறங்களில் தன் கையொன்றால் தட்டிக்கொடுத்து சிலாகித்தான்.

குசுமா சொன்ன யோசனை கொடூரமானது. "கிராமத்தவர்கள் முன்னிலையில் பூலானை நிறுத்த வேண்டும். அவர்கள் முன்பாகவே அவளை அணு அணுவாகச் சித்திரவதை செய்ய வேண்டும். கிராமத்தவர்களிடமே அவளை தண்டிக்கும் பொறுப்பை கொடுத்துப் பார்க்க வேண்டும். அதுதான் பூலானுக்கு மறக்க முடியாத பாடமாக இருக்கும்" என்பதுதான் குசுமா சொன்ன யோசனை.

பூலானை அனுபவிக்கும் ஆசையில் தமக்குள் மோதிப் புரண்டுகொண்டிருந்த தனது ஆட்களை கட்டுப்படுத்த துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டு சத்தம் எழுப்பினான் ஸ்ரீராம்.

வேட்டோசை கேட்டதும் அவர்கள் எல்லோரும் திகைத்து நின்றார்கள். பொலிஸ்தான் வந்துவிட்டதோ என்ற பயத்தில் சிலர் தப்பியோடவும் வழிபார்த்தார்கள்.

ஸ்ரீராமின் குரல் அவர்களை தடுத்து நிறுத்தியது. "ஏனடா ஒரு சிறுக்கிக்காகவா இப்படி அடிபட்டுச் சாகிறீர்கள்? இவளைவிட சோக்கான சிறுக்கிகளையெல்லாம் காட்டுகிறேன். இவளை என்ன செய்கிறேன் பாருங்கள்? வா குசுமா"

குசுமாவுடன் குடிசைக்குள் புகுந்தான் ஸ்ரீராம். பூலான் அப்படியே தரையில் கிடந்தாள். நாவெல்லாம் வரண்டு தாகம் எடுத்தது. ஸ்ரீராமும், குசுமாவும் மங்கலாகத் தெரிந்தார்கள். அவர்கள் இருவரும் தன்னைப் பார்த்து சிரிக்கிறார்கள் என்பது லேசாகப் புரிந்தது.

ஸ்ரீராம் பூலான் அருகே அமர்ந்து அவள் தலையைப் பிடித்து உலுக்கினான். "என்னடி நடிக்கிறாயா? கண்ணைத் திறந்து பாரடி?" என்றான். அவள் கண்களைத் திறக்கவில்லை. அவள் மார்புகளை தன் கைகளால் திருகினான். குசுமா ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து பூலானின் முகத்தில் ஊற்றினாள்.

பூலானுக்கு மூச்சு அடைப்பதைப் போல இருந்தது. முகத்தில் தண்ணீர்பட்டதால் சற்றுத் தெம்பு வந்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. அவர்களிடம் கேட்கக்கூடாது என்ற பிடிவாதத்தால் தாகத்தைத் தாங்கிக்கொண்டாள்.

ஸ்ரீராம் பூலானை அப்படியே தூக்கி தன் தோளில் போட்டுக்கொண்டு குடிசைக்கு வெளியே வந்தான்.

குடிசைக்கு வெளியே நின்ற ஸ்ரீராமின் ஆட்கள் ஸ்ரீராமின் தோளில் கிடந்த பூலானின் உடலை வெறித்துப் பார்த்தார்கள்.

பூலானுக்கு விழிப்பு வந்துவிட்டது. அவள் கால்களை உதறினாள். கால்கள் கட்டப்பட்டுக்கிடந்தன. கைகளும் கட்டப்பட்டிருந்தன. தன் உடம்பில் துணியே இல்லை என்பதை உணர்ந்ததும் உடம்பெல்லாம் கூசிக்குறுகியது.

கிராமத்து ஆட்களும் அங்கே கூடிவிட்டார்கள். பூலானை அந்தக் கூட்டத்தின் மத்தியில் இறக்கி தரையில் போட்டான் ஸ்ரீராம்.

அத்தனை கண்களும் அவள் உடலை மேய்ந்தன. அத்தனை கண்களும் எலும்புத் துண்டை ஆசையோடு பார்க்கும் நாய்கள் போல அவள் உடலை வெறியோடு பார்த்தன.

பூலானுக்கு தன் உடம்பெங்கும் கம்பளிப் பூச்சிகள் ஊர்வதுபோல இருந்தது. அவள் கூனிக்குறுகி, தன் கால்களை ஒன்றாகச் சேர்த்துக் கொண்டும், கட்டப்பட்டிருந்த கரங்களை மார்புக்கு குறுக்காக வைத்துக் கொண்டும் மறைப்புத் தேடினாள்.

"டேய்! நீங்களெல்லாம் தாய்க்குப் பிறந்தீர்களா? நாய்க்குப் பிறந்தீர்களாடா... நாய்களே!" என்று கத்தவேண்டும்போல, கேட்கவேண்டும் போல இருந்தது. எல்லாக் கேள்வியும் தொண்டைவரை வந்து அடங்கிப்போனது. பேசுவதற்கு அவள் உதடுகளுக்கு பலம் இல்லாமல் போயிருந்தது. போராடுவதற்கு அவள் கைகளுக்கும், கால்களுக்கும் வலு இல்லாமல் போயிருந்தது. என்ன இது, காதுகள் அடைத்துவிட்டனவா? தெரியவில்லை. நாவு ஒட்டிக்கொண்டதா, அல்லது அதனையும் வெட்டிவிட்டார்களா..? ஐயோ..! இருக்கிறது... நா இருக்கிறது...

ஸ்ரீராம் வெறிபிடித்த நாய் குரைப்பது மாதிரி எக்காளமிட்டுச் சிரித்தான். அந்தச் சிரிப்புச் சத்தம் பூலானுக்கு கேட்கவில்லை. அவன் பல்லை இளிப்பது மட்டும் பாவனையாகத் தெரிந்தது.

ஸ்ரீராம் தன் ஆட்களையும், கூட்டத்தினரையும் பார்த்து கைகளை ஆட்டிக்கொண்டு உரத்த குரலில் பேசினான்;

"கீழ்சாதிக்கார மல்லாவுடன் சேர்ந்து எங்கள் சாதிக்காரர்களை ஆட்டிப்படைக்க நினைத்தவள் இந்த சிறுக்கி. இவளும் மல்லாவின் சாதிக்காரிதான். மேல் சாதிக்காரர்களைச் சீண்டினால் என்னாகும் என்று இந்தச் சிறுக்கிக்கு தெரிய வேண்டுமா வேண்டாமா?"

"தெரியவேண்டும்" என்று ஸ்ரீராமின் ஆட்களும், கூடியிருந்த கிராமத்து ஆண்களும் ஆவேசமாகக் கத்தினார்கள்.

பூலானை தண்டிப்பதைவிட அவளைத் தொட்டுப் பார்த்துவிட வேண்டும் என்ற வெறிதான் அந்தக் கூட்டத்திடம் மேலோங்கி நின்றது.

ஸ்ரீராம் அடுத்துக் கூறிய சொற்கள் கூட்டத்தினரிடம் மகிழ்ச்சி ஆரவாரத்தை ஏற்படுத்தியது.

"நீங்களே இவளை கவனித்துக் கொள்ளுங்கள். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். உயிரை மட்டும் எடுக்காதீர்கள். அடுத்த கிராமங்களுக்கும் இவளைக் கொண்டுபோய் காட்ட வேண்டும்" என்றான் ஸ்ரீராம்.

அவன் கூறி முடிப்பதற்கிடையிலேயே பூலானை அவர்கள் மொய்த்துக் கொண்டனர்.

காமவெறி அவர்கள் ஒவ்வொருவரையும் மிருகமாக்கியிருந்தது. சாதிவெறி அந்த மிருகங்களை உசுப்பேற்றியது.

பூலானுக்கு அவர்கள் தன்னை மொய்ப்பது தெரிந்தது. தன் உடம்பெங்கும் பல கைகள் பரவுவதை அவள் உணர்ந்தாள்.

அவளை மல்லாக்காகத் தள்ளுவதற்கு முயன்றார்கள். அந்த முயற்சியை தடுக்க அப்படியே தரையோடு குப்புறக் கவிழ்ந்து கொண்டாள்.

அவர்கள் பூலானின் தலை முடியைப் பிடித்து தூக்கினார்கள். பின்புறமாக இழுத்துத் தூக்கப்பட்டவளை ஒருவன் தன்னோடு சேர்த்து இறுக்கி வைத்துக்கொள்ள, வெறியுடனும், வேகமுடனும் பூலானின் முன் உடலில் கைகள்... கைகள்... கைகள்.

எதிர்க்க முடியாத பூலான், தன் இனிய காதலன் கண்ணெதிரே மாண்டுபோன சோகத்தில் இருந்து மீளமுடியாத பலவீனமான பூலான், மல்லா இறந்து இன்றோடு இரண்டு நாட்களாகியும் சாப்பாடோ, ஒரு சொட்டுத் தண்ணீரோ இன்றி நலிந்துபோன பூலான், யாருமே தடுக்க இல்லாமல் பல கரங்களால் துவைபட்டுக்கொண்டிருந்தாள்.

அவள் தலை தொங்கியது. பூலான் மயங்கிப்போனாள். சுயநினைவை இழக்க முன் மல்லாவையும், துர்க்கையம்மனையும் நினைத்துக் கொண்டாள்.

பூலான் துவண்டுபோன பின்பும் அவர்கள் அவள் உடம்பெங்கும் கைகளால் அலைந்தார்கள். நாய்கள்போல முகர்ந்தார்கள்.

"தண்ணீர் கொண்டுவந்து கொட்டுங்கடா" என்று கத்தினார்கள் "செத்துப் போனாளடா;" என்று கூவினான் இன்னொரு தடியன்.

ஸ்ரீராம் கூட்டத்தை விலக்கிக்கொண்டு பூலான் அருகே வந்தான். "போதும் விலகுங்கள்" என்றான். தண்ணீர் கொண்டுவரச் செய்து அவள் முகத்தில் ஊற்றினான்.

பூலான் மெல்ல மெல்லக் கண் திறந்தாள். அவள் வாயைப் பிரித்து தண்ணீர் ஊற்றினான் ஸ்ரீராம்.

தண்ணீர் உள்ளே இறங்க தாகம் தீர்ந்தது. சிறிது பலம் தேகத்தில் வந்தது. கண்களை நன்றாகத் திறந்து பார்த்தாள்.

ஸ்ரீராம் அவள் கட்டுக்களை அவிழ்த்தான். கட்டவிழ்ந்ததும் இரண்டு கைகளும் வலித்தன. கால் கட்டுக்களும் அவிழ்க்கப்பட்டன.

"எழுந்து நில்லடி" என்றான் ஸ்ரீராம். பூலான் தன் கைகளை மார்புக்கு குறுக்காகக் கட்டியபடி அசையாமல் கிடக்க, "இவளை தூக்கி நிறுத்துங்கடா" என்றான் தன் ஆட்களிடம் ஸ்ரீராம்.

பூலானை இருபுறமும் பிடித்து தூக்கி நிறுத்தினார்கள் இரண்டுபேர்.

தன் துப்பாக்கிமுனையை பூலானின் தாடையில் வைத்து நிமிர்த்தினான் ஸ்ரீராம்.

"அடியே சிறுக்கி, உன் மல்லாவை அந்தக் கீழ்ச்சாதி நாயை நான்தானடி சுட்டேன். இந்தப் பண்ணையார் சிங்கந்தானடி சுட்டது. உனக்கு ரோஷம் இருந்தால் அதைக் காட்டு. இந்தத் துப்பாக்கியை தரையில் போடுகிறேன். முடிந்தால் இதனை எடுத்துக்கொள். உன் சாதித் திமிரைப் பார்க்கலாம்."

பூலானுக்கு முன்பாக பத்துப் பன்னிரண்டு அடி தூரத்தில் தரையில் துப்பாக்கியைப் போட்டான் ஸ்ரீராம்.

"போடி... ஓடு.. எடு.. முடிந்தால் எங்களைத் தாண்டிப்போய் எடு... கடைசிச் சந்தர்ப்பம். ரோஷம் உள்ள சாதிக்காரி என்றால் எடடி பார்க்கலாம்."

ஸ்ரீராம் வேண்டுமென்றே சீண்டினான். அவன் சாதியை இழுத்ததால் பூலானுக்கு இரத்தம் கொதித்தது.

ஸ்ரீராம் சொன்னதைக் கேட்டு கூடியிருந்தவர்களெல்லாம் கொக்கரித்தார்கள். அதுவும் பூலானுக்கு கொதிப்பை ஏற்றியது.

பூலானின் கண்கள் தனக்கு எதிரே போடப்பட்டுக்கிடந்த துப்பாக்கியை நோக்கின.

'இப்படியே இவர்கள் முன் அவமானப்பட்டுக் கொண்டிருப்பதைவிட, போராடிச் சாகலாம்' பூலான் நினைத்துவிட்டாள்.

பூலான் முடிவு செய்துவிட்டாள்.

தண்ணீர் பருகியதால் உடலில் சிறிது உணர்ச்சியும், வலுவும் ஏற்பட்டிருந்தன.

துப்பாக்கியை எடுப்பதென்றால் ஸ்ரீராமைத் தாண்டித்தான் போகவேண்டும்.

கூட்டம் இரண்டாக பிளந்து வழிவிட்டு நின்றது. வெறும் உடம்புடன் பூலான் துப்பாக்கியை நோக்கி ஓடும் காட்சியைக் காண ஆவலாய் நின்றது.

பூலான் தன் கால்களை சேர்த்து வைத்துக்கொண்டு நின்றாள். அவள் கைகள் மார்புகளை மறைத்துக் கொண்டிருந்தன. அவள் கண்கள் மட்டும் தன்னைச் சுற்றி நிற்கும் கூட்டத்தை நோக்கி வெறுப்பை உமிழ்ந்தன.

அந்த நிலமையிலும் பூலான் நினைத்தாள்; "செத்தால் இங்கேயே சாவேன், தப்பினேன் என்றால் இந்தக் கிராமத்தையே அழிப்பேன்!"

சட்டென்று திமிறிய பூலான் தன்னைப் பிடித்திருந்தவர்களை உதறிவிட்டு துப்பாக்கியை நோக்கி ஓடினாள்.

துப்பாக்கியை அவள் நெருங்கிவிட்டாள். இன்னும் மூன்றடி வைத்தால் துப்பாக்கி அவள் கையிலிருக்கும்.

பூலான் ஒரே பாய்ச்சலாக சென்றாள். துப்பாக்கியை அவள் நெருங்கும் கட்டத்தில் அவள் கால்களுக்கு முன் தன் இடது காலை நீட்டினான் ஸ்ரீராம்.

பூலான் அவன் காலில் தடுக்கி அப்படியே குப்புற விழுந்தாள்.

கூட்டம் கெக்கலித்தது.

ஸ்ரீராம் இரைந்து நகைத்தான்.

தரையில் கிடந்த துப்பாக்கியை தன் கையில் எடுத்துக் கொண்டான்.

குப்புற விழுந்துபோன பூலானுக்கு அவர்கள் நகைப்பது கேட்டது. கெட்ட வார்த்தையால் அவளை திட்டுவது கேட்டது. அவளைப் பற்றி அவள் உடம்பைப் பற்றி கெட்டதனமாக ஏதோ சொல்லிக் கெக்கட்டம்போட்டு அவர்கள் இரைந்து நகைப்பதெல்லாம் கேட்டது.

பூலானுக்கு நெருப்பிலே கிடப்பதுபோலிருந்தது. ஆனாலும் அவள் மனதில் மல்லா.. அவள் உயிருக்கு உயிரான மல்லா சொன்ன கடைசிவார்த்தை எதிரொலித்தது;

"எந்த நிலையிலும் தைரியத்தை இழக்காதே பூலான்"

இப்போது அவளுக்குள் ஆற்றாமை மறைந்து ஆவேசம் கிளர்ந்தது.

"இன்று கேட்கும் இந்த எக்காளம் இதே கிராமத்தில் மரண ஓலமாக கேட்க வேண்டும். சாவுக்குரல்கள் கேட்கும். கேட்க வைப்பேன். அதுவரை தாங்குவேன். என்ன நடந்தாலும் தாங்குவேன். என் துர்க்கையம்மா! இந்த நரகத்தில் இருந்து என்னை காப்பாற்றத்தான் உன்னால் முடியவில்லை. இந்த கொடுமைகளை தாங்கும் உறுதியையாவது என் உயிருக்கும், உடலுக்கும் தந்துவிடு. தந்துவிடு."

ஸ்ரீராமின் உத்தரவுப்படி பூலானை மீண்டும் தூக்கிப் போய் குடிசைக்குள் போட்டார்கள். அன்றிரவு பூலானையும் தூக்கிக்கொண்டு வேறொரு கிராமத்துக்குச் சென்றார்கள்.

அங்கும் பூலானை மட்டும் தனியாக ஒரு அறையில் போட்டு பூட்டி வைத்தார்கள்.

மூன்று நாட்களாக உணவு எதுவும் கொடுக்காமல் தண்ணீர் மட்டுமே கொடுத்து வைத்திருந்தார்கள். "உடலில் பலம் வந்தால் பத்ரகாளியாகிவிடுவாள்" என்று ஸ்ரீராம் எச்சரித்திருந்தான்.

மூன்றாம் நாள் இரவு பூலானை வைத்திருந்த அறைக்கதவு திறந்தது.

உள்ளே வந்தவனை பூலான் அதற்கு முன்னர் கண்டதேயில்லை.

நடுத்தரவயதில், வாட்டசாட்டமான உடம்புடன் வந்தவனை பார்த்தவுடனேயே அந்தக் கிராமத்தின் பண்ணையாளர்களில் ஒருவன் தான் என்று புரிந்து கொண்டாள் பூலான்.

அவன் கதவை மூடி உட்புறம் தாழிட்டான். பூலானை நோக்கி நகர்ந்தான்.

"பயப்படாதே, உனக்கு உதவத்தான் வந்திருக்கிறேன்" என்றான்.

**(தொடர்ந்து வரும்)**

## இஸ்ரேலிய பெண்களின் நாயகன்!

இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சனை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படவில்லையா? என்று பலர் எழுதியும், பேசியும் உதாரணத்துக்கு இழுத்தார்கள். பிரச்சனை இன்றுவரை தீரவில்லை என்பதுதான் மெத்தச் சரி.

இஸ்ரேலியர்கள் மத்தியில் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான குரோதம் இன்னமும் கொளுந்துவிட்டெரிகிறது. அதற்கு மாறாக இஸ்ரேலிய ஆட்சியாளர்களால் எதுவும் செய்ய இயலாது.

இஸ்ரேலிய இளம் தலைமுறைகூட பாலஸ்தீனர்கள்மீது பயங்கர விரோதத்தில் தான் இருக்கிறது. அதற்கு ஒரு சமீபத்திய உதாரணம் என்ன தெரியுமா? இஸ்ரேலிய பிரதமராக இருந்த ராபினை சுட்டுக் கொன்ற இளைஞரின் பெயர் இகால் அமீர். தற்போது ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கிறார்.

சிறையில் உள்ள இகால் அமீரை இஸ்ரேலியர்கள் வெறுக்கிறார்கள் என்றா நினைக்கிறீர்கள்?. அதுதான் இல்லை. பல நூற்றுக்கணக்கான இஸ்ரேலியப் பெண்கள் இகாலை தங்கள் ஹீரோவாக நினைக்கிறார்கள். அதுமட்டுமல்ல அவரையே கல்யாணம் பண்ணத் தயார் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்கள்.



எல்லோருமே பணக்கார யூதக் குடும்பப் பெண்கள். அமெரிக்காவில் உள்ள யூதப் பெண்களும் இகாலை மணக்க விரும்பி விண்ணப்பம் போட்டுள்ளனர். இத் தகவலை இஸ்ரேலிய செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

"சிறையிலுள்ள இகால் பைபிள் படித்துக் கொண்டிருக்கிறார். தற்போதைக்கு திருமணம் பற்றியே அவர் நினைக்கத் தயாராயில்லை!" என்று கூறியிருக்கிறார் இகாலின் உறவினர்.

## ஒரு சந்தேகம்-ஒரு கொலை

**கா**லம் ரொம்பத்தான் கெட்டுப் போச்சு. விவகாரமான சந்தேகத்தால் ஒரு விபரீதமே நடந்து முடிந்துவிட்டது.



செரில்

அமெரிக்காவில் ஃபுளோரிடா மாநிலத்தில் வசித்தவர் செரில். அவரது கணவர் பெயர் மினெல்லி. அவர் ஒரு குத்துச் சண்டை வீரர்.

செரில் ஒரு விளையாட்டு வீராங்கனை. 'அமெரிக்கன் கிளாடியேட்டர்ஸ்' என்ற தொலைக்காட்சித் தொடரிலும் கதாநாயகியாக நடித்தவர்.

உடற்பயிற்சி நிலையம் ஒன்றிலும் பயிற்சியாளராக பணிபுரிந்தார் செரில். அங்கு இளம் வீராங்கனையொருவருக்கு பயிற்சி கொடுத்தார். அடுத்த ஒலிம்பிக் போட்டிக்காக அந்த வீராங்கனையை தயார் படுத்திக் கொண்டிருந்தார் செரில்.

அந்த வீராங்கனையும் செரிலும் உயிர்த் தோழிகள். அதுதான் வம்பாக முடிந்திருக்கிறது. அவர்கள் இருவரும் நட்பாக இருப்பதைத் தப்பாக நினைத்துவிட்டார் செரிலின் கணவர் மினெல்லி.

மனைவியின் போக்கில் சந்தேகப்பட்ட மினெல்லி அவரைக் கண்காணிக்கத் தொடங்கினார். அவரது சந்தேகக் கண்ணுக்கு மனைவியின் போக்கு தொடர்ந்து தப்பாகவே பட்டது. அந்த இளம் வீராங்கனையுடன் செரிலுக்கு தப்பான தொடர்பு இருப்பதாக திட்டவட்டமாக தீர்மானித்துவிட்டார்.

இறுதியாக மினெல்லியின் சந்தேகத்தை கொலை வெறியாக்கியது, ஒரு தொலைபேசி உரையாடல். உடற்பயிற்சி நிலையத்தில் இருந்து தனது கணவருடன் செல்லுலார் போனில் பேசிய செரில் அன்று வீட்டுக்கு வர நேரமாகும் என்று தகவலை தெரிவித்தார்.

தனது மனைவி உடற்பயிற்சி நிலைய தொலைபேசியில் பேசாமல் செல்லுலார் போனில் பேசியதை கண்டுபிடித்த மினெல்லி, அந்த வீராங்கனையுடன் பொழுதைக் கழிக்கிறார் செரில் என்று நினைத்து கடும் கோபத்தில் இருந்தார்.

அன்றிரவு வீட்டுக்கு வந்த செரிலை கழுத்தை நெரித்து, காய் கறி வெட்டும் கத்தியால் குத்தினார் மினெல்லி. செரில் தப்பியோட முயல மேலும் சில குத்துக்கள் விட்டார். செரில் செத்துப்போனார்.

இப்போது குத்துச்சண்டை வீரரான மினெல்லி தீர்ப்பை எதிர்பார்த்து கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.

தன்னுடைய சந்தேகம் தவறானது என்பதையும் சிறைக்குள் உள்ள மினெல்லி எப்படியோ அறிந்துகொண்டு செரிலை நினைத்து கண்ணீர் விடுகிறாராம். கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்.

## டயானாவின் புதிய காதலர்!

### பரபரப்பு ஏற்படுத்திய புகைப்படங்கள்

இளவரசி டயானாவின் காதலர்களின் பட்டியல் வெகு நீளம். தற்போது அந்தப் பட்டியலில் இடம்பிடித்திருப்பவர் பிரபல முஸ்லிம் வர்த்தகர். அவரது பெயர் முகமது அல் டோடி ஃபயட். இதற்கு முன்னர் பாகிஸ்தான் டாக்டர் ஒருத்தரை காதலித்தார் டயானா. இருவரும் டாக்டரின் பங்களாவில் தனிமையில் இனிமை கண்டனர். தற்போது டாக்டருக்கு பிரியாவிடை கொடுத்துவிட்டார் டயானா.




புதிய காதலரான அல் டோடி ஃபயட் லேசுப்பட்டவரல்ல. மாபெரும் கோடிஸ்வரர். சவுதி அரேபியாவின் ஆயுத வியாபாரியான கசோக்கியின் உறவினர். பமீலாவுடன் ஜாலியாக இருந்த அதே கசோக்கி தான்.

ஐக்கிய அரபுக் குடியரசிலும், எகிப்திலும் அல் டோடி ஃபயட்டுக்கு குடியுரிமை உண்டு. முப்பது ஆண்டுகளாக பிரிட்டனில் வசித்து வருகிறார். எனினும் பிரிட்டன் குடியுரிமை கிடைக்கவில்லை.

பிரிட்டனில் மட்டுமல்ல, மத்தியதரைக் கடல் பகுதியிலும் சொத்துக்களை குவித்து வைத்திருக்கிறார். பெண்களை சேகரித்ததும், அவர்களுடன் ஜாலியாக கும்மாளமடிப்பதும் அல் டோடி ஃபயட்டின் பொழுதுபோக்குகளில் ஒன்று.

அமெரிக்க விளம்பர அழகி ஒருத்தியையும் டோடி ஃபயட் திருமணம் செய்து கொண்டார். பிரிட்டன் இளவரசர் ஆண்ட்ரூவின் முன்னாள் காதலி உட்பட பல அழகிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர்.

இப்போது டயானாவை வளைத்துப் பிடித்திருக்கிறார். டயானாவும், அல் டோடி ஃபயட்டும் சமீபத்தில் மத்திய தரைக் கடல் பகுதிக்கு உல்லாசப் பயணம் சென்றிருக்கிறார்கள். சற்றுத் தாராளமாக பாய் மரப் படகிலேயே காதல் லீலைகளை நடத்தியது தான் விவகாரமாகிவிட்டது.

எப்படி மோப்பம் பிடித்தாரோ தெரியாது, யாரோ ஒரு கில்லாடியான படப்பிடிப்பாளர் அந்த காதல் லீலைகளை தனது தொலைநோக்கி கமராவால் சுட்டுத் தள்ளிவிட்டார்.

அந்தப் புகைப்படங்களை விலை கொடுத்து வாங்க இலண்டன் பத்திரிகைகள் பலத்த போட்டியிட்டன. 'சன்', 'டெய்லி பெயில்', 'டெய்லி மிர்ரர்', 'பாரிஸ் மேட்ச்' ஆகிய பத்திரிகைகள் தலா ஒரு இலட்சம் ஸ்டெர்லிங் கொடுத்து புகைப் படங்களை வாங்கி சுடச் சுட பிரசுரித்திருந்தன.

ஒரு படத்தில் கறுப்புக் கண்ணாடியுடன் மேல்சட்டை போடாத உடலுடன் நிற்கும் டோடி ஃபயட் இளவரசியை அள்ளி அணைத்துக் கொள்கிறார். இன்னொரு படத்தில் டயானா நீச்சல் உடையுடன் அவர் கைகளில் தவழ்கிறார். மற்றுமொரு படத்தில் கோடிஸ்வரருக்கு உதட்டோடு உதடு சேர்த்து முத்தம் கொடுக்கிறார் இளவரசி. இப் புகைப் படங்கள் வெளியானதால் பிரிட்டனில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

'சன்' பத்திரிகை சூட்டோடு சூடாக பிரிட்டனில் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது. பெரும்பாலானவர்கள் டயானாவின் புதிய காதலை வரவேற்றுள்ளார்கள்.

'முத்தம்' என்ற தலைப்பில் 'சண்டே மிர்ரர்' பத்திரிகை, "இளவரசி தன் இளவரசரைக் கண்டு கொண்டார்" என்று எழுதியுள்ளது.

"செப்டம்பர் மாதத்தில் திருமணம்" என்று டயானா தன் தோழிகளிடம் கூறியிருக்கிறாராம். அதற்கிடையே இருவரில் ஒருவர் மனம் மாறாவிட்டால் சரிதான்.



படிப்பகம்

www.padippakam.com



# முடிவு யார் கையில்?

மருத்துவம் இவர்களை காப்பாற்றுமா? விடை சொல்ல முடியாமல் மருத்துவர்களே கையைப் பிசைகிறார்கள். இந்த இரட்டைக் குழந்தைகள் பிறந்து ஐந்து வாரங்கள் சென்றுவிட்டன. இரண்டுமே பெண் குழந்தைகள். இவர்களை வெட்டிப் பிரிக்கும் சத்திர சிகிச்சை செய்தாக வேண்டும். வியட்நாமின் ஹோசிமின் நகர மருத்துவமனையில்தான் இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

1980 முதல் இன்றுவரை ஆறு ஜோடி இரட்டைப் பிள்ளைகளை வெற்றிகரமான சத்திர சிகிச்சை மூலம் ஹோசிமின் மருத்துவமனையில் பிரித்திருக்கிறார்கள். இந்த இரட்டைக் குழந்தைகள் விடயத்தில் மட்டும் மருத்துவர்கள் சற்றுத் தயங்குகிறார்கள். காரணம், இரண்டு குழந்தைகளுக்கும் ஒரே ஒரு இதயம்தான். இருக்கிறது. கல்லீரலும் ஒன்றுதான். ஒரே இதயம் இருப்பதால் வெட்டிப் பிரிக்கும் சிகிச்சை வெற்றியாக முடியுமா இல்லையா? என்பதுதான் சோகமான கேள்வியாக இருக்கிறது. மருத்துவம் உயிர் கொடுக்குமா? ■


போகும் திசை மறந்து போனால் பயணம் தொடருமா? தொடராது. பின்னர் பயணங்கள் முடிவதில்லை என்பதெல்லாம் புலுடாதான்! பாருங்கள் இந்த தடம் புரண்ட ரயில்கள் இனிப் பயணத்தை தொடரமுடியுமா? முடியாதுதானே. இந்த ரயில் தடம் புரண்டதால் 100 பயணிகள் காயமடைந்தனர். அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் இந்த விபத்து நடந்தது. இலக்கை எட்டாத பயணம். ■

# போகும் திசை மறந்து போச்சே!



# கொலைக் கடி

செல்லக்கடி, குறும்புக் கடி, கோபக் கடி என்ற பட்டியலில் டைசன் கடியும் சேர்ந்திருக்கிறது. இங்கே நீங்கள் காண்பது கொலைக் கடி. ஒரே கவ்வு. மீன் காலி. வியட்நாம் நாட்டின் முதலைப் பண்ணையில் இக் காட்சி எடுக்கப்பட்டது. நாம் காண்பதற்கு தத்ரூபமான ஒரு காட்சி கிடைத்தது. பாவம் மீனுக்குத்தான் உயிர் போய்விட்டது. இதற்கு அடுத்த கட்டமாக முதலையின் வாய்க்குள் போய்விட்டது மீன். பிறகென்ன ஏப்பம் தான்! வியட்நாமுக்கு அன்பளிப்பாக கியூபா கொடுத்தது 150 முதலைகள். அவற்றில் பல முதலைகள் செத்துவிட்டன. உயிரோடு உள்ள முதலைகளுக்கு மீன்களை உணவாக கொடுக்கிறார்கள். அப்படியே கடித்து வயிற்றுக்குள் அனுப்பிக்கொண்டிருக்கின்றன அந்த முதலைகள். முதலைக்கு சாப்பாடு மீனுக்கு உயிர் போகிறது.



# தகவல் பெட்டி

ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற சக்கர நாற்காலிப் போட்டியில், தங்கள் சக்கர நாற்காலிகளை வெற்றிச் சக்கரங்களாக மாற்றியவர்கள் இவர்கள். கைகளை உயரத் தூக்கிக் கொண்டு வெற்றிக்கோட்டை நெருங்குகிறார் லூய்சி சாவேக். இவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். 800 மீட்டர் பந்தயம் இது. கைகளின் பலமும், தன்னம்பிக்கையும் வெற்றிக்கு உந்துசக்தியாக அமையும் பந்தயம் இது. நாற்காலி பந்தயத்தில் வெல்ல குறுக்கு வழிகள் உதவலாம், சக்கர நாற்காலிப் பந்தயத்தில் வெல்ல உண்மையான முயற்சிதான் உதவுமுங்கோ. ■


# சக்கர நாற்காலியில் பந்தயம்



# தங்க மங்கையர்

ஐய்யயோ... தலை எங்கே காணோம்... என்று உங்கள் இளகிய இதயங்கள் துடிக்கிறதா? பொறுமை. பொறுமை! இது தண்ணீரில் சாகச விளையாட்டு. தலைகீழாக தண்ணீருக்குள் மூச்சடக்கி நின்றுகொண்டிருப்பவரும் ஒரு கட்டழகிதான். தண்ணீரில் விளையாடும் இந்த மூன்று கட்டழகிகளும் தங்க மங்கைகள்.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான தண்ணீர் சாகசப் போட்டி ஸ்பெயின் நாட்டில் உள்ள செவில்லா நகரில் நடைபெற்றது. மூன்று நாட்கள் நடைபெற்ற போட்டியில் ரஷ்யா முதலிடத்தில் வந்தது. முதலிடம் பெறக் காரணமானவர்கள் இந்த மூன்று மங்கையர்தான். ரசியாவுக்கு தங்கம் பெற்றுக் கொடுத்தார்கள். ஒரு வெள்ளிப் பதக்கம் பெற்றாலே போதும் நம் நாட்டில் அது தலைப்புச் செய்தி. ஆங்காங்கே தங்கத்தை வென்றுவிட்டே ஆர்ப்பாட்டம் இல்லாமல் இருக்கிறார்கள். ■





படிப்பகம்

www.padippakam.com

## மிதுனுடன் வினிதா

நடிகை வினிதாவுடன் ரம்பாவுக்கு ஒரு சின்ன மனக்கசப்பு. இந்திப் படவுலகில் ரம்பாவுக்கு நெருக்கமாக இருந்தவர் நடிகர் மிதுன் சக்கரவர்த்தி. இந்திக்கு போன வினிதா தனது திறமையால் மிதுன் சக்கரவர்த்தியை கைக்குள் போட்டுக் கொண்டார்.

ஏற்கனவே இரண்டு படங்களில் மிதுன் ஜோடியாக நடித்து வருகிறார் வினிதா. தற்போது புதிய படம் ஒன்றிலும் மிதுன் ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார். இந்தப் படத்தை மிதுன் சக்கரவர்த்தியின் செயலாளர்தான் தயாரிக்கிறார். மிதுன் பலமாக சிபாரிசு செய்ததால்தான் வினிதா ஒப்பந்தம் செய்யப்பட்டாராம்.

ரம்பாவுக்கு வினிதாமீது மனக்கசப்பு ஏற்பட்ட காரணம் இப்போது புரிகிறதா?

## கமல்மீது பாய்ச்சல்

'அவ்வை சண்முகி'யை 'ஸ்திரி 420' என்ற பெயரில் இந்தியில் கமல் இயக்குகிறார். முதன் முதலாக கமல் இயக்கும் படம் இதுதான். இந்தியில் இயக்க ஒப்பந்தமானவர் சந்தனு. அவருடன் கமலுக்கு பிரச்சனை ஏற்பட்டது. சந்தனு படம் இயக்கத் தெரியாதவர். அது தான் பிரச்சனை என்றார் கமல்.

சந்தனு கமல்மீது இப்படி குற்றம் சாட்டியிருக்கிறார்: "கமல் பற்றிப் பேச்சு எடுத்தாலே எனக்கு இரத்தம் கொதிக்கிறது. படப்பிடிப்பில் கமல் என்னை மதிக்கவே இல்லை. எனது கடின உழைப்பை, முயற்சிகளை எல்லாம் வீணடித்து விட்டார். கமல் ஒரு நல்ல நடிகராக இருக்கலாம். நல்ல மனிதராக அல்லவா இருக்க வேண்டும். எனக்கு ஏற்பட்ட அவமானம் தாங்கமுடியாமல்தான் வெளியேறினேன்." என்கிறார் சந்தனு.

## பாடலுக்கு 70 இலட்சம்

திரைப்பட தொழிலாளர் பிரச்சனையால் தடைப்பட்டிருந்தது 'ரட்சகன்' படப்பிடிப்பு. அதனால் ஒரு கோடி ரூபாய்வரை நஷ்டமாம். தயாரிப்பாளர் குஞ்சுமோன் அழாக்குறையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இப்போது படப்பிடிப்பு ஆரம்பமாகி துரிதகதியில் நடக்கிறது. ஏ.ஆர்.ரகுமான் இசையில் ஆறு பாடல்கள் இடம்பெறுகின்றன.

வைரமுத்து எழுதிய, "சோனியா சோனியா சொக்கவைக்கும் சோனியா.. காதலில் நீ எந்தவகை கூறு, காதலில் இரண்டுவகை, சைவம், அசைவம்... இதில் நீ எந்த வகை கூறு..." என்று தொடரும் பாடலுக்காக 70 இலட்சம் ரூபா செலவில் 'செட்' போட்டு படமாக்கி இருக்கிறார்கள். படத்துக்கு மொத்தச் செலவு 15 கோடியாம்.

## மணியைப் புகழும் அழகி

பூனைமாதிரி இருந்தாலும் மணிரத்னம் பயங்கரக் கில்லாடி..

அவரது இயக்கத்தில் 'இருவர்' படத்தில் நடித்த அழகி ஐஸ்வர்யாராய்தான் அதனை உறுதிப் படுத்துகிறார்.

"அவர்" அரட்டை அடிக்கமாட்டார். அமைதியானவர் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அவர் அப்படி இல்லை. ஏ ரு இசட் எல்லா விஷயங்களையும் பகிர்ந்து கொள்கிறார்.

மணியின் அடுத்த படத்தில் நான் நடிக்கவில்லையே தவிர, நாங்கள் அடிக்கடி பேசிக்கொள்வோம். சமீபத்தில் மும்பை வந்தபோது "என்ன ஐஸ்வர்யா 22 படங்களில் நடிக்கிறீர்களாமே?" என்று கேட்டார். "இல்லை சேர் என்வயதுதான் 22. அத்தனை படங்களில் நடிப்பதுபற்றி நான் கனவுகூட கண்டதில்லை என்று கூறினேன்." என்கிறார் ஐஸ்வர்யா.

இருவருக்கும் நல்ல பழக்கம் என்றுதான் உள்தகவலும் கூறுகிறது. சுகாசினிக்கு தெரியுமோ?



மனிஷா கொய்ராலா

## இளையராஜா...

இசையமைப்... தேவா வீட்டில் ... பெரிய படங்கள் ... திருக்கிறார். ஒரு... மேல் மருவத்தூர் ... அடிகளார். தனது... சிக்கு அவர்தான் ... மாம். இன்னொரு... இளையராஜாவினு...

தனது மகன்க... யராஜாவைப்போ... வேண்டும் என்று ... புகிறார் தேவா. ... ராஜாமீது மிகுந்த ... வைத்திருக்கிறார்.

## பிரபுவுக்கு ம...

'காதல் கோ... அகத்தியன் இயக்... ஒரு படத்தில் ... விரும்புகிறார் பிரபு... கெட்டில் ஏற்பட்... தொய்வை சீராக்க ... பதால் அப்படி ஒரு... பம். ஆனால் அகத்... மறுத்துக் கொண்... கிறார். முன்பு அக... பிரபலமாக இல்லா... பிரபுவுக்கு கதை செ... ராம். கதையைக் ... விட்டு தட்டிக் கழித்... பிரபு. அதனை ... வைத்துத்தான் ... கிறாராம் அகத்திய...

## உல்லாச...

அப்பாசும், சிம்... சமீபத்தில் மொரி... தீவுக்கு பறந்துவிட்ட... காதல் பயணமா? இ... யாம். தெலுங்குப் ... ஒன்றின் படப்பிடிப்புக்... சென்றுள்ளார்களா... லாசப் பயணம்தான்...



நெப்போலியன்-சங்கவி
படம்-பகவத்சிங்

## கலக்கவரும் புதுமுகம்

'காதல் கோட்டை', 'கோகுலத்தில் சீதை' பட... இயக்கி பிரபலமானவர் அகத்தியன். இப்போது அக... இயக்கிவரும் படம் 'விடுகதை.' 'விடுகதையில் கதாநாயகி நீனா. முரசின் முகப்பில் கண்ணைப் ப... கொண்டிருக்கிறார் பாருங்கள் அவர்தான் நீனா.

கதாநாயகியாக புதுமுகம் காட்டினாலும் ஏற்கனவே குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிவி... நீனா. 'நாயகன்', 'இதயத்தை திருடாதே', 'கேளடி கண்மணி' போன்ற படங்களில் கு... நட்சத்திரமாக நடித்திருக்கிறார். 'ராசி படத்தில் அஜித்குமாரின் தங்கையாக நடித்திருந்தா... நீனாவுக்கு கதாநாயகியாக கலக்கும் திறமை இருப்பதாக கண்டுபிடித்த அகத்தியன் துணிந்து வா... கொடுத்திருக்கிறார். படத்தில் 16 வயது நாயகியாக நடிக்கிறார். கதாநாயகன் பிரகாஷ் ராஜ். 40 வ... ஒருவருக்கும் 16 வயதான பெண்ணுக்கும் காதல் மலர்வதுதான் கதையாம். முதலில், கடைசிக் கா... நீனா மொட்டை போடுவதாக கதை அமைத்திருந்தார் அகத்தியன். அழகான நீனாவை மொட்டை... மனது வரவில்லையாம். அதனால் கதையில் சின்னதாக மாறுதல் செய்திருக்கிறாராம்.

'விடுகதை' வெற்றிப் படமாக அமைந்தால் நீனா கதாநாயகியாக நடிப்பது தொடர்கதையாகும்.

## காதே...

காதல் கோட்டை... நடிகைக்கும் இடையே ... தாவியதுதான் கருத்து மே... இருவரும் சேர்ந்து மும்... சென்னையில் அரங்கே... நட்பை அரங்கேற்றிக்...

'பூ' நடிகையும்... கொண்டது யாவ... தலையீட்டால் ... விவகாரம் ... நடிகை... ...

## மினிசினி

* கமலின் இந்தி 'அவ்வை சண்முகி'யில், தமிழில் ஹீரா நடித்திருந்த வேடத்தில் இந்தியில் அஸ்வினி பாவே நடிப்பதாக இருந்தது. இப்போது அந்த வேடத்தில் வேறொரு இந்தி நடிகையான ஆமிஷா ஜுல்கா நடிக்கிறார்.
* 'சிஷ்யா' படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக அறிமுகமான ரோஷினிக்கு, தமிழில் ஒரு படமும் வரவில்லை. தெலுங்கில் மட்டும் ஒரே படத்தில் நடித்து வருகிறார். இதில் நவீன் என்பவர் கதாநாயகனாக நடிக்கிறார்.
* 'ரட்ஷகன்' படத்தில் நடித்து வரும் நாகார்ஜுன்- சுஷ்மிதா சென் ஜோடி அடுத்து தெலுங்குப் படம் ஒன்றில் இணைந்து நடிக்கப் போகிறார்கள். இந்தப்படத்தை 'வி.ஐ.பி.' படத்தை இயக்கியுள்ள எஸ்.டி.சபாபதி இயக்கவுள்ளார்.
* 'தாயின் மணிக்கொடி' படத்தை இயக்கி நடித்து வரும் அர்ஜுன், அடுத்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் 'கொண்டாட்டம்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இதற்கடுத்து செல்வா இயக்கும் புதிய படமொன்றிலும் நடிக்கவிருக்கிறார்.
* மணிவண்ணன் சொந்தக்குரலில் பாடி நடிப்பது பழைய செய்தி. அவர் பாடி நடிக்க வேண்டிய பாடலை அவரே எழுதியிருக்கிறார் என்பது புதிய செய்தி. சரத்குமார் நடிக்கும் 'ஜானகிராமன்' படத்திலேயே இந்தப் பாடலை எழுதிப்பாடுகிறார் மணிவண்ணன்.
* 'சூரியவம்சம்' வெற்றிகரமாக ஓடுவதால் அதன் இயக்குநர் விக்ரமனுக்கு பல படங்களை இயக்கும் வாய்ப்பு வந்துள்ளது. முதலில் இரண்டு படங்களை மட்டுமே இயக்க முடிவெடுத்திருக்கிறார் விக்ரமன்.
* பிரகாஷ்ராஜும், சரத்பாபுவும் முதன் முறையாக இணைந்து ஒரு படத்தில் நடிக்கிறார்கள். இன்னமும் பெயரிடப்படாத இந்தப் படத்தில் பிரகாஷ்ராஜிற்கு ஜோடியாக அம்பிகாவும், சரத்பாபுவுக்கு ஜோடியாக ராதிகாவும் நடிக்கின்றனர்.
* சின்னி ஜெயந்த் முதலில் ஹீரோவாக நடித்த 'சின்னப்புள்ள' படத்தில் ரேவதி கதாநாயகியாக நடித்தார். அடுத்து இவர் ஹீரோவாக நடிக்கவிருக்கும் படத்தில் இவருக்கு ஜோடியாக நடிக்க இருப்பவர் கனகா.
* விக்னேஷ் நடித்த 'நாளாங்கட்டுல தம்பிமார்' என்ற மலையாளப்படம் நன்றாக ஓடுவதைத் தொடர்ந்து, அந்தப் படத்தயாரிப்பாளர் தயாரிக்கும் அடுத்த படத்திலும் விக்னேஷ்தான் கதாநாயகன்.
* 'செல்வா' படத்தில் விஜய்க்கு ஜோடியாக அறிமுகமான ரீவா தமிழில் 'ரோஜா மலரே' என்ற படத்தில் நடித்து வருகிறார். இவர் அடுத்து செல்வமணி தயாரித்து இயக்கும் படத்தில் கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

## ஊர்வசியின் முழக்கம்

திரைப்பட தொழிலாளர்களுக்கும் இயக்குநர்களுக்கும் இடையேயான பிரச்சனையில் நடிகர் நடிகைகளும் இரண்டு பிரிவாக நிற்கிறார்கள். இயக்குநர்களுக்கு சார்பான பக்கம் நிற்கும் நடிகர் நடிகைகளின் கூட்டத்தில் ஊர்வசி வீரம் கொப்பளிக்கப் பேசினாராம்.

"யாருக்கு பயப்படணும். எதுக்குப் பயப்படணும், ஆஸிட் ஊத்திடுவாங்களா? இந்தப் பூச்சாண்டிக்கு எல்லாம் பயப்படக்கூடாது..." என்று ஊர்வசி முழங்க, சக நடிகர் நடிகைகள் புல்லரித்துப் போனார்களாம்.

"இந்தப் பெண்ணுக்கு வேட்டிய கொடுத்திட்டு சேலையைக் கொண்டுபோய் அவங்ககிட்ட கொடுங்கடா" என்று கத்தினாராம் ஒரு நடிகர். சேலையை கொடுக்கச் சொல்லி அவர் சொன்னது கமல் பக்கம் நிற்கும் நடிகர்களுக்கு ஊர்வசிக்கு இப்போது பட்டப்பெயர் ஜான்சிராணி.

## காதல் கீதையில் அப்துல்லா

குஷ்புவின் தம்பி அப்துல்லாவுக்கு கதாநாயகனாக வேண்டும் என்று கொள்ளை ஆசை. இச் செய்தி முன்னர் பத்திரிகைகளில் வந்தபோது குஷ்பு மறுத்திருந்தார். ஆனால் இரகசியமாக பல இயக்குநர்களிடம் சிபாரிசு செய்தார். குஷ்புவின் தம்பியானாலும் படத்தில் நடிக்கக்கூடிய தோற்றம் இல்லையென்று இயக்குநர்கள் பின்வாங்கினார்கள்.

குஷ்பு தன் முயற்சியில் தளரவில்லை. ஒரு காலத்தில் தனக்கு நன்கு பரிச்சயமான பிரபல பட விநியோகஸ்தர் ஒருவரை அணுகியிருக்கிறார். அவரும் குஷ்பு மீதுள்ள பிரியத்தால் தனது சொந்தப் படத்தில் அப்துல்லாவுக்கு கதாநாயக அந்தஸ்து கொடுத்திருக்கிறார். படத்திற்கு 'காதல் கீதை' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதாநாயகியாக மும்பை நடிகை ஒருவர் நடிக்கப்போகிறார். இயக்கம், திரைப்படக் கல்லூரி மாணவர் சக்திவேல்.



முரளி-தேவயாணி
படம்-பூமணி



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 18

மித்ரவாசு

# ஜெயலலிதாவை வெறுப்பூட்டிய நடிகை
## அன்பளிப்பாக கிடைத்த பங்களா

பிஞ்சிலேயே நடிக்கவந்த பிஞ்சிலேயே பழுத்த மஞ்சளான நடிகை இவர். நாவடக்கம் இல்லை. வேறெந்த அடக்கமும் இல்லை. அது தெரியாமல் இவரை அறிமுகம் செய்த நடிகர் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க நினைத்தார். கட்டுப்பாடு ஓரிரு படங்களுக்கு மேல் தாங்கவில்லை. நடிகை வேலி தாண்டிய வெள்ளாடானார்.

வெளியே சென்றவர் நடிகர் தன்னிடம் அந்தரங்கத்தில் எப்படி நடந்துகொண்டார் என்று மற்றவர்களிடம் விலாவாரியாக விபரித்தார். அது நடிகரின் கவனத்துக்கு சென்றது. சிம்மமாக சிலிர்த்த அவர் புதிய படங்களில் இருந்து அவரை நீக்கினார். முடிவடையாதிருந்த படத்தில் ஒரு காட்சி அமைத்தார்.

அதில் நடிகை வில்லனிடம் சிக்கிக்கொண்டு துடிப்பது போலவும், தான் அவரைக் காப்பாற்றுவது போலவும் உள்ள அந்தக் காட்சியில் வில்லன் நடிகையை நார் நாராகக் கிழித்துவிட்டார். கதாநாயகனின் ஆசியோடு அது நடந்தது. கிட்டத்தட்ட அரை நிர்வாண கோலம்.

ஆனால் அதெல்லாம் நடிகைக்கு பாடமாகத் தெரியவில்லை. ஏனென்றால் நடிகை சில படங்களில் டூபீஸ் நீச்சலுடையில் எல்லாம் நடித்தவர். கவர்ச்சி நடன நடிகைகள்கூட அப்படி கவர்ச்சி காட்டியிருக்க மாட்டார்கள். அப்படி சொரணையற்ற உடம்பு அந்த நடிகைக்கு.

ஒரு மலையாளப் படத்தின் தமிழ் தழுவலில் முத்துராமனோடு அவர் நடித்திருந்தார். முத்துராமன் அவரது ஜாக்கெட், பிராவை கழற்றுவது போன்ற அக் காட்சியில் நடிகை கூச்சமின்றி நடித்திருந்தார். தமிழில் அப்படியொரு காட்சி இடம்பெற்றது அதுவே முதல் தடவை.



விக்னேஷ்-சுவலட்சுமி
படம்-வாணிமகால்

### ஜெயலலிதா கோபம்

இதற்கு பின் நடிகை மற்றொரு பெரிய நடிகரைக் கவர்ந்தார். அவரது படங்களில் நடிகைக்கு தொடர்ந்து வாய்ப்புக் கிடைத்தது. மஞ்சளான நடிகையின் அணுகுமுறையால் ஜெயலலிதாவும் பாதிக்கப்பட்டார். அதனால் காரசாரமான பேட்டியொன்றை வார இதழ் ஒன்றுக்கு தந்தார். பரபரப்பான பேட்டி அது அதிலிருந்து ஒரு பகுதியைக் காணலாம்.

"பெரிய கதாநாயகர்களுடன் நடிக்கும்போது கதாநாயகிகளுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. சில பெரிய நடிகர்கள் தங்களுடன் நடிக்கும் கதாநாயகிகளைத் திரையில் மட்டும் கதாநாயகிகளாக காணாமல், திரைமறைவிலும் கதாநாயகிகளாகவே காண விரும்புகின்றனர். வேறு சில கதாநாயக நடிகைகளால் அப்படி இருக்க முடியும். என்னால் அப்படி ஒருக்காலும் இருக்க முடியாது.

கதாநாயகரின் வீட்டுக்குப் போவது, மகாபலிபுரத்துக்கு 'பிக்னிக்' போவது எல்லாம் என்னால் முடியாது." என்று பேட்டியில் கூறியிருந்தார் ஜெயலலிதா.

அந்த மஞ்சளான நடிகை ஒரு அரசியல்வாதியின் பிள்ளையோ பிள்ளையோடு நடித்த போது பிள்ளை நடிகைமீது ஆசைப்பட்டார். அங்கிருந்து பணம் வராது என்பதால் நடிகை இடம்கொடுக்கவில்லை. அதனால் அந்த நடிகர் இவருடைய வீட்டுக்கே சென்று குடித்துவிட்டு கலாட்டா செய்தார். அவரிடமிருந்து தப்பிப்பதற்கு நடிகை மிகவும் சிரமப்பட்டார்.

இதற்கு பின்னர் தெலுங்கு படத் தயாரிப்பாளர் ஒருவர் நடிகையிடம் மாட்டினார். நடிகையுடன் கடற்கரை, ஹோட்டல் என்று சுற்றித்திரிந்துவிட்டு 'உத்தமனாக' ஒதுங்கிக் கொண்டார்.

ஆனால் ஒரு ஸ்டூடியோ அதிபர் நடிகையிடம் தப்பிக்க முடியவில்லை. நடிகையை வைத்து மும்மொழிகளில் படம் தயாரித்தார். நடிகைக்காக கதையில் கோளாறு பண்ணியதால் படம் தோல்வி. மும்மொழிப் படத்தின் படப்பிடிப்பு மாதக் கணக்கில் நடந்தது. நடிகைக்கு அது வசதியாகப் போனது. சென்னையில் நவீன வசதியுள்ள பங்களா ஒன்றை வாங்க தயாரிப்பாளரிடம் வசதி பண்ணிக்கொண்டார்.

### திருமணம்

ஆடிய ஆட்டமென்ன...பேசிய வார்த்தையென்ன.... என்பதில் தொய்வு கண்ட மஞ்சளான நடிகை இனி குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவேண்டியதுதான் என்று மணாளரைத் தேடினார்.

அப்போதுதான் முன்னுக்கு வந்து கொண்டிருந்த வெற்றிக்கு குமாரரான நடிகருடன் ஒரு படத்தில் நடித்தார். உன்னிடம் மயங்குகிறேன் என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு மயங்கினர்.

கிசுகிசு எழுதிய பத்திரிகையாளரிடம் காதலாவது கத்தரிக்காயாவது என்று கொஞ்சநாள் சொல்லிவிட்டு கல்யாணம் பண்ணிக்கொண்டனர்.

இருவருமே நடித்த காரணத்தால் ஆடம்பரமான வீடொன்றைக் கட்டினர். பின்னர் விற்றனர். நடிகர் மகா கஞ்சர். நடிகையோ ஊதாரி.

நடுவே வெளிநாடு சென்றார் நடிகை. அங்கு ஒரு ஹோட்டல் நடத்தினார். அங்கே ஒரு காதலர் கிடைத்தார். அதைப் பணியாளர் ஒருவர் அம்பலப்படுத்த காதலர் ஒருநாள் 'தற்கொலை' செய்துகொண்டார். மீண்டும் நடிகரிடமே வந்தார் நடிகை.

பின்னர் தனது வளர்ந்த பெண்களை நடிப்பதற்கு கொண்டுவந்தார். நடிகையின் ஒரு மகள் தன்னைவிட இரு மடங்கு வயதுதாண்டிய ஒருவருடன் ஜோடியாக நடித்தார். அந்த நடிகருக்கு இளம் வயது நடிகைகள் மட்டுமன்றி புகழ்பெற்ற முன்னாள் நடிகைகள் மீதும் ஒரு கண். அந்த ராசாவின் மனசிலே மாணிக்கமான படப்பிடிப்பில் நடிகையின் மகள் இடம்பிடித்தார். அவரது தோற்றத்தைக் கண்டு மகள் நடிகை பயந்து மிரண்டார்.

தாயாரான மஞ்சளான நடிகை பயந்துபோனார். மகளுக்கு சான்ஸ் இல்லாமல் போய்விடுமோ என்பதுதான் பயம். அதனால் மஞ்சளான நடிகை வெளிப்புறப் படப்பிடிப்புக்கு மகளுடன் சென்று அந்த நடிகருடன் தங்கினார். பின்னர் என்ன, மகள் நடிக்கத் தடையே இல்லை. நட்சத்திரக் குடும்பமாக தன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் நடிக்க வைத்துக் கொண்டிருக்கிறார் மஞ்சளான நடிகை. தானும் அவ்வப்போது நடிக்கிறார். கணவரும் நடித்து வருகிறார்.

# சினிவிசிட்

நீனா
படம்:~ விடுகதை

முகப்பில் | சத்யராஜ்

## சொல்லுகிறோம்

நடிகருக்கும், அவரது ஆஸ்தான காதலியான 'ஹீர' வேறுபாடு ஏற்பட்டிருந்தது. குமாரர் வேறு பல மலர் எழக் காரணம். இப்போது சமரசம் தோன்றியிருக்கிறதாம். சென்றிருக்கிறார்கள். திரையுலக அடிதடி விவகாரங்கள் ொண்டிருந்தபோது, இருவரும் மும்பாயில்தான் தங்கள் ண்டிருந்தார்களாம்.

மான இயக்குநரும் 'ரம்ப' நடிகை விவகாரத்தால் கசந்து றிந்ததே. பின்னர் சில திரையுலகப் புள்ளிகளின் தாடர்ந்தது. பிரச்சனை தீர்ந்ததுபோலத் தெரிந்தாலும் த நெருப்பாகவே இருக்கிறதாம். பழைய காதலரை வில்லை அதுதான் பிரச்சனை என்கிறார்கள் இயக்குநருக்கு பட்டவர்கள். 'ரம்ப' நடிகையை மறக்க முடியாமல் க்கிறார் இயக்குநர். சமரச உடன்பாட்டுக்கு மாறாக புதிய படத்திலும் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். அதுதான் பிரச்சனை என்று நடிகைக்கு வேண்டப்பட்ட வர்களும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

வீராவேசமாகப் பேசும் வில்லன் நடிகர் அவர். கிராமத்தில் இருந்து வந்த ஒரு பெண் அந்த நடிகரிடம் நடிக்க வாய்ப்புக் கேட்டார். வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி வீடொன்றில் தங்கவைத்தாராம் நடிகர். தங்கவைத்துக் கொண்டே இருக்கிறார். அந்தப் பெண்ணுக்கு நடிப்பாசையே போய்விட்டதாம்.

சமூக சேவையில் ஆர்வமுள்ள நடிகை அவர். தமிழ்த் திரைப்பட உலகப் பிரச்சனையில் இயக்குநர்கள் பக்கம் செல்ல விரும்பினார் நடிகை. அவரது பிரியத்துக்குரிய 'கார்' நடிகர் தடுத்தாராம். அப்படியிருந்தும் நடிகை இயக்குநர்களுக்கு ஆதரவான கூட்டத்துக்கு சென்றாராம். "அவர் தடுத்தும் கேளாமல் வந்துவிட்டேன்" என்று சக நடிகையிடம் கூறியிருக்கிறார். "அவர் என்ன அவர்... அவரை மாதிரி பத்துப்பேர் தர்றேன்... நீ ஏன் கவலைப்படறே?" என்றாராம் சக நடிகை. அப்படி ஆறுதல் சொன்ன நடிகை யார் தெரியுமா? இந்திரலோக சுந்தரிகளில் இரண்டாவது சுந்தரியின் பெயரைக் கொண்டவர்.




பரத்குமார்-வினிதா
படம்-விடிவெள்ளி

### ...ட்சத்திர குடும்பம் தன்னாட்டம்

ிஜயகுமார்-மஞ்சுளா தம்பதியினரின் குடும்பமே சினிமா உலகில் இருக்கிறது என்பது தெரிந்த செய்தி. சமீபகாலமாக விஜய இல்லாத படங்களே இல்லை. அந்தளவுக்கு குணசித்திரம் ரங்களில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார். மஞ்சுளாவும் கிடையே படங்களில் தலைகாட்டிக் கொண்டிருந்தார். குமார், வனிதா, பேபி ஸ்ரீதேவி என்று தங்கள் பிள்ளைகளையும் ல் இறக்கி நல்ல சம்பாத்தியம் பண்ணிக்கொண்டிருந்தனர். த நேரத்தில்தான் யார் கண் பட்டதோ நடிகர் சங்க விவ ல் தலையிட்டார் விஜயகுமார். ராதாரவிக்கு எதிராக நடிகர்களை ளார். இந்த பிரச்சனைக்கு இடையே திரைப்படத் தொழிலாளர் இயக்குநர்களுக்கும் இடையே லடாய். தொழிலாளர் பக்கம் ார் சேர்ந்தார். அதனால் இயக்குநர்களின் விரோதத்தை திருக்கிறார். விஜயகுமாருக்கு மட்டுமல்ல, அவர் குடும்ப ர்களுக்கும் தமது படங்களில் இடம் கொடுப்பதில்லை என்று குநர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம்.

### குஷ்பு அக்கா

நடிகைகளை 'அக்கா' என்றோ, 'தங்கை' என்றோ நடிகர்கள் அழைப்பது கிடையாது. தம்மைவிட வயதான நடிகைகளைக்கூட 'அக்கா' என்று அழைக்கமாட்டார்கள். அதற்கான காரணம் யாரும் அறியாத சமாச்சாரமல்ல. இளம் நடிகைகளை செல்லப் பெயர் கூறித்தான் குஷியாகக் கூப்பிடுவார்கள்.

அப்பாஸ் மட்டும் இதில் விதிவிலக்கு. குஷ்புவை மட்டும் அக்கா அக்கா என்றுதான் அழைக்கிறார். அன்பு மழையில் நனைக்கிறார்.

### இரண்டு மட்டும்தான்

'பெரிய மனுஷன்' படத்தில் சத்யராஜ் இரண்டு வேடங்களில் நடிக்கிறார் என்பது முதலில் வந்த செய்தி. பின்னர் மூன்று வேடங்களில் நடிப்பதாக செய்தி வெளியானது. அச் செய்தியை 'சினிவிசிட்'டிலும் பிரசுரித்திருந்தோம். இப்போது கிடைத்துள்ள நம்பகமான செய்திப்படி இருவேடங்களில்தான் சத்யராஜ் நடிக்கிறார்.

பெரியமனுஷனாக ஜொள்ளுப் பண்ணும் சத்யராஜ்தான் படத்தின் பிரதான பாத்திரம். விரைவில் திரைக்கு வரப்போகிறது. தீபாவளி வெளியீடாக கொண்டுவரப்போகிறார்கள்.

### பிரிய நடிகை

வில்லனாக, குணசித்திர நடிகராக, இப்போது கதாநாயகனாக என்று படிப்படியாக உயர்ந்திருப்பவர் கரண். கலர் கனவுகள் படத்தில் குஷ்புதான் ஜோடி.

கரணின் பிரிய நடிகை குஷ்புதானாம். படத்தில் குஷ்புவை கட்டிப்பிடித்து நடிக்க சங்கடமாக இருந்ததாம். பின்னர் படிப்படியாகத்தான் பதற்றம் தணிந்தது என்கிறார்.

குஷ்புவை விட்டால் சாவித்திரியையும் பிடிக்குமாம். அவர்தான் உயிரோடு இல்லையே.

### நாகூர் ஹனிபா பாடல்

பாலு மகேந்திரா இயக்கத்தில் விக்னேஷ்-கரண், ஈஸ்வரிராவ், அஸ்வினி நடித்துவரும் படம் 'ராமன் அப்துல்லா.'

இப் படத்துக்காக நாகூர் ஹனிபா பாடிய பாடல் ஒன்று பதிவு செய்யப் பட்டுள்ளது.

- "உன் மதமா? என் மதமா? ஆண்டவன் எந்த மதம்? நல்லவங்க எந்த மதமோ ஆண்டவன் அந்த மதம்..." என்று தொடர்கிறது பாடல். இப் பாடலை வாலி எழுதியிருக்கிறார். இசை: இளையராஜா. நீண்ட இடைவெளியின் பின்னர் நாகூர் ஹனிபா பாடியுள்ள திரைப்படப் பாடல் இதுவாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# நகம் நலமா?



உங்கள் நகங்கள் உங்கள் கைகளைப் போன்றவை. எந்நேரமும் பார்வையில் படும் உங்கள் நகங்களுக்கு தினமும் சிறிது நேரப் பராமரிப்புக் கொடுப்பது உங்களது அழகை மேலும் அதிகரிக்கும்.

- உறுதியான நகங்களுக்குச் சத்துள்ள உணவே ஆதாரம். போதுமான அளவு புரதம், உயிர்ச்சத்துக்கள், இரும்புச் சத்து, கல்சியம் போன்றவை உணவில் சேர்வது அவசியம்.
- நகங்களை ஆரோக்கியமாக வைத்திருப்பது பார்வைக்கு மட்டுமல்ல, உடல் ஆரோக் கியத்திற்கும் அவசியம் ஆகும். நோய்த் தொற்றைத் தவிர்ப்பதற்கும் நக ஆரோக்கியம் முக்கியம்.
- தோட்டவேலை, வீடு கழுவுவது போன்ற வேலைகளைச் செய்யும்போது கைகளுக்கு உறை போட்டுக் கொள்வது நல்லது.
- குளித்த பின்னர் நகங்களை வெட்டுவதற்கு ஏற்ற நேரம். கடினமாக இருக்கும் நகங்கள் நீரில் ஊறி மென்மையாகி இருக்கும்.
- நகங்களைக் கூராக வெட்டாதீர்கள். ஓவல் வடிவத்தில் வெட்டி வைத்திருங்கள்.
- கால் நகங்களுக்கு அடியிலும் சுத்தம் செய்ய மறந்து விடாதீர்கள். கால் நகங்களுக்கு அடியில் கிருமிகள் தங்கி வளர வாய்ப்புக்கள் அதிகம்.
- நகங்களைக் கடித்துத் தேய்க்காதீர்கள். நகங்கள் அழகில்லாமல் இருப்பதுடன், இந்த நகங்களில் கிருமிகள் தொற்றுவதற்கும் வாய்ப்பு அதிகம்.
- நகப்பூச்சுக்கள் ஆரோக்கியமான நகங்களைப் பாதிக்காது. தரமான நகப்பூச்சு மற்றும் நகப்பூச்சு அழிப்பான்களைப் பயன்படுத்துங்கள். தரமற்ற நகப்பூச்சு, அழிப்பான்கள் நகங்களின் இயற்கை மினுமினுப்பை அழித்துவிடும்.

# ஆணா–பெண்ணா?

கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றுக்குள் இருப்பது ஆணா பெண்ணா? என்பதை அறிய இன்று நவீன முறைகள் வந்து விட்டன.

ஆனால்.... அந்தக்காலத்தில் பாட்டிமார்கள் பின்வரும் அடையாளங்களை வைத்தே அதை மிகச் சரியாகக் கணித்தார்கள்.

1. கர்ப்பிணிப் பெண் உட்காரும்போதும், எழும்போதும் வலது கையை அதிகபட்சமாக ஊன்றினாலோ, இரவில் வலது பக்கமாகச் சாய்ந்து தூங்கினாலோ அவள் பெறப்போவது ஆண் குழந்தை.
2. இதே நிலை இடது பக்கமாகத் தெரிந்தால் அது பெண் குழந்தை.
3. வயிறு உயரமாகவும், பெருத்தும், நீளமாகவும் இருந்தால் ஆண் குழந்தை. வயிறு சரிவாகவும், மட்டமாகவும் இருந்தால் பெண் குழந்தை.
4. கர்ப்பம் சுலபமாகத் தெரிந்தால் அது ஆண்குழந்தை. கர்ப்பம் பளுவாகத் தெரிந்தால் அது பெண் குழந்தை.

எனினும் இது நூற்றுக்கு நூறுவீதம் சரியாக இருக்குமென்று சொல்ல முடியாது.

# உடலில் நஞ்சு



என்னதான் மேக்-அப் செய்தாலும், எத்தனை அழகு நிலையங்களுக்குச் சென்றாலும், முகத்தில் கவர்ச்சியைக் காணோமே என்று கவலைப் படுகிறீர்களா? இதற்கு, உடலுக்குள் சேர்ந்திருக்கும் நச்சுத் தன்மையும், மனக்கவலையும்தான் காரணம் என்று கூறுகிறார் பிரிட்டிஷ் அழகுக் கலை நிபுணர் ஒருவர்.

அழகுப் பொருட்களை விட உணவுப் பொருட்களால் தான் முகத்தின் கவர்ச்சியைக் கூட்ட முடியும் என்று அவர் கூறுகிறார்.

உடலில் இருக்கும் நச்சுப் பொருட்களை,உணவுப் பழக்க வழக்கம் மூலம் அகற்றும் வழிகள் இதோ:

* அன்றாடம் காலையில் ஒரு குவளை சுடுநீர் குடியுங்கள். மேலும் ஒரு நாளைக்கு 6-8 குவளைகள் நீர் குடியுங்கள்.
* குடலில் உள்ள நோய்க்கிருமிகளை அழிக்கக்கூடிய பார்லி போன்ற பானங்களைப் பருகுங்கள்.
* அமிலத்தை உருவாக்கக் கூடிய உணவு வகைகளைத் தவிருங்கள்.
* புதிய பழங்கள், பச்சடி, நீராவியில் வேகவைத்த காய்கறிகள் போன்றவற்றை அதிகம் சாப்பிடுங்கள்.
* கோப்பி போன்ற காஃபின் அதிகமுள்ள பானங்களையும், அல்கொஹோல் உள்ள பானங்களையும் தவிருங்கள். இவை நச்சுத்தன்மையுள்ளவை. இவை ஈரலைப் பாதிக்கும்.
* வாரத்தில் மூன்று முறையாவது குறைந்தது 20-30 நிமிடங்களுக்கு உடற்பயிற்சிகள் செய்யுங்கள். உடற்பயிற்சி செய்யும்போது உடலில் சேர்ந்திருக்கும் நச்சுத் தன்மை வியர்வை வழியாக அகற்றப்படும்.

# சின்னச் சின்ன யோசனைகள்

* தோலால் செய்யப்பட்ட சூட்கேஸை உபயோகிக்காதபோது, ஒரு சோப்புத்துண்டை அதனுள் போட்டு வைத்தால் பூச்சிகள் வராது. அத்துடன் துர்நாற்றமும் வராது.



* கத்தரிக்கோலை வெந்நீரில் நனைத்து விட்டு வெட்டுங்கள். எவ்வளவு மெல்லிய துணியாக இருந்தாலும் மிக அருமையாக வெட்டும்.
* கோப்பி தயாரிக்கும் போது ஒரு சிட்டிகை மேசை உப்பைக் கோப்பித்தூளோடு கலந்து தயாரித்தால் கோப்பி வாசனையாகவும், சுவையாகவும் இருக்கும்.
* உங்கள் வீட்டுத் தோட்டத்தில் உள்ள முருங்கை மரம் நன்றாகக் காய்க்கவில்லையா? கவலை வேண்டாம். எலுமிச்சங்காயளவு பெருங்காயத்தை நீரில் கரைத்து முருங்கை மரத்தின் அடிவேரில் ஊற்றுங்கள். காய்க்காத மரம் கூட நன்றாகக் காய்க்கும்.
* காலியான பற்பசை ரியூப்களைக் கத்தரித்துத் தண்ணீரில் ஊறவைத்துப் பின் அந்தத் தண்ணீரில் கண்ணாடி ஜன்னல்களைத் துடைத்தால் பளபளப்பாகவும், கறை நீங்கியும் இருக்கும்.
* கோடைகாலத்தில் எல்லா வீடுகளிலும் எலுமிச்சம்பழச்சாறு கரைத்துக் குடிப்பார்கள். எலுமிச்சம்பழம் ஜூஸ் தயாரிக்கும்போது, அதனுடன் கொஞ்சம் இஞ்சிச் சாறையும் கலந்தால், குளிர்ச்சி அதிகம் கிடைக்கும். உடம்பிற்கும் நல்லது.

# லேடீஸ் ஸ்பெஷல்

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

### முருங்கைக்காய் ஊறுகாய்

**தேவையானவை:**

| | |
|---|---|
| முருங்கைக்காய் | - 6 |
| மிளகாய்த்தூள் | - 2 கரண்டி |
| மஞ்சள்தூள் | - 1 கரண்டி |
| கடுகு | - 25 கிராம் |
| வெந்தயம் | - 25 கிராம் |
| எண்ணெய் | - தேவைக்கேற்ப |
| உப்பு | - தேவைக்கேற்ப |

**செய்முறை:**

கடுகு, வெந்தயம் ஆகியவற்றை வறுத்து எடுத்துப் பொடி செய்து கொள்ளவும்.

முருங்கைக்காய்களைக் கழுவித் துடைத்து, சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். பின்னர் இத்துண்டுகளைச் சிறிது வேகவைத்துத் தண்ணீரை வடித்து விடவும்.

வாணலியில் எண்ணெயை ஊற்றிக் கொதித்ததும் மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், கடுகுத்தூள், வெந்தயத்தூள், உப்பு ஆகிய அனைத்தையும் போட்டுக் கிளறி, முருங்கைக்காயில் போடவும். இதை 10-15 நாட்கள் வெய்யிலில் காயவைத்துப் போத்தலில் போட்டு வைக்கவும். இதுதான் முருங்கைக்காய் ஊறுகாய்.

# குழந்தைகளும் காய்ச்சலும்



குழந்தைகளுக்குக் காய்ச்சல் வருவது நல்லதே என்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

உடம்பில் தொற்றிக் கொள்ளும் வைரஸ், பக்ரீரியா கிருமிகளை எதிர்த்து அழிக்கவே காய்ச்சல் வருகிறது.

இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துகிறது. மூளைப்பாதிப்பு, ஏனைய கடுமையான கோளாறுகளுக்கு காய்ச்சல் ஏற்படுவது குறைவு. அப்படி வந்ததும் 41 பாகை செல்சியசுக்கும் அதிகமாகவே காய்ச்சல் இருக்கும். அப்படி அளவுக்கதிகமாகக் காய்ச்சல் இருந்தாலே பயப்பட வேண்டும்.

சாதாரணமாக 38.8 பாகை செல்சியசுக்குக் கீழே ஏற்படும் காய்ச்சலுக்குப் பயப்படவேண்டியதில்லை என்கிறார்கள் மருத்துவர்கள். அந்தச் சமயங்களில் காற்றோட்டமான ஆடைகளைக் குழந்தைகளுக்கு அணிவித்து, அதிக நீராகாரங்களைக் கொடுத்தாலே போதும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

# பருகிப்பாருங்கள்

உடலைச் சுத்தமாக வைத்திருக்க பழச்சாறுகள் மிகச் சிறந்தவை. பழவகைகளில் இருக்கும் பெக்டின் என்ற திரவம் சமிபாட்டுப்பாதையில் இருக்கும் கிருமிகளை அழிக்கும்.

பழச்சாறுகளை உடனுக்குடன் பருக வேண்டும். பழங்களையும், காய்களையும் சேர்த்துச் சாறு பிழியாதீர்கள். தனித்தனியாகப் பருகுவது நல்லது.

அப்பிள், தோடம்பழம், திராட்சை, மாம்பழம், வத்தகைப்பழம், எலுமிச்சம்பழம், பப்பாளிப்பழம், அன்னாசிப்பழம் போன்ற பழவகைகளும், கரட், வெள்ளரி, கோவா போன்ற காய்கறிகளையும் சாறு பிழிந்து குடித்தால் குடல் சுத்தமாகும்.


## தினமுரசு–அருள் ஜுவலர்ஸ்
## இணைந்து வழங்கும் தங்கமாலைப் பரிசுப்போட்டி.

★ கடந்த 25 வாரங்களாக நீங்கள் சேகரித்த பரிசுக் கூப்பன்களை தபால் உறையில் போட்டு அனுப்பி வையுங்கள்.

★ இத்துடனுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து அத்தோடு அனுப்பி வையுங்கள்.

பெயர்: ........................................
முகவரி: ........................................
........................................
........................................
தொலைபேசி.இல. (இருப்பின்):..................
ஒப்பம்: ........................................

★ அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி–13.09.1997

★ அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: தங்கமாலைப் பரிசுப்போட்டி, தினமுரசு வாரமலர், த.பெ.இல. 1772, கொழும்பு.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CG

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
கையொப்பம்:..............................

உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-09-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




**வெற்றி பெற்றவர்**

முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்:

சு. கற்பகமலர், 38, சென் பெனடிக்ற் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு–13.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**செல்வி.க. நித்தியகலா,**
நிர்மாணத் திணைக்களம், கண்டி வீதி, வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# நாம் இருவர்




ஒரே ஜாடையில் உள்ள 'இருவர்' அழகிப்போட்டி ஒன்று கடந்த வாரம் இத்தாலியில் நடைபெற்றது.

இத்தாலிய அழகிப்போட்டி வரலாற்றில் இப்படி இரட்டை அழகிப்போட்டி நடப்பது இதுவே முதல் முறை.

இந்த முதல் கட்டப் போட்டியில் சியாரா-சிசிலா (படம் 1), அன்டோனெலா-கபிரிலா (படம் 2), லூனா- டேனிலா (படம் 3), பார்பரா-இஸபெல்லா (படம் 4) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவர்களில் முதல் ஜோடி அழகி யார்? என்ற போட்டி செப்டம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெற இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்படும் முதல் ஜோடி அழகிக்கு வைரக் கிரீடமும், பணப்பரிசும் காத்திருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## பயிர் வாடும் போது பாயாத கங்கைகள்

மரந்தோறும் குயில்கூடி மனைகட்டிக் குடியேறி
வசந்தங்கள் பொலிந்ததோர் நாள்!
வரம் பெற்ற மகிழ்வோடு வயிராறக் கவியுண்ட
வரலாற்று வாழ்வின்று பாழ்!
மரம்விட்டுக் குயில்போச்சு; மரத்தின் கீழ் குடி பூந்து
அகதியாய் விழுதெங்கள் தோள்.
'மரவாழ்வு தனையெங்கள்' மழலைக்குத் தந்ததால்
மந்திரியர்க் 'கூர்க்கின்றோம்' கேள்!
***
உயிர்காக்கப் போராடி உடமைகள் இழந்தோடி
உறக்கத்தை விற்ற மனிதர்–
உணர்வுக்கு ஒரு சொட்டு அவுடதம் நல்காது
ஒரு கோடி பாடுதல் வீண்!
பயிர்வாடும் பொழுதங்கு பாயாத கங்கைக்கு
மதிப்பென்ன? மகுடங்களேன்?
பலமற்ற கரங்களை முறித்து முடக்கிப் பின்
பலகாரம் தரின்... ஏற்கிலேன்!
***
வெடிகுண்டும் பூச்செண்டு என மாறும் நாளுக்காய்
விரதங்கள் பிடி வையமே!
வெறும் பேச்சில் பயனில்லை; 'விசர்' கொண்டு புதுமாற்றம்
விளைவிக்க விதையன்பையே!
குடிமூழ்கிப் போனாலும் கொடுமைகள் தனை விட்டுக்
கொடுக்காத அரக்கர்களை–
குதித்தாட வைத்தால்... இக் குவலயம் பூக்காது
குறித்துக் கொள்; களை களைகவே!


அருணன்– யாழ்ப்பாணம்

## உயிரோடு எரியும் உயிரொன்று....!

அதோ, அந்தக் கல்லறைக்குள்
எனது வாழ்க்கையைத்
துணைக்கு அழைத்துக் கொண்டு
அவன் தூங்குகிறான்!
–o–
எனது கண்ணீர் அஞ்சலி
அவனில் உயிர் தெளித்து
எழுப்பிவிடப் போவதில்லை!
எனது கவிதாஞ்சலி
அவனைச் சென்றடையப்
போவதில்லை!
என்பவை தெரிந்திருந்தும்
என் மன ரணங்களை
மறப்பதற்காகவே எழுதுகிறேன்!
–o–
உறக்கத்தைப் போல
அவனுக்கு
நிம்மதியைக் கொடுத்த சாவு,
என் உலகில்
எல்லாச் சஞ்சலங்களுக்கும்
ஏதுவாய்ப் போனது!
–o–
எனது உயிர்
அவனோடு புதையுண்டுபோக
அவனது சடலமாய்– நான்
தினந்தோறும் இங்கே
தீ மூட்டப்படுகிறேன்!
–o–
நான் கதறக் கதற
கட்டாயப் படுத்தி–அவன்
தந்துபோன துயரமிது;
எங்ஙனம் இதை நான் தாங்க?
எந்நாள் வரை நான்
அணுவணுவாய்ச் சாக?
–o–
எனது உயிர் கொண்டு
அவனது கல்லறை தோண்டப்பட்டது
எனது கண்ணீரின் ஈரத்தால்
அவன் கல்லறை கட்டப்பட்டது
எனது கனவுகளால்
அவன் கல்லறை மூடப்பட்டது
எனது ஆத்மாவால்
அந்தக் கல்லறைக்கு
வர்ணம் பூசப்பட்டது!
–o–
இத்தனையையும்
என்னிடமிருந்து
பறித்துக் கொண்டு போனது
போதாதென்றா–எனது
நிம்மதியையும் வாங்கிப் போனான்?
–o–
அந்தத் திருவிழாத் தினத்தை
அவன் மரணத்திற்காகத்
தேர்ந்தெடுத்துக் கொண்ட பின்னர்
எந்தத் திருவிழாவும்
இவ்வுலகில் எனக்கு
இல்லாமற் போனது!
–o–
இத்தனை குரூரமானதா காதல்?
மலர்மாலை போல வந்து
நெருப்பு வேலிகளால்
நெஞ்சத்தை நெருக்குவதா காதல்?
அவஸ்தை தரும் வினாக்களோடு
அவன் கல்லறையைப் பார்த்தேன்
'உயிரோடு எரியவும்
உயிரிருந்தும் பிணமாக அலையவும்
ஒருத்தியை உருவாக்கிப் போகிறான்'
யாரோ எழுதிய வரிகள்
எனை அனுதாபமாய்ப் பார்த்தன!

பஹீமா ஜஹான், மெல்சிரிபுர.


## அந்த நாள் ஞாபகம்



↑ முதல் படத்தில் இருப்பது நேரு. சிறுவனாக இருப்பவர் ராஜீவ். அருகே சஞ்சய் காந்தி.



← பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக போராடிய இந்திய, இலங்கைத் தலைவர்கள் பலர் பிரிட்டிஷ்காரர்களின் மொழி மற்றும் நாகரிகத்திலும் மோகம் கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடனும் நட்பு பூண்டிருந்தனர். ஆயுதப் போராட்டத்தை அத்தலைவர்கள் எதிர்த்தமைக்கு அதுவும் ஒரு காரணம். பிரிட்டிஷ் ஆட்சியாளர் 'நட்புடன் விலகல்' என்பதையே அவர்கள் எதிர்பார்த்தனர்.
இந்திய சுதந்திரத்தின் பின்பு எடுக்கப்பட்ட புகைப்படங்களே இவை. பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரின் துணைவிக்கு சிகரெட் பற்றவைத்து உதவுகிறார் நேரு.



இரண்டாவது படத்தில் நேருவுடன் காணப்படுபவர் ஜாக்குலின் கென்னடி. அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவிதான் ஜாக்குலின். 1960ல் இந்தியாவுக்கு விஜயம் செய்தார் ஜாக்குலின். அவரை அன்புடன் வரவேற்கிறார் நேரு. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான நேரு பணிகளின் அழுத்தங்கள் மத்தியிலும் ஜாலியான மனிதராக இருந்தார். வெள்ளை ரோஜாக்கள் என்றால் அவருக்கு கொள்ளையான பிரியம். ரோஜாவின் ராஜா என்பர்.

## இழந்துபோன என் நிலமும்; நீயும்...!

வேதனையின் கொழுந்து
விளாசித்தான் எரிகிறது!
கண்ணீரின் கனதிகளுக்கு
இன்னும் எத்தனைதான்
உபவாச நாட்களோ?
**
பிரிந்தறியா உறவிருத்தி
அடிமை கொண்டாய்!
பட்டுச் சருகினிலே
என்னைப் பவனி கொண்டாய்!
அழியாத புறம்பிருத்தி
ஆட்கொண்டு வீணடித்தாய்!
**
கொலுசு சிணுங்கும்
இரவு காலங்களில் எல்லாம்
தீப்பந்தம் ஏந்தி
தேடி வந்தேன்.
யாருக்குத் தெரியும் இது
ஒரு நீர்க்குமிழி என்று!
**
அமாவாசை இரவுகளில்
கை தொட்டு
கொண்டாடிய என் தீவுக்
கற்பனைகளுக் கெல்லாம் யுத்தப்
பெரு வெள்ளம் அழிவானதே!
**
சங்கிலியன் சிலையருகில்
உன் சிரிப்போடு எடுத்த
புகைப்படமும் தொலைந்துபோனது;
அந்தச் சிலை போலவும்
நீ போலவும்!
**
செங்குந்தாக் கல்லூரியின்
ஐந்தாவது வாங்கும்
அழிந்து போனதாம்– எம்
உறவுகள் போலவே,
கை கோர்த்துக் கதைத்தபடி
உலாவரும் வேலியெல்லாம்
முட்களாம்!
**
இனி எந்தக் காலத்தில்
உன் மடியருகில் இருந்து கொண்டு
கவிதை படிப்பது?
மரணச் சுமை விழுதில்
ஆறுதல் படுத்த நீயுமில்லை
என் நிலமுமில்லையே!
**

மானுடபுத்ரன்

## மன விரிசல்களும் மௌன போராட்டங்களும்...!

சோகங்களால்
வெதும்பிப்போன
இந்த நெஞ்சுக்கு
இனிமேலும்
அழ சக்தியில்லை!
o–o
ஆயிரமிருந்தும்
வாழ்க்கை
அலுத்துவிட்டது
என்றால்
அதைத் தேற்ற
யாரிடம் போவது...?
o–o
மனிதர்கள்
நீதி தீர்க்கிற
மகாத்மாக்களா
என்ன...?
o–o
வலிமை
குன்றியவன்
வாழ்க்கையைப்

## தேன் கிண்ணம்

பெயர்த்தெறிய நினைக்கும்
சமூகத்திலுள்ள....
சில–கபோதிகளால்தான்
இன்று எத்தனை ஜீவன்கள்
கண்ணீர் வடிக்கின்றன!
o–o
எளியவர் வாழ்க்கையைக் கிளறிக்
கிளறியே சிலபேர்
இனிமை காண்கிறார்கள்...!
ஆனால்
சொத்துக்கும்
பதவிக்கும்
ஆசைப்பட்ட
மனிதர்களிடையே
ஒத்துப் போகாத எத்தனை
முரண்பாடுகள்
ஓங்கி
வளர்ந்தாலும்
அது வெளியே தெரிவதில்லை
பலருக்கு...!

தமிழினியன் ஜிஹார்–காத்தான்குடி.

## நீ.... வந்தால்...!?

என்
உயிரின்
ஒரு பங்கு
உனதாகும்...!
இமைகள்
ஈரத்தை மறந்து
இசை பாடும்!...
*–*

இளமை இரு
மடங்காகும்...!
இதயத்தில்
இன்ப ஒளி
தீபம்
சுடரும்!...
*–*

தனிமையின்
சிறகுகள்
முறியும்...!
விழிநீர்
விடை பெறும்!...
*–*
கற்பனை
கரை புரளும்...!
கவிதைகள்
இதழ் விரிக்கும்...!
*–*

புன்னகை
விருந்தளிக்கும்...!
கனவுகள்
கடை பரப்பும்...!
*–*
கன்னல்
கதை பேசும்...!
உதடுகள்
ஒட்டிக் கொள்ளும்...!
*–*

அன்பு அலை
பாயும்!
ஆசை வலை
வீசும்!
அச்சம் தலை
தூக்கும்...!
*–*
உறவு மலரும்
உறக்கம்
உதிரும்...!
*–*

வாழ்வின் திசை
மாறும்!
வசந்தம் வாசல்
வரும்!
'நீ' வந்தால்...!?
*–*

எஸ்.கல்யாணி,
இரத்தினபுரி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(31.08.1997 தொடக்கம் 06.09.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

சிம்மம் - சூரியன், புதன், இராகு, வெள்ளி.
துலாம் - செவ்வாய்.
மகரம் - வியாழன்.
கும்பம் - கேது.
மீனம் - சனி.

★ சந்திரன்- கர்க்கடகம், சிங்கம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பண விரயம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- வெளிவிட்ட பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- வெளிவிட்ட வாழ்க்கை, காரிய நன்மை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, காரியானுகூலம். | மு.ப. | 11 | மணி |
| செவ்வாய்- பொருள் பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளிவிட்ட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| சனி- வீண் முயற்சி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், வெளிவிட்ட வாழ்க்கை. | மு.ப. | 11 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், மனக் குழப்பம். | பி.ப. | 1 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளிவிட்ட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | பகல் | 1 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, பலவித பேறு. | மு.ப. | 11 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், கடன் படல். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளிவிட்ட பயணம், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- கடன் தொல்லை, காரியக் கேடு. | பகல் | 1 | மணி |
| வியாழன்- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 4 | மணி |
| சனி- தொழில் நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், காரியானுகூலம். | மு.ப. | 9 | மணி |
| சனி- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளிவிட்ட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| புதன் - புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பொருள் வரவு. | மு.ப. | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| சனி- வீண் முயற்சி, பெரியோர் பகை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளிவிட்ட வாழ்க்கை, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | மு.ப. | 11 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| சனி- உறவினர் பகை, மனக் குழப்பம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. | 11 | மணி |
| செவ்வாய்- வெளிவிட்ட பயணம், காரிய நன்மை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 11 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியானுகூலம், முயற்சி மேன்மை. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 11 | மணி |
| திங்கள்- வீண் துயர், பொருள் நஷ்டம். | மு.ப. | 11 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் பகை. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், உடன் சுகம். | மு.ப. | 11 | மணி |
| வெள்ளி- வெளிவிட்ட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| சனி- பொருள் பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- மனக் கிலேசம், அந்நியர் பகை. | மு.ப. | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 11 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், வெளிவிட்ட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் குறை கேட்டல், அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பெரியோர் நன்மை, காரிய சித்தி. | மு.ப. | 11 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளிவிட்ட நன்மை, காரிய சுகம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6


படிப்பகம்






பச்சையு னியைந்த வேற்
படைகள் வந்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நிறம் மாறிய நரி



சுந்தரவனம் என்ற ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. அந்த நரி மற்ற மிருகங்கள் வேட்டையாடிய உணவை திருடித் தின்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தது.

இதனால் அந்த நரியை வெறுத்து ஒதுக்கிய மற்றைய மிருகங்கள் சிங்கத்திடம் சென்று, நரி தமது உணவைத் திருடித் தின்பதாக முறைப்பாடு செய்தன.

இதைக் கேட்ட சிங்கம், நரியை அழைத்து "இனிமேல் இவ்வாறு செய்யக் கூடாது!" என்று கடுமையாக எச்சரித்து அனுப்பியது.

இனிமேலும் அந்தக் காட்டில் இருக்க முடியாது என்று நினைத்த நரி, 'பக்கத்தில் இருக்கும் கிராமத்திற்குச் சென்றால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோழிகளைப் பிடித்து உண்ணலாம்' என்று புறப்பட்டது.

கிராமத்திற்குள் சென்ற நரி, தவறுதலாக நீலச் சாயம் வைக்கப்பட்டிருந்த தொட்டி ஒன்றுக்குள் விழுந்துவிட்டது. இதன் காரணமாக நரி நீல நிறமாக மாறிவிட்டது.

தன்னுடைய நிறம் நீலமாக மாறியதைக் கண்ட நரி, 'இதனை வைத்துக் காட்டிலுள்ள மிருகங்களை ஏமாற்றலாம்' என்று நினைத்தது.

மறுபடி நரி காட்டிற்குச் சென்றது. அங்கு எல்லா மிருகங்களையும் அழைத்து,

"நான் இறைவனால் இந்தக் காட்டிற்கு அனுப்பப்பட்டவன். நான் ஒரு விசித்திரப் பிறவி. எனவே நான்தான் உங்களுக்கெல்லாம் தலைவன். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் எனக்கு உணவளிக்க வேண்டும்." என்று கூறியது.

நரி சொன்னதை மற்ற மிருகங்கள் ஏற்றுக்கொண்டன.

அதன்படி ஒவ்வொரு நாளும்-ஒவ்வொரு மிருகங்களும் தாம் வேட்டையாடிய உணவை நரிக்குப் போட்டன.

சில நாட்கள் சென்ற பின், அந்த மிருகங்களுக்கு நரியின் போக்கில் சிறு சந்தேகம் எழுந்தது. இந்தச் சந்தேகத்தைத் தெளிவுபடுத்த விரும்பின.

ஒரு நாள் நரி தன் குகையில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தது. திட்டமிட்டபடியே மற்ற மிருகங்கள் எல்லாம் அதைச் சூழ்ந்து நின்று கொண்டு பெரிதாகச் சத்தம் எழுப்பின.

இந்தச் சத்தத்தைக் கேட்டு தூக்கம் கலைந்து எழுந்த நரி, தன்னையே அறியாமல் ஊளையிட்டது.

இதனால் நரியின் சுயரூபம் வெளியாகியது. இதைக் கண்டுகொண்ட மற்ற மிருகங்கள் 'நரி தம்மை இவ்வளவு நாட்கள் ஏமாற்றி விட்டது' என்று கடுங்கோபம் கொண்டன.

நரியை அடியோ அடி என்று அடித்து அந்தக் காட்டிலிருந்தே துரத்திவிட்டன.

## அதிசயம்-ஆனால் உண்மை!



**மழைபொழியும் மரம்**

வெப்பவலயப் பகுதியில் காணப்படும் ஒரு மரம் 'சமானீசமன்'. பகல் நேரத்தில் இது தனது நெற்றுக்களில் ஈரப்பதத்தைச் சேமித்து வைத்து, இரவில் அதனை மழையாகப் பொழியும்.



**சிலுவைச் சிப்பி**

நத்தைச் சிப்பி வகையில் ஓர் இனம் இது. எப்பொழுதும் இது சிலுவையின் வடிவிலேயே தனது ஓட்டினை உருவாக்குகின்றது.

**டபி புயா நொடோசா**

தென் அமெரிக்காவில் இருக்கும் இந்தச் செடியில் பூக்கள் தோன்றினால், மறுநாள் மழை அடித்துக் கொட்டுமாம்.



**தவளை மீன்**

ஆசியக் கண்டத்தில் காணப்படும் இந்த மீன், நீருக்கு வெளியேயும் அதிக நாட்கள் உயிர் வாழும்.



## வாரம் ஒரு நாடு

### லெசோதோ



தலைநகர் - மஸேரு.
பரப்பு - 30,335 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை - 21 இலட்சம்.
மொழி - ஆங்கிலம், லெசோதோ.
எழுத்தறிவு - 60%.
சமயம் - பழங்குடி சமயம், கிறிஸ்தவம்.
நாணயம் - லோடி.
தனி நபர் வருமானம் - 660 டொலர்.

**அமைவிடம்:**

தென் ஆபிரிக்கக் குடியரசினுள் அமைந்துள்ள நாடு. இது முன்னர் பாஸுடோலாந்து என்ற பெயரில் இருந்தது.

**வரலாறு:**

1966ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ம் திகதி பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது. தற்போது இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. என்றாலும் நாட்டின் தலைவராக மன்னர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

**பொருளாதாரம்:**

முக்கிய தொழில் விவசாயம், இரத்தினங்கள், கம்பளி, அங்கோரா எனப்படும் ஆட்டின் ரோமம் என்பன முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.09.1997.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 208**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 206

**பரிசுக்குரியவர்:**
செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ்,
கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி வி. பிரதீபா, சைவமங்கையர் கழகம், வெள்ளவத்தை. | செல்வி சாந்தப்பிரியா கோபாலசிங்கம், கமு/விபுலாநந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-10. |
| சோமதேவா ஷண்சொரூபி, சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. | மும்தாஜ் யூசுப், க/அஸ்ஹர் தேசிய பாடசாலை, அக்குறணை. |
| பே.விஜிதா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | நிவ்யா குணரட்ணம், தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம். |
| திலீக்கா ரவி, முதலாவது டிவிசன், பெரியகல்லாறு. | எம்.ஏ.ஜெருன்னிஸா பேகம், அல் பஹ்றியா முஸ்லிம் மகா வித்.,பாணந்துறை. |
| எஸ். பாத்திமா, பாத்திமா மகளிர் மகா வித்., புத்தளம். | மயூரன் ஸ்ரீகாந்தகுமார் , பாக்கிய மகா வித்தியாலயம், மாத்தளை. |

## சின்னச் சின்னச் செய்திகள்

* மனித உடலில் உள்ள மொத்த சோடிவிலா எலும்புகளின் எண்ணிக்கையும், தேளின் உடலில் உள்ள வளையங்களின் எண்ணிக்கையும் ஒன்றே-12.


* விக்டோரியா ஏரியையும், வெள்ளை நதி தோன்றுமிடத்தையும் கண்டுபிடித்தவரும், கண்டுபிடித்த ஆண்டும் ஒன்றே. கண்டுபிடித்தவர்- இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்பெக். கண்டுபிடித்த ஆண்டு-1858.

* ஸாம்பியா நாட்டின் மக்கள் தொகையும், சவுதி அரேபியாவின் மக்கள் தொகையும் ஒன்றே-84 இலட்சம்.

* நத்தையின் வேகமும், சிப்பியின் வேகமும் ஒன்றே. மணிக்கு 0.000362 மைல் வேகம்.

* வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனிக்கும், ஆங்கிலக் கவிஞர் மில்டனுக்கும் இடது கண் பார்வை கிடையாது.

## பனிப்பகுதி ஆந்தை



ஆந்தைகளில் மட்டும் முப்பதிற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. இவற்றில் மிகவும் முக்கியமானவை பனிப்பிரதேசங்களில் வாழும் ஆந்தை. இந்த வகை ஆந்தை வெள்ளை நிறமாக இருக்கும்.

இந்தப் பனிப்பகுதி ஆந்தை இப்போது உலகில் ஏறக்குறைய 30 மட்டுமே இருக்கின்றனவாம்.

## கோப்பியின் கதை



இன்று முக்கிய பானமாக இருக்கும் கோப்பி, கண்டுபிடிக்கப்பட்டது ஒரு தற்செயலான நிகழ்வாகும். எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்த கால்டி என்ற முஸ்லிம் இளைஞன், ஆடுமேய்த்துக் கொண்டிருந்தபோது, அவனது ஆடுகள் ஒரு செடியில் காணப்பட்ட விதைகளைத் தின்றன. சிறிது நேரத்தில் அவை உற்சாகமாகத் துள்ளின.



அந்த இளைஞன் இந்தச் சம்பவத்தைத் தமது மதகுருவிடம் தெரிவித்தான். மதகுரு அந்த விதையில் இருந்து பானத்தைத் தயாரித்து தனது சீடர்களுக்குக் கொடுத்தார். அன்று அவர்கள் கொஞ்சமும் உற்சாகம் குறையாமல், நீண்ட நேரம் பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். இதுவே பின்னாளில் 'கோப்பி விதைகள்' என்று கண்டறியப்பட்டது.

எண்ணெய் வியாபாரத்திற்குப் பிறகு சர்வதேச அளவில் கோப்பி விதை வியாபாரம் பிரபலமானது. அமெரிக்காவின் முக்கிய நகரங்களின் ஒன்றான நியூயோர்க்கில் ஒருவர் தினமும் 5 கப் கோப்பி பருகுகிறார் என்கிறது புள்ளிவிபரம் ஒன்று.

## சுதந்திரமடைந்த நாடுகள்

'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மீது சூரியன் ஒரு போதும் அஸ்தமிக்காது' என்று ஆங்கிலேயர்கள் அந்தக்காலத்தில் சொல்வார்கள். ஏனென்றால், அவர்கள் உலகின் பல நாடுகளைத் தமக்குக் கீழ் வைத்திருந்தனர்.

இப்போது இங்கிலாந்திடமிருந்து பல நாடுகள் சுதந்திரமடைந்து விட்டன. கடைசியாக இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற்ற நாடு ஹொங்கொங். தற்போது இங்கிலாந்தின் வசம் இருப்பது 10 தீவுகள் மட்டுமே.

இங்கிலாந்தின் பிடியில் இருந்து விடுபட்ட நாடுகள் இதோ:

1947- இந்தியா, பாகிஸ்தான்.
1948- இலங்கை.
1957- கானா, மலேசியா.
1960- கமரூன், நைஜீரியா.
1961- சைப்பிரஸ், சியர்ரா லியோன், தன்சானியா.
1962- ஜமெய்க்கா, டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ, உகண்டா.
1963- கென்யா.
1964- மலாவி, மால்ட்டா, ஸாம்பியா.
1965- காம்பியா, சிங்கப்பூர்.
1966- பார்ப்படோஸ், பொட்ஸ்வானா, கயானா, லெசோதோ
1968- மொரீஷியஸ், நௌரு, சுவாசிலாந்து.
1970- ஃபிஜி, டோங்கா.
1973- பகாமாஸ்.
1974- கிரெனடா.
1975- பப்புவா நியூகினியா.
1976- செஷெல்ஸ்.
1978- டொமினிகா, சாலமன் தீவுகள், தூவலு.
1979- கிரிபாடி, சென்ட் லூஸியா, சென்ட் வின்செண்ட், கினேனெயிட்.
1980- வனாட்டு, ஸிம்பாப்வே.
1981- அன்டிகுவா அன்ட் பாபுடா, பலிசா.
1982- மாலைதீவுகள்.
1983- சென்ட் கிட்ஸ், நெவிஸ்.
1984- பிரணாய்.
1997- ஹொங்கொங்.

www.padippakam.com




# உடைந்த இரவு

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**சென்றவாரம்**

புதர்களுக்குள் ஒழிந்திருந்த பட்டாபியைப் பாத்துவிடுகிறான் பாஸ்கர். எழும்பி ஓட முற்பட்ட பட்டாபியின் மேல் பாய்ந்த பாஸ்கர் அவனை உருட்டித் தள்ளி அவன் மேல் ஏறி அமர்ந்து கொண்டு பிஸ்டலைத் தொண்டைக்குள் திணிக்கிறான். சுட்டுக் கொல்லப் போவதாகவும் மிரட்டுகிறான்.

பட்டாபி கெஞ்சுகிறான். தன்னை விட்டு விடும்படியும் யார் வழியிலும் குறுக்கிடமாட்டேன் என்றும் இரந்து கேட்கிறான்.


பாஸ்கர் மசியவில்லை. சைலன்சர் பொருத்தப்பட்ட பிஸ்டலால் சுட்டுத் தீர்க்கிறான். பட்டாபியின் உடற் துடிப்பு அடங்கும்வரை அப்படியேமேலே இருக்கிறான்.

டெலிஃபோனில் மைத்திரேயியை ஆவடிக்கு காரில் வரும்படி கேட்கிறான். அவளும் வந்து சேர்கிறாள். இருவரும் இருளில் பட்டாபியின் உயிரற்ற உடல் இருக்குமிடம் நோக்கிச் செல்கிறார்கள்.

**இனி...**

வானத்தில் இருந்த நட்சத்திர வெளிச்சம் பொட்டல் வெளியில் கொட்டியிருந்த இருட்டை லேசாய் கழுவியிருக்க பாஸ்கரும் மைத்ரேயியும் பார்த்தீனிய செடிகளை மிதித்துக் கொண்டு நடந்தார்கள்.

மின்மினிப் பூச்சிகள் பளிச் பளிச் சென்று பறந்து கொண்டிருக்க திருகுப் பூச்சிகள் 'ர்ர்ர்ர்'ரென்று இருட்டை ட்ரில் போட்டுக் கொண்டிருந்தன.



"பாஸ்கர்"

மைத்ரேயி கூப்பிட்டாள்.

"ம்..."

"பட்டாபியோட பாடியை புதர்க்குள்ளே நல்லா மறைச்சு வெச்சுட்டுதானே வந்தீங்க....?"

"ஆமா...."

"யாரும் பார்த்திருக்க மாட்டாங்களே...?"

"பார்த்திருக்க வாய்ப்பில்லை....! இந்தப் பக்கமா வா மைத்ரேயி...." வழி மாற்றி கூட்டிப் போனான் பாஸ்கர். பார்த்தீனிய செடிகள் காலில் மிதிபட்டன.

ஐந்து நிமிஷ நடைக்குப் பின் பாஸ்கர் நின்றான். மைத்ரேயி கேட்டாள். "இந்த இடமா....?"

"ஆமா..."

"பாடி எங்கே...?"

"இதோ!" கீழே குனிந்து புதரைக் காட்ட மைத்ரேயி பார்வையை அங்கே கொண்டு போனாள்.

புதருக்கு வெளியே.

இரண்டு கால்கள் நீட்டிக் கொண்டு தெரிந்தன.

பாஸ்கர் குத்துக்காலிட்டு உட்கார்ந்து பட்டாபியின் கால்களைப் பிடித்து இழுக்க உடல் வெளியே வந்தது. உடம்பைத் தொட்ட இடமெல்லாம் ரத்தம் பிசுபிசுத்தது. "பாஸ்கர்" மைத்ரேயி அவனுடைய தோளைத் தொட்டாள்.

"என்ன?"

"இந்த பாடியை எப்படிக் கார் வரைக்கும் கொண்டு போறது?"

"நீ தலைமாட்டைப் பிடி... நான் கால் மாட்டைப் பிடிக்கிறேன். ஈஸியா கொண்டு போயிடலாம்."

"யாராவது பார்த்துட்டா?"

"ஏன் மைத்ரேயி.... இப்படி பயப்படறே.... இந்த ராத்திரி நேரத்துல... இந்த பொட்டல் காட்ல யார் பார்க்கப் போறாங்க...?"

"எனக்கென்னமோ மனசு 'திக் திக்'ன்னு இருக்கு...! யாராவது பார்த்துட்டா தொலைஞ்சோம்...."

"அநாவசியமா கற்பனை பண்ணாமே பாடியோட தலைமாட்டைப் பிடி காருக்கு கொண்டு போயிடலாம்...."

"காரை இங்கேயே கொண்டு வந்துட்டா என்ன..?"

"வேண்டாம்... இது களிமண் பூமி. நேத்து பெய்த மழையில் அங்கங்கே சகதியா இருக்கு. கார் சகதியில் மாட்டிகிட்டா ராத்திரி பூராவும் இங்கேயே இருக்க வேண்டியதுதான். பாடியை இங்கிருந்து கொண்டு போயிடறது பெட்டர்... தலைமாட்டைப்பிடி..."

மைத்ரேயி குனிந்து பட்டாபியின் தோள் பட்டைகளைப் பிடித்து தூக்கினாள்.

கனத்தது.

இருவரும் மூச்சை அடக்கிக் கொண்டு பட்டாபியின் உடலை தூக்கிக் கொண்டு காரை நோக்கி நடந்தார்கள்.

சிறிது தூரம் நடப்பதற்குள் மைத்ரேயிக்கு மூச்சிரைத்தது.

"பா....பாஸ்கர்..."

"என்ன மைத்ரேயி..?"

"என்னால முடியலை..."

"கொஞ்ச தூரம்தான்... சிரமம் பார்க்காமே பிடி...."

மைத்ரேயி, வியர்த்து வழிந்து கொண்டு பட்டாபியின் உடலைத் தூக்கினாள். தோள்பட்டைகள் இரண்டும் இற்றுப் போய்விட்டதைப் போன்ற உணர்வு.

சிரமப்பட்டு அங்குலம் அங்குலமாய் நகர்ந்து காரைத் தொட்டார்கள்.

"மைத்ரேயி! டிக்கியைத் திறந்து வை...."

அவள் திறந்து வைக்க, பாஸ்கர் பட்டாபியின் உடலை மூட்டை மாதிரி தூக்கி டிக்கியில் உள்ளே திணித்தான்.

டிக்கி மூடப்பட்டது.

மைத்ரேயி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு கேட்டாள். "பாஸ்கர் பட்டாபியோட பாடியை எப்படி டிஸ்போஸ் பண்றது,"

"முதல்ல காரை கிளப்பு... சொல்றேன்..."

இருவரும் காருக்குள் ஏறி உட்கார்ந்தார்கள். மைத்ரேயி இக்னீஷியனை உசுப்பி காரை நகர வைத்தாள்.

★★★

**கா**ர் ஆவடி எல்லையைத் தாண்டியது. மைத்ரேயி பாஸ்கரை ஏறிட்டாள்.

"சொல்லுங்க... எப்படி டிஸ்போஸ்...?"

"இப்ப நேரா முட்டுக்காடு போறோம்..."

"போய்...?"

"அங்கே சவுக்குத் தோப்புக்குள்ளே எதுக்கும் உபயோகப்படாத நாலைஞ்சு பாறைக் கிணறுகள் இருக்கு... அதுல ஏதாவது ஒண்ணுல பட்டாபியோட உடலைத் தூக்கிப் போட்டுடலாம்..."

"ஆட்கள் அந்தப் பக்கம் வரமாட்டாங்களா?"

"வரமாட்டாங்க..."

"ஒரு வேளை யாராவது வந்து கிணத்தை எட்டிப் பார்த்து பாடி மிதக்கறதைப் பார்த்துட்டா....?"

"பாடி மிதக்கற மாதிரியா கிணத்துக்குள்ளே தூக்கிப் போடுவோம்... பாடியோடு சேர்த்து ஒரு பெரிய கல்லைக் கட்டிட்டா... பாடி எந்த காலத்துக்கும் மேலே வராது..."

"பாஸ்கர்..."

"சொல்லு...."

"பட்டாபியோட பாடியை அவ்வளவு தூரம் கொண்டு போய் டிஸ்போஸ் பண்றது எம்மனசுக்கு சரியாப் படலை...."

"வேற என்னதான் செய்யலாம்னு சொல்றே....?"

"இங்கேயே- எங்கேயாவது பொட்டல் வெளியா பார்த்து பாடியை பெட்ரோல் ஊத்தி எரிச்சுட்டு போயிடலாம்...."

"மைத்ரேயி! புரியாம பேசாதே...! பாடியை எரிக்கிறது சாதாரண விஷயமில்லை. பாடி முழுசுமா எரிஞ்சு முடிய ஒரு மணி நேரத்துக்கு மேலே ஆகும். அது வரைக்கும் நாம அதே இடத்துல காத்திட்டிருக்க முடியுமா....? அது தவிர பாடியை எரிக்கும் போது நெருப்போட வெளிச்சம் இந்த ராத்திரி நேரத்துல ரொம்ப தூரத்துக்கு தெரியும்... அதை பார்த்துட்டு யாராவது வரவும் வாய்ப்பிருக்கு..."

"முட்டுக்காடு இங்கிருந்து ரொம்ப தூரம் இருக்கு. போய்ச் சேரவே ஒரு மணி நேரமாயிடும். பாடியை டிஸ்போஸ் பண்ணிட்டு வீடு திரும்பறதுக்குள்ளே மணி ரெண்டாயிடும். செக்கண்ட் ஷோ சினிமா பார்க்கப் போயிருக்கிற வையாபுரி மாமாவும் அத்தையும் சினிமா பார்த்துட்டு ஒரு மணிக்கெல்லாம் வந்துடுவாங்களே....? அந்த மிட்நைட் வேளையில் நான் வெளியே போயிருக்கிறது தெரிஞ்சா அவங்க என்ன நினைப்பாங்க...?'

"கார்ல வேகமா போனா.... அரைமணி நேரத்துக்குள்ளே முட்டுக்காடு போய் சேர்ந்துடலாம். பாடியை பத்து நிமிஷத்துக்குள்ளே டிஸ்போஸ் பண்ணிட்டு உடனே அரைமணி நேரத்துக்குள்ளே ரிடர்ன் ஆயிடலாம்..."

"முடியுமா பாஸ்கர்...?"

"ஏன் முடியாது...? ட்ராஃபிக் இல்லாத மெட்ராஸ் ரோட்ல காரை எண்பதுல விரட்டு... அரைமணி நேரத்துக்குள்ளே முட்டுக்காடு போய் சேர்ந்துடலாம்...."

மைத்ரேயியின் கொலுசு அணிந்த பாதம் ஆக்ஸிலேட்டரை மிதிக்க கார் இறக்கைகளைக் கட்டிக் கொண்டு காற்றைச் சீவியது.

"பாஸ்கர்....! பட்டாபியோட பாடியை டிஸ்போஸ் பண்ணிட்டா பிரச்னை முடிஞ்சுடுமென்று நினைக்கிறீங்களா...?"

"கண்டிப்பா....! ஆமா... உனக்கு ஏன் சந்தேகம்...?"

"இந்த பட்டாபி... நம்ம ரெண்டு பேருக்கும் உள்ள தொடர்பைப் பத்தி அவனுக்கு தெரிஞ்ச வேறு யார்கிட்டயாவது சொல்லியிருந்தா..."

"சொல்லியிருக்கமாட்டான்..."

"எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க...?"

"பட்டாபியோட கேரக்டர் வித்தியாசமானதா இருக்கு. நீ உன் புருஷனுக்கு துரோகம் பண்ணக்கூடாது. திருந்தணும்னு அவன் நினைச்சான். அப்படி எண்ணம் வெச்சிருக்கிறவன் நிச்சயமா... வெளியே யார்கிட்டேயும் நம்ம தொடர்பைப் பத்தி சொல்லியிருக்கமாட்டான்."

"வீட்ல இருக்கிறவங்ககிட்ட கூட சொல்லியிருக்க மாட்டானா?"

"அவனுக்கு அப்பா அம்மாவைத் தவிர வேறு எந்த உறவும் கிடையாது. அவங்களும் கிராமத்துல இருக்காங்க..."

பாஸ்கர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே காரின் வேகம் குறைந்தது.

"என்ன மைத்ரேயி....?"

"எதிர்ல பாருங்க...."

பாஸ்கர் பார்த்தான்.

ரோட்டின் குறுக்கே யாரோ நின்று கையசைப்பது தெரிந்தது.-

"யாரு...?"

"தெரியலையே..."

"எவனோ லிஃப்ட் கேக்க காரை நிறுத்தறான்னு நினைக்கிறேன்."

"காரை நிறுத்தாதே...."

"எப்படி பாஸ்கர்...? நடு ரோட்ல நின்னுட்டு கையை ஆட்டறானே... மோதிட்டா போக முடியும்..."

மைத்ரேயி சொல்லிக்கொண்டிருக்கும் போதே கார் வெகுவாய் வேகம் குறைந்து அவனுக்குப் பக்கத்தில் போய் நின்றது.

ரோட்டில் நின்றிருந்த இளைஞன் காரைச் சுற்றிக் கொண்டுவந்து மைத்ரேயின் அருகில் குனிந்தான்.

"அம்மா....! என்னோட ஒய்ஃப் விஷம் குடிச்சுட்டு உயிருக்கு ஆபத்தான நிலைமையில் போராடிகிட்டு இருக்கா... ஆட்டோவில வெச்சு ஜி.ஹெச்சுக்குக் கொண்டு போயிட்டிருந்தோம். ஆட்டோ ரிப்பேராயி நின்னுடுச்சு.. உங்க கார்ல ஜி.ஹெச்சுக்கு கொண்டு போயிட்டா... என் மனைவியை காப்பாத்திட முடியும். கொஞ்சம் பெரிய மனது பண்ணி லிஃப்ட் கொடுங்கம்மா...."

மைத்ரேயி பார்வையை ரோட்டோரமாய் நின்றிருந்த ஆட்டோவுக்கு கொண்டு போக, ஆட்டோவுக்குள் ஒரு பெண் மல்லாந்த நிலையில் துடிப்பது தெரிந்தது. ஆட்டோ டிரைவர் தீக்குச்சி வெளிச்சத்தில் என்ஜினுக்குள் இருந்த ஒரு வயரை இழுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பாஸ்கர் அந்த இளைஞனிடம் சொன்னான்.

"நாங்க... அவசரமா ஒரு இடத்துக்கு போயிட்டிருக்கோம்... வேறு ஏதாவது ஆட்டோ கிடைக்குமான்னு பாருங்களேன்..."

"அப்படி சொல்லாதீங்க ஸார்... இந்த நேரத்துல ஆட்டோ கிடைக்காது. சரியான நேரத்துக்கு ஹாஸ்பிடல் கொண்டு போகலைன்னா... என்னோட ஒய்ஃப் செத்துடுவா ஸார்... ப்ளீஸ்.... லிஃப்ட் குடுங்க ஸார்..."

மைத்ரேயி பாஸ்கரைப் பார்த்தாள்.

"என்னங்க... பண்றது...?"

ரிப்பேர் பார்த்துக் கொண்டிருந்த ஆட்டோ டிரைவர் வேக வேகமாய் பக்கத்தில் வந்தார்.

"என்ன ஸார் யோசனை பண்ணிட்டிருக்கீங்க... அந்தப் பொண்ணு துடிக்கிற துடிப்பைப் பார்த்தா செத்துடுவா போலிருக்கு... சீக்கிரமா எடுத்து கார்ல போடுங்க..."

பாஸ்கர், மைத்ரேயி என்ன பதில் சொல்வது என்று திணறிக் கொண்டிருக்கும் போதே-

டிரைவரும் அந்த இளைஞனும் சேர்ந்து விஷம் குடித்திருந்த பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்து காரின் பின் சீட்டில் கிடத்தினார்கள். அந்த இளைஞன் ஏறிக் கொண்டான்.

மைத்ரேயி பாஸ்கரை ஒரு பெருமூச்சோடு பார்த்துவிட்டு மெதுவாய் காரை நகர்த்தினாள்.

"சீக்கிரமா காரை ஓட்டுங்கம்மா...."

டிரைவர் வெளியே இருந்து கத்த ஆக்ஸிலேட்டரை கோபத்துடன் மிதித்தாள்.

கார் வேகம் எடுத்தது.

●●●

**கா**ர் ஜி.ஹெச் போய் சேர்ந்த போது நேரம் சரியாய் 12.15.

எமர் ஜென்ஸி வார்டு வெறிச்சோடிப் போய் கிடக்க, இளைஞன் காரினின்றும் இறங்கி உள்ளே ஓடினான்.

பாஸ்கரும் மைத்ரேயியும் ஒருத்தரையொருத்தர் கலக்கமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நல்லா மாட்டிக்கிட்டோம்..."

"நேரம் போய்க்கிட்டே இருக்கு...."

"ஸ்ட்ரெச்சர் வந்ததும் இந்தப் பெண்ணை ஏத்தி அனுப்பிட்டு நாம கிளம்பிடுவோம்...."

உள்ளே போன இளைஞனுக்காக காத்திருக்க ஆரம்பித்தார்கள் பாஸ்கரும், மைத்ரேயியும். நிமிஷங்கள் கழிந்து கொண்டிருந்தன. இளைஞனைக் காணோம்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். நரசிம்மன்,
வயது: 22
முகவரி: 20, சுபோதராம வீதி, தெஹிவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: ரி. உஷாங்கனி,
வயது: 18
முகவரி: 39/77, நெல்சன் லேன், கொழும்பு-3.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ். யோகராஜா,
வயது: 28
முகவரி: ZAHRINGERSTRASSE-57, 3012 BERN, SWITZERLAND.
பொழுதுபோக்கு: ரீ.வி., வானொலி.



பெயர்: எம். பௌஸ்,
வயது: 19
முகவரி: 557 என்/1, சம்சம் வீதி, மருதமுனை-3.
பொழுது போக்கு: உதைபந்து, பத்திரிகை.



பெயர்: என். ஆயிஷா,
வயது: 22
முகவரி: 36, அத்தனகல, லுணுகல.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். ஹுஸைன்,
வயது: 24
முகவரி: P.O.BOX-201, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: பி. நைஸர்,
வயது: 19
முகவரி: 398, தம்புள்ள வீதி, கெக்கிராவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். நிஸ்வர்,
வயது: 22
முகவரி: 37, மத்திய சந்தை, நுவரெலியா.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர்: பி. சுதாகரன்,
வயது: 21
முகவரி: 159, பழைய கல்முனை வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: சதுரங்கம் விளையாடுதல்.

பெயர்: ஏ. வரதகுமாரன்,
வயது: 19
முகவரி: 6ம் வட்டாரம், உடப்பு.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஆர். குமார்,
வயது: 26
முகவரி: 282, CHURCH LANE, KINGSBURY, MIDDX, NW9 8LU, LONDON, U.K.
பொழுது போக்கு: ரீ.வி. பார்த்தல்.

பெயர்: பி. முகமட் ஹனி,
வயது: 24
முகவரி: 560, நீரெல்லை, அக்குறணை, கண்டி.
பொழுது போக்கு: பேனா நட்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

அத்தியாயம் 26

பிரபஞ்சன்

**இதுவரை**

சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார். சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர்.

கணேசனைவிட சுமதிக்கு நல்ல வேலை, நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது.

சுமதியை கணேசன் கொடுமைப் படுத்துகிறான். வீட்டை விட்டு அடித்து விரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள்.

ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்து கோரும் முடிவுக்கு வருகிறாள்.

இனி...

"வரலாமா? ஆனால் என்ன?"

"நீங்கள் ரொம்பப் பெரியவர். மிகப் பெரிய உத்தியோகம் வகிப்பவர். உங்கள் மகளைப் போல என்னை எண்ணிக் கொண்டு துணைக்கு நீங்கள் வருவதை யாராவது பொறுக்கிகள் தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடும்தானே பாருங்கள். உலகம் பூராவும் பொறுக்கிகள் மயம்தானே? என்ன சொல்கிறீர்கள்?"

அந்த அதிகாரியின் முகம் மாறியது.

"பைலைப் பார்க்கலாமா, சார்?"

"பார்க்கலாமே...."

அவர் பார்ப்பதாகப் பாவனை செய்தது சுமதிக்குப் புரிந்தது.

சுமார் இரண்டு மணியைப்போல், நாகராஜன் ஃபோன் செய்தார். நாகராஜன், அவளுடன் பணியாற்றும், மிக மரியாதையானவர் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும் மனிதர்களில் ஒருவர்.

"சொல்லுங்கள் நாகராஜன்" என்று ஃபோனைக் காதில் வைத்துக்கொண்டு கேட்டாள் அவள்.

"எப்படி இருக்கிறீர்கள்?"

"உம். நன்றாக இருக்கிறேன்."

"பாஸ் கூப்பிட்டாராமே...."

"ஆம். பைல் ஒன்று கேட்டார்."

"பைல் மட்டும்தானே?"

"ஆமாம்."

"கிழக்கோட்டான் ஒரு மாதிரி பேசியிருக்குமே."

"வேறு ஏதாவது பேசுங்கள். ஃபோன் செய்தீர்களே. என்ன சேதி."

"அப்புறம் வேறு செய்தி ஏதாவது உண்டா?"

"எது விஷயமாக?"

"விவாகரத்து வழக்கு பற்றி."

"இல்லை. நம்மூர் கோர்ட்டுகள், மனிதர்கள் பிரச்சனையை உடனுக்குடன் ஆராய்ந்து, நீதி சொல்லி, அவர்களைச் சந்தோஷமாக வாழ வைத்து விடுமா?"

"அது சரிதான். சரி. சாயங்காலம் ஆபீஸ் விட்டதும் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ஆபீஸ் விட்டதும் வீட்டுக்குப் போவேன்."

"வீட்டில் யார் இருக்கிறார்கள்?"

"என் துணைவியும், சமையல்காரியுமான துளசி இருக்கிறாள்."

"சரி. நாம் சாயங்காலம் எங்காவது பீச்சுக்குப் போகலாமே. அப்படியே எங்காவது டின்னர் சாப்பிடலாம்."

"ஏதாவது விசேஷமா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"எந்த விசேஷமும் இல்லாமல் டின்னருக்கு போவது சரியாகுமா? அதற்கு வேறு அர்த்தம் கற்பிக்கப்படுமே, நாகராஜன். எனக்கும் அது பிடிக்காது நண்பரே."

"அப்போ முடியாது என்கிறீர்களா?"

"முடியாது என்று சொல்லவில்லையே. எதற்கும் ஒரு அவசியம் இருக்க வேண்டும் என்பதற்காகவே."

"என்னை மன்னித்து விடுங்கள்."

"அதற்கும் அவசியம் இல்லை."

சுமதி இந்த அனுபவங்களில் இருந்து ஒரு விஷயத்தை சத்தத்துடன் கற்றுக் கொண்டாள். தனியாக, கணவன் மற்றும் பெற்றோர், சகோதரர் துணையின்றி ஒரு பெண் இங்கு வாழ்வது மிகவும் அரிது என்கிறது. யதார்த்தம் அது.

கல்யாணம் ஆகாத பெண்களுக்கு ஆண்கள் தரும் தொந்தரவுகளைக் காட்டிலும், கணவனை விட்டுப் பிரிந்து வாழும் பெண்களுக்குக் கிடைக்கும் தொல்லை மிக அதிகமாகவல்லவோ இருக்கிறது. மிச்சம் இருக்கிற வாழ்நாளை கௌரவமாக எப்படிக் கழிப்பது என்கிற கேள்வி பூதாகரமாக அவளுக்குள் தோன்றியது.

கணவன் ஒரு கயவன் என்பது காரணமாக அவனை விட்டுப் பிரிந்து வந்தால், கணவனைப் போலவே மற்றவர்களும் இருந்தால் என்ன செய்வது? 'என்னைக் குணங்களும் உணர்வுகளும் கொண்ட ஒரு பெண்ணாகப் பாருங்களேன்!' என்று கத்த வேண்டும் போல் இருந்தது, அவளுக்கு.

அந்த இரு மனிதர்களின் பேச்சுக்குப் பிறகு, அவளுக்கு வேலை செய்யவே தோன்றவில்லை. நான்கு மணிக்கே புறப்பட்டு வீடு போய்ச் சேர்ந்தாள் சுமதி.

துளசி கொடுத்த காபியைக் குடித்து



விட்டு, ஏதேனும் தபால் இருக்கிறதா என்று கவனித்தாள் சுமதி. சில தபால்கள் வந்திருந்தன. அம்மா, அப்பா ஒரே கடிதத்தில் வழக்கம்போல் அழுது கொண்டே எழுதியிருந்தார்கள்.

சுவாரஸ்யம் இன்றி கடிதங்களைப் படித்த பின் எழுந்து போய்க் குளித்தாள். ஊர் முழுக்க அழுக்காக இருக்கையில், ஒரு பெண் இரண்டு முறை குளிப்பது அவசியம் ஆகிறது.

சாப்பிடத் தட்டை எடுத்து வைத்தபோது தான் வெளியில் இருந்து ஒரு மாபெரும் கூச்சல் எழுந்தது. சுமதி எழுந்து ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தாள்.

கணேசன்.

தலைவிரி கோலமாய், ஆடைகள் ஒழுங்கற்றுத் தொங்க, தள்ளாடித் தள்ளாடி, வாய்விட்டுச் சொல்ல முடியாத வசவு வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தான் கணேசன்.

"தேவடியாளே, வெளியே வாடி..."

"வா, வெளியே... புருஷனை விட்டு விட்டு, கண்டவனோடு கூத்தடிக்கத்தானே இங்கு வந்து வீடு எடுத்திருக்கே?

சார். இந்த வீட்டில் இருக்கிறது என் பெண்டாட்டி சார்.... என்னை விட்டுட்டு வந்துட்டா சார்.... நீங்க நியாயம் சொல்லுங்க. நீங்க நியாயம் சொல்லுங்க சார்...."

கூட்டம் சேர்ந்திருந்தது. தமிழர்களுக்கு இது ஒரு வேடிக்கை. பாம்புக்கும் கீரிக்கும் நடக்கப்போகிற சண்டையைப் பார்க்கக் கூடக் கூட்டம் சேரும் நாடு தமிழ்நாடு.

சுமதி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

●●●

சுமதி அதுவரை படித்துக் கொண்டிருந்த பாரதியார் கவிதைகள் புத்தகத்தை மூடி வைத்தாள். படிப்போருக்கு அதிலும் பெண்களுக்குத்தான் அந்தக் கவிஞன் எவ்வளவு பெரிய ஆதர்சனத்தைத் தருகிறான். பகல் நேரத்தில் சக அலுவலர்கள் தரும் துன்பத்தையும், இரவில் குடித்துவிட்டு வந்து குடியிருக்கும் வீட்டுக்கு முன்நின்று கலாட்டா செய்யும் கணவனையும் எப்படி வெல்லப் போகிறோம் என்று இருந்தது அவளுக்கு. வெல்லக் கருவி கண்டு பிடித்து விட்டதாக அவள் நம்பினாள். மனத் துணிவு, செய்கையில் நேர்மை இவை இரண்டுமே ஒரு பெண்ணை நேராக வாழவைக்கும் சக்திகள் என்பதை அவள் உணர்ந்தாள்.

'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சா நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேர் இருளாம் அறியாமையில்
அலை மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறம் ஆகுமாம்.'

பாடலை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தாள். எவ்வளவு அர்த்தம் பொருந்திய பாட்டு? நல்ல பெண்கள் மாறுபடாமல் இருக்கும் வழிகளைக் கவி சொல்லும் வழியில் நின்றுதான் சாதித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டாள் அவள். நிமிர்ந்த நடை, நேரான பார்வை, யாருக்கும் அஞ்சத் தேவைப்படாத நல்லொழுக்கம்– இவைகள் இருந்தால், எந்தப்பெண்ணை யார்தான் என்ன செய்து விட முடியும்?

அவள் மனம் அமைதி கொண்டது.

அந்தக் கணம் முதல் உலகத்தைத் தெளிவான மனதால் பார்க்கத் தலைப்பட்டாள்.

'நான் தனியாய் இருப்பவள்' என்று என்னைப் பார்ப்பவர் நினைக்கக் கூடும். நினைக்கட்டுமே. உண்மையும் அது தானே. என்னைச் சுலபமானவள் என்று யார் நினைக்கக்கூடும்? நினைக்கட்டுமே. அதனால் எனக்கென்ன? நான் சுலபமானவள் இல்லை என்று எனக்குத் தெரியுமே. நான் அலுவலகம் செல்ல வேண்டியிருப்பதால் நன்கு அழகாக உடுத்துகிறேன். அதனால் நான் ஒரு மாதிரிப்பட்டவள் என்று பெண்களில் பலர் நினைக்கக்கூடும். நினைக்கட்டுமே. அதனால் எனக்கென்ன? உண்மையை என் நெஞ்சு அறியுமே. ஊரார் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று அஞ்சுவதே பேதமை தானே! ஊருக்குள், என்னை எதற்குப் பொருத்திப் பார்க்கிறேன். எனக்குள் ஊரைப் பொருத்திப் பார்ப்பதல்லவா, நான் செய்ய வேண்டுவது?

அந்த முப்பத்திமூன்று வயதில், அந்தக் கணத்தில் அவள் அடைந்த நிம்மதிக்கு இணையான அமைதியை வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் அவள் அடையவில்லை.

வசந்திக்குப் ஃபோன் செய்து பேச வேண்டும்போல இருந்தது. மகிழ்ச்சியை, புதிதாகத் தோற்றிக் கொண்ட இந்த அமைதியை, ஒரு நல்ல சிநேகிதியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் போல் அவளுக்கு இருந்தது. மருத்துவமனைக் குப் ஃபோன் செய்தாள்.

வசந்தி கிடைத்தாள்.

"அட. என்ன ஆச்சர்யம், சுமதியா பேசுவது?"

"ஏன். நான் உங்களிடம் பேசுவதில் என்ன ஆச்சர்யம் இருக்க முடியும்?"

"பல மாசங்களுக்குப் பிறகு பேசுகிறீர்கள். இப்போது சுதந்திரம் பெற்ற பிரஜையைப் போல இருக்கிறீர்கள் அல்லவா? அதன் சாயல் உங்கள் குரலில் தெரிகிறது. அதனால்தான் அப்படிச் சொன்னேன்."

"பீட்டர் எப்படி இருக்கிறார்?"

"ரொம்ப நன்றாக இருக்கிறார். கடந்த வாரம் கடைசி இரண்டு நாட்களும் அவருடன் தான் இருந்தேன்."

"உங்களுடன் பேச வேண்டுமே..."

"எப்போது எங்கு சந்திப்போம்? நாங்கள் வரலாமா? அல்லது நீங்கள் வீட்டுக்கு வருகிறீர்களா?"

சுமதியே வசந்தியின் வீட்டுக்குப் போனாள். மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் ஒரு வீட்டு மாடிப் போர்ஷனை எடுத்திருந்தாள் வசந்தி. வீடு, தீப்பெட்டி மாதிரி சின்னதாக, ஆனால் அவள் ஒருத்திக்குப் போதுமானதாக இருந்தது. நுழைந்ததும், ஒரு சின்ன ஹால், அதை ஒட்டி ஒரு படுக்கை அறை. சின்னச் சின்ன அளவில் டாய்லட்டும், குளியல் அறையும்.

"என்ன வாடகை?"

"மாசம் நாநூற்று ஐம்பது ரூபாய்."

"கொஞ்சம் அதிகம் இல்லை?"

"ஆமாம். ஆனால் அட்வான்ஸ் இரண்டாயிரம்தான். அதனாலேதான் இதைப் பிடித்தேன். எப்போதும் அட்வான்ஸ் குறைவாக இருந்தால், வாடகை அதிகமாக இருக்கும். வீடு கட்டி அதை வாடகைக்கு விடுகிறவர்கள் மனோபாவமே ரொம்ப விசித்திரம்."

"பீட்டர் அடிக்கடி வருகிறாரா?"

"உம், வார இறுதி நாட்களில், சனி ஞாயிறுகளில் நாங்கள் சந்திக்கிறோம். அவர் இங்கு தங்குவார். திங்கள் காலை அவர், அவருடைய பணிக்கும். நான் என்னுடைய பணிக்கும் செல்கிறோம்."

"கல்யாணம் பண்ணிக்கலையா?"

"வேண்டாம் என்று பீட்டர் சொல்லி விட்டார். நாங்கள் கணவன் மனைவி உறவு கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதை எங்களுக்கே நிரூபித்துக் கொள்ள என்ன அவசியம்? கல்யாணம் என்பது சமூக அங்கீகாரம் கோருவதற் காகத்தானே. சமூக அங்கீகாரம் எங்கள் வாழ்க்கைக்கு என்ன புதிய வர்ணத்தை ஏற்படுத்தக் கூடும்? எனக்கு அவரைப் பிடிக்கிறது. அவருக்கு என்னைப் பிடிக்கிறது? சேர்ந்து இருக்க தீர்மானித்தோம். தாலி கட்டிக்கொண்டால் தான் தாம்பத்தியமா என்ன?"

(தொடர்ந்து வரும்)

---

# தலைவிதி!?



யாழ்-மு.கலை

இந்திரா, தன் மகள் வாணியுடன் திருமலை, கிறீன் வீதியில் நடந்து கொண்டிருந்தாள். கிறீன் வீதியில் எத்தனை வீடுகள், கடைகள் இருக்கின்றன, என்பது அவளுக்கு மனப்பாடமாகிவிட்டிருந்தது.

யாழ் செல்வதற்கு கப்பல் அனுமதி பெற, திருமலை பிரதேச செயலகத்துக்கு இந்த வழியால்தான் போய் வருவாள். இப்பொழுதும் அங்குதான் போய்க்கொண்டிருக்கிறாள்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு– வாணிக்கு வைத்தியம் செய்வதற்காகச் சென்று, வைத்தியத்தை முடித்துக் கொண்டு ஊர் போவதற்காக திருமலை வந்து பதினாறு நாட்கள் ஆகிவிட்டிருந்தன.

இன்னும் கப்பலில் செல்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

கிறீன் வீதியிலுள்ள விடுதியில் தங்கியிருக்கின்ற இந்திரா, பதினாறாவது நாளாக அன்று பிரதேச செயலகத்துக்குச் சென்று கொண்டிருந்தாள்.

இந்திரா, வடமராட்சிப் பகுதியினைச் சேர்ந்த கரணவாய் எனும் பிரிவில் வசிப்பவள். அவளது கணவன் ஒரு தினக்கூலி. நான்கு பிள்ளைகளைக் கொண்ட வறிய குடும்பமொன்றாக அவளது குடும்பம் இருந்தது.

இதயத்தில் வாணிக்கு ஏற்பட்ட நோய்க்கு வைத்தியம் செய்யவே இந்திரா, வாணியுடன் கொழும்புக்கு வந்திருந்தாள்.

இந்திராவின் கணவன் வாணியை கொழும்புக்கு அழைத்து வந்திருக்கலாம். அவர் ஒருநாள் வேலைக்குச் செல்லாவிட்டால் அவர்களது குசினி அடுப்புக்குள் பூனை படுத்துவிடும். அதனால்தான் ஊரில் வேலை செய்து கொண்டு, இந்திராவுடன் வாணியை அனுப்பிவைத்தார்.

இந்திராவும், வாணியும் கொழும்பு வருவதற்கு இந்திரா தனது நகைகளை அடைவு வைத்து வந்த பணத்தைத்தான் உபயோகித்தாள்.

கொழும்பில் நின்றபோது ஏற்பட்ட செலவுகளில் அவளிடமிருந்த பணத்தில் ஒரு பகுதி கரைந்து போக, திருமலைக்கு வந்து நாட்களாகியும் ஊர் செல்லமுடியாததனால் மிகுதிப் பணமும் கரைந்து கொண்டிருந்தது.

இத்தனை நாட்களாகியும் ஊர் போக முடியவில்லையே என்ற கவலையை அவள் முகம் காட்டிக் கொண்டிருந்தது. கப்பல் பயணத்திற்கு நிறையப் பேர் காத்துக் கொண்டிருந்தமையினால்தான், இந்திராவின் பயணம் பின் தள்ளப்பட்டுச் செல்கின்றது.

இதனால் காலம் மட்டும் கரையவில்லை; அவளிடமிருந்த பணமும்தான் கரைந்து கொண்டிருக்கின்றது. தன்னிடமுள்ள பணம் கரைவதற்கிடையில் ஊர் சென்று விடவேண்டும் என்பதுதான் அவள் எண்ணம். அவள் எண்ணத்தை யார்தான் புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

கிறீன் வீதியிலிருந்து தபாற்கந்தோர் வீதியினை வந்தடைந்துவிட்டாள். 'இன்றாவது கப்பலில் இடம் கிடைக்குமா?' அவள் மனம் அவளையே கேட்டது. 'இன்று கப்பலில் இடம் கிடைத்து விடவேண்டும்' என்ற பிரார்த்தனையுடன், 'கணவன் வேலைக்குப் போவதுடன் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு என்ன பாடு படுகிறாரோ?' என்ற ஏக்கமும் அவள் உள்ளத்தில் முள்ளாய்க்குத்திற்று.

"நாளைக்கு வாங்க, உங்களுக்கு அடுத்த கப்பலிலை இடந்தர முயற்சிக்கிறன்," என்று நேற்று செயலகத்தில் இந்திராவுக்கு சொல்லப்பட்டதால் இன்று கொஞ்ச நம்பிக்கை அவள் உள்ளத்தில் துளிர் விட்டிருந்தது.

அந்த நம்பிக்கையுடன் பிரதேச செயலகத்தை வந்தடைந்தாள்.

இந்திராவைப் போல மாதக்கணக்கில் பலர் கப்பல் பயணத்தில் இடம்பிடிக்க தவம் இருந்தனர். இன்றும் அவர்கள் நேரத்தோடையே காத்திருக்கின்ற கடமைக்காக வந்திருந்தனர்.

எல்லோர் முகத்திலும் நீண்ட நாளாகியும் ஊர் செல்ல முடியவில்லையே என்ற கவலை தந்த விரக்தியின் தழும்புகள் விழுந்திருந்தது தெளிவாகத் தெரிந்தது.

தினமும் இங்கு வந்து போவதால் பலரது அறிமுகம் இந்திராவுக்குக் கிடைத்திருந்தது. அங்கிருந்தவர்களில் ஒருத்தி இவளைப் பார்த்து புன்னகை ஒன்றை கஷ்டப்பட்டு உதிர்த்தாள். இவளும் பதிலுக்கு புன்னகைத்தாள்.

"என்னவாம்?" என்ற வினாவை இந்திரா தொடுத்தாள்.

அப் பெண்மணிக்கு இவளின் கேள்விக்குள்ளிருந்த கருத்தை விளங்கிக்கொள்ள நேரமெடுக்கவில்லை.

"இன்னும் கப்பலுக்குப் பெயர் பதியிறவர் வரேல்லை," என சலிப்புடன் பதில் வந்தது.

யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் பயணஞ் செய்வதாயின் அங்கு பதிவு செய்து மூன்று கிழமைகளுக்குப் பிறகுதான் பயணஞ் செய்ய முடியும். பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் பயணஞ் செய்ய எடுக்கும் காலமும் அதிகரிக்கும்.

உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள், பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போன்றோர் பதிவு செய்தவுடன் பயணஞ் செய்யமுடியும்.

இந்திராவுக்கு நாற்பது வயது பூர்த்தியாக இன்னும் இரண்டு வருடங்கள் நகரவேண்டியிருந்தது. அதனால் கப்பலில் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபடியால் பதிவு ஒழுங்கிலேயே மக்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

வைத்திய நோக்கத்திற்காக வந்ததற்கான ஆதாரங்களை இந்திரா காட்டி பலதடவை கதைத்தமையினால்தான் "இன்று அனுப்ப முயற்சிக்கிறோம்" என்ற பதில் அவளுக்குக் கிடைத்தது.

யாழ் செல்ல வந்த பலர் விடுதிகளிலும், சிலர் தெரிந்தவர்களது வீடுகளிலும் தங்கியிருந்தனர்.

இந்திராவுக்கு திருமலையிலோ, வெளியிடத்திலோ தெரிந்தவர்களென்று எவரும் இல்லை. அப்படியாராவது இருந்திருந்தால் அவர்களது வீடுகளில் தங்கினால் விடுதிக்குக் கொடுக்கிற காசாவது மிஞ்சியிருக்கும்.

செயலகத்தின் ஓரங்களில் வரிசையாக இருந்தவர்கள் வேகவேகமாக எழுந்து செயலக வாசலை அடைத்துக் கொண்டார்கள். கப்பலுக்குப் பெயர் பதிவு செய்பவர் வந்துவிட்டதுதான் அதற்குக் காரணம்.

இந்திராவும் அவர்களுக்கிடையில் முண்டியடித்துக்கொண்டு நின்றாள்.

"முருகா...! இன்று எப்படியாவது எங்களுக்கு கப்பலில் இடம் கிடைத்து விடவேண்டும்." பிரார்த்தனை அவள் மனதில் எழுந்து நின்றது.

திடீரென சன நெரிசலிடையே சலசலப்பு அதிகமாகக் கேட்டது. அதற்கான காரணத்தை அறிய இந்திரா முயற்சித்துக் கொண்டிருந்தபோது ஒருவர் சொன்னது அவள் காதுக்குள் புகுந்து கொண்டது.

"மறு அறிவித்தல் வரை கப்பல் ஓட்டம் இல்லையாம், ம்... இன்னும் எத்தனைநாள் யாழ்ப்பாணம் போகாமல் இங்கை காயுறதோ தெரியாது?!"

அவர் சொன்னதும் அவள் இதயம் துடிக்க மறந்தது போலிருந்தது. நிற்க முடியாத அவள் அப்படியே கீழே இருந்துவிட்டாள்.

"அம்மா...! காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாம இருக்கிறன். பசிக்குது. ஏதாவது வாங்கித்தாங்க!" என முன்னாலிருந்த கடையைச் சுட்டிக்காட்டினாள் வாணி.

தன்னை ஒருவாறு சுயநினைவுக்குக் கொண்டுவந்த இந்திரா, மகளின் பசியினைப் போக்க ஏதாவது வாங்கலாம் என 'மணி பேஸில்' கைவிட்டாள்.

கப்பல் பயணத்துக்கான கட்டணத்தை விட மேலதிகமாக முன்னூறு ரூபா மட்டும் இருப்பதை அவள் அப்போதுதான் காண்கிறாள்.

இன்னும் இரண்டு நாட்களுக்கு மேலும் கப்பல் பயணம் இடம் பெறாவிட்டால் விடுதியில் தங்குவதற்கோ, சாப்பாட்டிற்கோ பணம் இல்லாது தீர்ந்துவிட்டது என்பது அவள் சிந்தனையில் மின்னியது.

பணம் இல்லாவிட்டாலும் கை மாற்றாக வாங்குவதற்கு அவளுக்கென்று இங்கு யார் இருக்கிறார்கள்? கப்பல் பயண நிறுத்தம் நீளப்போகிறது. தங்குவதற்கோ, உண்பதற்கோ அவள் என்ன செய்யப்போகிறாள்?

அவள் கண்களில் நீர் வழியத் தொடங்கியது. தன்நிலை உணர்ந்தவள் சத்தமாக அழத்தொடங்கிவிட்டாள்....!



படிப்பகம்

# நியதிகள் மாறலாம்

"சித்ரா இன்னிக்கு சாயங்காலம் சீக்கிரம் வந்துடும்மா."

காலையில் வேலைக்கு கிளம்பும்போது அப்பா கூறியது நினைவில் வர அவள் மதிய உணவை சாப்பிட ஆரம்பித்தாள். கூட இருந்த தோழியரின் இனிய உரையாடலில் கவனமில்லாமல் இருந்தவளை ரம்யாவின் குரல் அழைத்தது.

**அறிவுச் சுடராய் விளங்கிய சித்ராவை மகனைப்போலவே அவர் வளர்த்தார்.**

"என்ன சித்ரா- ஏதாவது பிரச்சனையா, காலையிலிருந்தே சுரத்தில்லாமல் இருக்கே. எங்கிட்டே கூட சொல்லக்கூடாதா?"

வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து மனதுக்கு சற்று நெருக்கமான தோழி அவள்.

அந்த தனியார் நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் அவர்கள் இருவரும் அடுத்தடுத்த மேசையில் வேலை பார்ப்பவர்கள். அதோடு இலக்கியம், கலை போன்றவற்றில் இருவரின் கருத்துக்களும் ஒத்துப் போனதால், நெருங்கிய தோழிகள் ஆயினர்.

"ஒன்றுமில்லை ரம்யா இன்னிக்கு ஈவினிங் என்னைப் பெண் பார்க்க வராங்க" சற்று களைப்பாய் ஒலித்தது சித்ராவின் குரல்.

"ஏய்! இவ்வளவு மகிழ்ச்சியான செய்தியை ஏண்டி, டல்லடிச்சு சொல்றே. எனிவே என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.

ஆமாம் உன்னவர் யார்! சொந்தமா? என்ன வேலை?"

"வெயிட், வெயிட், ரம்யா. நான் இன்னமும் சொல்லவே ஆரம்பிக்கலே. நீ அதுக்குள்ளே கல்யாண மண்டபம் போயிடாதே. அவங்க எங்களுக்கு ஏற்கனவே சொந்தமில்லே. புதுசுதான். நார்த்லே ஒரு பிரைவேட் கம்பனியிலே மானேஜர். இரண்டாவது பிள்ளையாம். அப்பா இல்லை. இரண்டு தங்கைகள். போதுமா?"

"சரி சித்ரா நீ சாயங்காலம் பர்மிஷன் போட்டுட்டு கிளம்பு. ஏதாவது முக்கியமான வேலை இருந்தா நம்ம கிட்டே தள்ளி விடு. இந்த மாதிரி முகத்தை உம்முன்னு வெச்சுக்கிட்டு இருக்காதேடி சியர்புல் மை பேபி."

"ரொம்ப தாங்க்ஸ் ரம்யா."

"வரவங்க என்ன கேட்பாங்களோ அப்பா எப்படி சமாளிப்பாங்களோ கவலைதான்" என்றபடி எழுந்தாள் சித்ரா.

இந்த இடத்தில் சித்ராவைப் பற்றி கூறியாக வேண்டும். காண்பவரிடம் மரியாதையை தூண்டும் கண்ணியமான அழகு அவளுடையது. படிப்பின் கெட்டிக்காரத்தனம் அவளுக்கு நல்ல வேலையை வாங்கித் தந்தது. திருமணம் முடிந்த அக்காவுக்கும், கல்லூரியில் படிக்கும் தம்பிக்கும் இடைப்பட்டவள் சித்ரா. மூத்த பெண், படிப்பில் வெகு சுமார். அவளைப் போட்டு கல்விக்கடலில் மூழ்கவைத்து சிரமப்படுத்தாது மனைவியின் ஆலோசனைப்படி மணமுடித்து அனுப்பிவிட்டார் சண்முக சுந்தரம்.

அந்தக் கால பட்டப் படிப்பில் அசகாய சூரனாக விளங்கி அரசாங்க வேலையில் அமர்ந்து விட்டாலும் குடும்பத் தொல்லைகளால் சற்று 'லேட்' மேரேஜ் செய்து கொண்டவர் அவர். அதனால் தானோ என்னவோ அவரின் இரண்டாவது மகள் கல்லூரியை முடிக்கவும் அவரின் ஓய்வுக் காலம் வரவும் சரியாகப் போயிற்று.

தனது கனவுகளுக்கெல்லாம் வடிகாலாய் அறிவுச் சுடராய் விளங்கிய சித்ராவை, அவர் மகனைப் போல் வளர்த்தார். அவளது திறமையால், வாங்கிவந்த பரிசுப் பொருட்களால் வீடு நிறைந்தது. கல்லூரி முடிந்ததும் அவளின் வெற்றி அதோடு நிற்காமல் நல்லதொரு வேலையையும் வாங்கித் தந்தது. மூத்தவளைப் போல் இல்லாமல், இவளை யாவது சுதந்திரப் பறவையாக சில காலம் பறக்க விட வேண்டும், என்ற அவரது ஆசையை மனைவியின் நச்சரிப்பு அடிக்கடி துளைக்கும்.

அப்பாவின் சொற்படி சற்று முன்னதாகவே வீடு வந்து சேர்ந்த சித்ராவை, வீட்டின் இதமான சூழ்நிலை வரவேற்றது. எப்போதுமே பளிச்சென்று இருக்கும் அவர்களின் வீடு இன்று வரும் வி.ஐ.பி.க்கள் வருகைக்கு என மின்னலடித்துக் கொண்டிருந்தது. எளிமையான அலங்காரத்தில் தயாராகி விட்ட அவளது உள்ளத்தில் இனம் புரியாத உணர்ச்சி.

தாய், தங்கை,.. அண்ணா, அண்ணி சகிதம் வந்தான் மாப்பிள்ளை சேகர்... அவனின் கம்பீரமான தோற்றம் எல்லோரையும் கவர்ந்தது சித்ராவையும் சேர்த்து. முறைப்படி தரிசனம் தந்து கூடவே சிற்றுண்டியையும் பரிமாறி உள்ளே சென்று விட்டாள் சித்ரா.



மாப்பிள்ளையின் தாயார் அதாவது பார்வதி அம்மாள் பனிக்கட்டியாய் ஐஸ் வைத்து பேச ஆரம்பித்தாள். எங்கே இருந்தாலும் மாப்பிள்ளை வீட்டார் என்றால் இப்படித்தான் பேசுவார்களா? உள் அறையில் இருந்தவளின் செவியில் சாட்டையாய் சொடுக்கிற்று அவளது பேச்சு...

"அப்புறம் பாருங்க... நம்ம சேகருக்கு அடுத்த வருஷம் ஆபிசிலேயே வீடும் தந்திடுவாங்க. சித்ரா வேலையை கூட அங்கேயே மாத்திக்கிடலாம். எங்களுக்கு எதுவும் கேட்கத் தெரியாதுங்க. உங்க பொண்ணு, நீங்க செய்யப் போறீங்க... நகைநட்டுன்னு அவதான் போட்டுக்கப் போறா... உங்க தகுதிக்கும் எங்க லெவலுக்கும் ஏத்தாப்போல செய்யணும்னு நான் சொல்ல வேணாம் பாருங்க."

**தினகரி சொக்கலிங்கம்**

அப்பாவைப் பார்க்கிறாள் சித்ரா.

'அப்பா...! அறிவு ஜீவியான அப்பா...! ஏன் இப்படி மௌனமாய்... ஊமையாய்... உணர்ச்சிகளை அடக்கிய ஞானியாய் இருக்கிறார்....!'

மாப்பிள்ளைப் ல்பயனோ, தான் விலை போவது புரியாமல் அம்மாவின் பேச்சை ஏதோ தேவர்வாக்கு மாதிரி கேட்டுக் கொண்டிருப்பதைக் காண்கையில் எரிச்சல் மண்டுகிறது அவளுக்கு. "இதோ பாருங்க... கடைசியாய் ஒண்ணு சொல்ல விட்டுப் போச்சு.... சேகரோட அண்ணனுக்கு கல்யாணத்திலே மூணு பவுன்ல மைனர் செயின் ஒண்ணு போட்டாங்க... நீங்களும் அது மாதிரி..."

"கட்டாயம் செய்ய சொல்றேன் ஆன்ட்டி... ஆனால் ஒரு கண்டிஷன்...." -மின்னலைப் போல வெளியே வந்த சித்ராவின் குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினர் எல்லோரும்.

"ஆமாம் அப்பா... கட்டாயம் மூணு பவுன்லே இல்லை இல்லை ஐந்து பவுன்லே புது டிஸைன்லே செயின் செய்துடுங்க அப்பா... ஆனால் அதிலே திருமாங்கல்யம் கோர்த்து மாப்பிள்ளை கழுத்திலே நானே கட்டிடுவேன்... ஏன்னா இவ்வளவு நேரம் 'பேரம்' பேசினாங்களே அப்போ பெண்ணைப் போல மௌனமா இருக்கிறவர் மாப்பிள்ளை இல்லையப்பா... பொண்ணு தான்... பொண்ணுதான்..." அந்த சாட்டை அடியில் தடுமாறி வெளியேறி விட்டனர் மாப்பிள்ளை வீட்டார்.

அதிர்ச்சியில் உறைந்து நின்ற அம்மாவையும்... வியப்பால் விழிக்கின்ற அப்பாவையும் நிமிர்ந்து பார்த்த சித்ரா "ஸாரிப்பா, உங்களை இன்ஸல்ட் பண்றாப்ல பேசிட்டேனா?" என்றபடி தன் அறையை நோக்கி நடந்தாள்; நாளை... ரம்யாவிடம்-இது பற்றி சொன்னால் எப்படி ரசிப்பாள்... என்ன பதில் சொல்வாள்! அவளுக்கே விடை கிடைக்கவில்லை!

# போராளி

**கனகசபை தேவகடாட்சம்**

"விதானையார் ஐயா!" ஆய்வு நடாத்திக் கொண்டிருந்த என் சிந்தனையைச் சிதைக்கின்றது அந்த மெல்லிய பெண் குரல்.

மெதுவாக தலையைத் திருப்பி முகத்தைப் பார்க்கிறேன்.

'இடியப்பக்காரி மனோரஞ்சிதத்தின் மகள்' மனதிற்குள்ளே ஊர்ஜிதப்படுத்திக் கொண்டவாறு "என்ன புள்ள?" என்று சாய்வு நாற்காலியில் படுத்தவாறே கேட்டேன்.

மனோரஞ்சிதத்தின் கணவன்- அப்பன்னிரெண்டு வயது சிறுமியின் தந்தை! எம் நாட்டு அனர்த்தங்களுக்கு அடிக்கோடிட்டுக் காட்டும் 'ஜூலை' மாதங்களின் கலவரத்தில் 'வித்தியாசமாக' மரணமடைந்தவன்.

இரவுச் சுற்றிவளைப்பில் பெருவாரியான ஆண்கள் காணாமல் போயிருந்த காலம் அது!

உயிரை மாத்திரம் காத்துக் கொண்டால் போதும், என்ற எண்ண மேலீட்டால், தம் இல்லம் விட்டு சிறு, சிறு காடுகளுக்குள் இரவைக் கழித்துக் கொள்வார்கள், அப்பகுதி ஆண்கள்.

ஒருமுறை உண்டான உக்கிரமான



சுற்றிவளைப்பில் தன்னைக் காத்துக் கொள்வதற்காக ஓடிய மனோரஞ்சிதத்தின் கணவன், பாம்பின் புற்றென அறியாது அந்த இரவிலே அங்கு தங்க நேரிட்டது.

அவன் உடல் மட்டும் நிரந்தரமாக தங்கிவிட்டது. மனிதனையே மனிதன் கொல்லும்போது, சதா எதிரிகளுக்குப் பயந்து வாழும் சர்ப்பம் மட்டும் ஏன் விதிவிலக்காக அமைய வேண்டும்.

"ஐயா! அப்பாட நட்டஈடு விஷயமா நேற்று வந்த அம்மாட்ட தர ஏலாது எண்டு சொன்னீங்களாம். அதுதான் என்னெண்டு கேப்பம்...." தன் பரட்டைத் தலைமயிரை கோதியவாறு மிக பணிவுடன் கேட்டாள் மனோரஞ்சிதத்தின் மகள். அவளின் அந்த பவ்வியமான பணிவு எனக்கு ஒரு விதமான அசட்டுத் தன்மையை தந்தது.

"உன்ர அம்மாட்ட எல்லாம் விபரமாக சொல்லிட்டனே! அதாவது பாம்பு கடிச்சு செத்தவங்களுக்கு நட்டஈட்டுக் காசு கொடுக்க மாட்டாங்க! அப்பிடி சிபாரிசு பண்ண எங்களுக்கு சட்டமுமில்லை? அது சிக்கலில் கொண்டு விட்டிடும்." எதையும் இலட்சியப் படுத்தாது கூறிமுடித்தேன்.

"என்ர அப்பா பாம்புட்ட 'கடி' எண்டா போனவர்?" சிறுமியின் சிவப்பேறிய கண்களைப் பார்க்க எனக்கு பயமாக இருந்தது. அப்படியே தொடர்ந்தாள்.

"இரவில சுத்தி வளைச்சு ஆக்கள அவனுகள் சுட்டுவந்தபடியாத்தான் எண்ட அப்பாவும் ஓடி பாம்பிட்ட கடிவாங்கி சாக வந்தது. இவ்வளவு காலமும் ஓடாதவர், வீட்டில படுக்கிறவர் ஏன் ஓடணும். எல்லாம் அந்த உசிர காப்பத்திக்கத்தான். இத பயங்கர வாதத்தில சாகல்ல எண்டு எப்படி நீங்க சொல்லுவீங்க? எங்கட குடும்பம் படுற பாட்ட எங்கையா நீங்க காணப்போறீங்க? அது கிடக்கட்டும்! இதுக்கொரு முடிவு சொல்லுங்க! முடிவு தெரியாம நான் போகப் போறதில்ல!"

அவளின் பத்திரகாளி பாவனை என்னை அதிர வைத்தது.

சமையலிலும், துவையலிலும், குடும்ப வாழ்விற்குள்ளும் தம்மை அடைத்துக் கொள்பவர்கள் பெண்கள் என்ற கோட்பாடு சரிவதை உணர்ந்தேன். உலகமெங்கே? நாம் எங்கே? என்ற ஆய்வுக்கு பதிலடியாக அமைந்தாள் அவள்.

எவ்வளவு நியாயமாக தென்பட்டாலும், அதை எடுத்துரைக்கும் பாணியில்தான் அதன் செயல்பாடு தங்கியிருப்பதை தெரிந்து கொண்டேன். அரசின் சுற்று நிருபங்களும், சட்டங்களும் என் கண் முன்னால் இலவம் பழமாக வெடித்துச் சிதறியது. அதில் முடிவு தெரிந்தது. 'போராளி' போல் தோன்றிய அச்சிறுமியின் பக்கம் அச்சத்துடன் அவள் முகத்தை நோக்காது கூறினேன்.

"சரி...! அம்மாவை வரச்சொல்லு...!"

# புதை குழிகளும்...! ஊமைக் குயில்களும்...!

சிவகரன் அமைதியில்லாத மனதோடு மிகவும் சிரமத்தோடு போராடினார். எப்பொழுதும் மனதில் அமைதி இல்லையென்றால் இந்த கடற்கரைக்குவந்து அமைதியோடு ஓர் இடத்தில் அமர்ந்து விடுவது இவருடைய வழக்கம். அறுபத்தியேழு வயதிலும் கொஞ்சம் இளமையோடும், கவிதையோடும் வாழ்கிறார் என்றால் அதில் முக்கிய பங்கு இந்த கடலுக்கும் உண்டு. ஆர்ப்பரிக்கும் அலைகளையும், நீண்டு பரந்த நீல வானத்தையும்



பார்த்தபடியே சிறுமணலைக் கைகளில் பிசைந்து கடலினுள்ளே வீசியபடி கால் நீட்டி அலைகளோடு கால்களை விளையாட விட்டு அதன் ஸ்பரிசத்தினை உணர்ந்தபடி அமர்ந்திருப்பதில்தான் எத்தனை சுகம்.

ஆனாலும், இன்று முடியவில்லை. எதையும் இரசிக்கமுடியவில்லை... மனது ஊமையாக அழுதது. பழைய நினைவுகள் விழித்துக் கொண்டது... நட்பான இளமைக் காலங்கள் இனி எப்போதுவரும்...? ஏங்கிய மனது பொங்கிவரும் துன்பங்களை ஒன்று திரட்டி இதயச் சுவர்களில் விளாசி அடித்தது.... மனமும் இதயமும் ரணமாய் வலிக்க கண்களில் இலேசாக கண்ணீர் கருக்கட்டியது... ஊமையாய் அழுத மனது ஒப்பாரி கட்டத் தொடங்கியது.

'எங்கே இருக்கிறாய் நண்பனே! என்ன செய்துகொண்டிருக்கிறாய்? சுகமாய் இருப்பாயா? உனக்கென்று ஒரு குடும்பமமைத்து பிள்ளைகளோடு கொஞ்சிக் குலாவியபடி சந்தோச வானில் சரசமாடுகிறாயா? இல்லை இன்னும் மறக்கமுடியாத அவளின் நினைவுகளோடுதானா? எனக்கு இறப்பு நெருங்குகிறது நண்பனே! அதற்குள் நான் உன்னை பார்க்கவேண்டும்... என் மனதிற்குள்ளும் இன்னும் பசுமையாக பூத்துக் கொண்டிருக்கும் ஒரு நினைவை உன்னோடு மட்டுமே பகிர வேண்டும். 'துசி' எங்கேயடா இருக்கியாய்....?'

பந்தயம் கட்டிய நினைவுக்குதிரை பழையதுகளில் மேய்ச்சல். மல்லாந்து வானத்தைப் பார்த்தார் சிவகரன். கண்ணீர் திரையிட்ட கண்களோடு நினைவுகளுள் இறங்கத் தொடங்கினார்.

ஆண்கள் பலவீனமானவர்கள் நண்பனே!! நீ ஒருத்தியை காதலிப்பதாய் சொன்ன போது என் மனம் உள்ளே சிரித்துக் கொண்டதடா. ஏன் ஆண்கள் இப்படி காதலென்றால் அலைகிறார்கள். நகைச்சுவையாகத்தான் இருந்தது உன் கதை... நண்பர்களிடம் சொல்லி கேலிக்குரியவனாக்கியிருக்கிறேன். இதற்கெல்லாம் எத்தனை வேதனைப்பட்டிருப்பாய். உன்னை ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை என்று வேறு யாரிடமோ சொன்னாயாமே...? உண்மைதான்... உயிர் நண்பன் என்று சொல்லிக் கொள்வதில் மட்டுமே பெருமைப் பட்டுக்கொண்டிருக்கும் என்னாலும் கூட சரியாக புரிந்து கொள்ளமுடியவில்லை.

அன்றொருநாள் சிரித்துக்கொண்டு சென்னாயே.... "மச்சான் என்னுடைய காதலி தாண்டா இரண்டரை வருசமா என்னைக் காதலிக்கிறாளா - இல்லையா? என்பதை சொல்லாமலேயே இருக்கிறாள். காதலிக்கா விட்டால் அதையாவது சொல்லியிருக்கலாம். ஆனால் எப்பொழுது கேட்டாலும் தலை குனிந்தபடி எதுவுமே பேசாத என்னவளைப் பற்றி என்ன சொல்வது? வேறு யாரையாவது காதலிக்கிறாளா?"

கேள்விக்குறியோடு என்னிடம் பதில் எதிர்பார்த்து கேட்டாயே? உன் கண்கள் கலங்கியிருந்ததே.... அப்பொழுதுகூட காதலின் சக்தியைப்பற்றி புரிந்துகொள்ளாமல் மனதிற்குள் சிரித்திருக்கிறேன். இவன் ஏன் இப்படிப் புலம்புகிறான்... அவளில்லா விட்டால் இன்னொருத்தி இல்லையா? பெண்களுக்கா பஞ்சம்? இன்னொருவனின் வேதனையை புரிந்துகொள்ள முடியாத மனது குதர்க்கமான நகைச்சுவையால், உன்னை காயப் படுத்தியிருக்கிறது... எப்படித் தாங்கிக் கொண்டாய்.....? ஆனாலும் நீ மிகவும் பொறுமையானவனடா... எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டாயே!!!

வெளிநாடு புறப்படும்போதும் அவளைப்பற்றித்தான் நீ அதிகமாய் கதைத்திருக்கிறாய். நினைத்திருக்கிறாய். புகையிரத நிலையத்தில் வைத்து என்ன சொன்னாய்....! "டேய்! அவளுடைய வீட்டில் போய் பேசிப் பார்த்தால் எனக்கு அவளை கட்டிவைப்பார்களா? ஏன் எங்களை புரிந்து கொள்கிறார்களில்லை... இருபத்தியொரு வயதென்றால் சின்ன வயதா? எதனையும் எதிர்கொள்ள முடியாதா? அவர்களும் எம்மைப்போல தானே சிறுவர்களாயிருந்து வந்தவர்கள். அவர்கள் வாழவில்லையா? ஏன் என்னை ஒருவரும் புரிந்து கொள்கிறார்களில்லை?" வெறியோடு கேட்டாயே...இப்பொழுது அந்த அவளின் நினைவுகளோடுதானா வாழ்ந்து கொண்டிருக்கிறாய்....?

"வெளிநாடு போய் நிறைய உழைத்து அங்கிருந்தே அவளைப் பெண்கேட்கப் போகிறேன்..." என்று சொன்னாயே.... நீ போன சில மாதங்களில் அவள் இன்னொருவனுக்கு மனைவியாய் வெளிநாடு சென்றுவிட்டதை கேள்விப்பட்டு எப்படி வேதனைப் பட்டிருப்பாய்... உன் 'ஷோபனா' உனக்கானவளல்ல இன்னொருவனுக்கு, என்று தெரிந்ததும் எப்படி வேதனைப்பட்டிருப்பாய்... அவளின் திருமணத்தைப் பற்றி புலம்பி நீ எனக்கு கடிதம் எழுதியபோது எத்தனையோ செய்த பெற்றோரிருக்க அவளைப் பற்றியே புலம்புகிறாயே என்று எழுதி இறுதிக் கடிதத்தோடு நிறுத்திக்கொண்ட இந்த கெட்டவனின் உற்ற நண்பனே எங்கேயிருக்கிறாய்....?

உன்னிடம் நான் ஒன்று சொல்லவேண்டும் நண்பா....! நானும் கூட பிற்காலத்தில் ஒருத்தியை காதலித்தேன்... அன்றைய என் கண்ணம்மா இன்றைய பொழுதுகளில் இன்னொருவனுக்கு செல்லம்மாவாகப் போய் விட்டாள்... ஆனாலும் அவளின் நினைவுகளை அகற்ற முடியாமல் இதுவரை காலமும் தனிமரமாக நினைவுகளோடு வாழ்கிறேன் என்றால் நீ சிரிப்பாயா நண்பனே..? என் கனவுகள் கூட இப்பொழுதும் அவளைப் பற்றியவைதான்... பக்கத்தில் அமர்த்தி பால் நிலவுகாட்டி எத்தனை நாட்கள்தான் கற்பனையில் வாழ்ந்திருக்கிறேன்... அப்படிப் பட்ட எல்லாம் முடிந்துவிட்டது நண்பனே...! முடிந்துவிட்டது... ஆனாலும் தோற்றுப் போன என் காதலைப் பற்றி உன்னிடம் பகிரவேண்டுமடா... இந்தக் காதல் கல்வெட்டு அழியக்கூடாது... நீ சிரித்தாலும் பரவாயில்லை...

முதுமையிலும் இளமையேற்றும் அவளின் நினைவுளை உன்னிடம் பகிர வேண்டும்.... நட்பிருந்தால் என்னிடம் வா!!! உன்னைப் புரியாத என்னைப்போல் என்னையும் புரிந்துகொள்ளாமல் போய்விடாதே... ஒரு தலைக் காதலென்று ஒதுக்கிவிடாதே அவளுக்கும் சேர்த்து நானொருவனே காதலித்தேனடா... எப்படித் தோற்றது... தெரியாத புதிர் உன்னோடும் என்னோடும் அழிந்து போகட்டும். நான் இறப்பதற்கு முன்னால் உன் நட்பான இளமைக் காலத்தில் கொஞ்சம் மீண்டும் எனக்காக செலவழி....

கடலலை சிவகரனின் காலைத் தீண்டி மீண்டது... சுய நினைவுக்கு வந்தார்..... மீண்டும் இன்னொரு அலையின் தீண்டுதலுக்காய் காத்திருந்தார்... அலை காலை தொடுவதாய் இல்லை. மனிதர்களின் காதலைப்போல உருவாக்கும் பலதில் சில மட்டுமே வெற்றிபெறுகிறது... மனது வெதும்பினார்.... கண்ணீர் கண்களில் தேங்கியிருந்தது.... அழுகிறேனா? எதற்கும் கலங்காத நான் அழுகிறேனா... புறங்கையால் கண்களைத் துடைத்தபடி எங்கோ தூரத்தில் கேட்கும் பாட்டோடு சத்தமாக சேர்ந்து பாடியபடியே, பைத்தியக்காரனாக- பைத்தியக்காரத்தனத்தோடு இவரைப்பார்க்கும் மக்களை மனதிலிருந்து ஒதுக்கியபடியே வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினார்... அறுபத்தியேழு வயது சிவகரன்....

*'பூத்தால் மலரும் உதிரும்*
*நெஞ்சில் பூத்தாள்! உதிரவில்லை!*
*நிலவும் தேய்ந்து வளரும்*
*அவள் நினைவோ தேய்வதில்லை...!'*

**கபிலன் வவுனியா**

# இலக்கிய நயம்



**தருவது — ரசிகன்**

# வசையும் இன்பம்



"களமெங்கும் இரத்த வெள்ளம்;
குளமொன்று மண்ணில் ஆச்சு
தலையெல்லாம் மிதந்து செல்லும்;
விலையில்லா உயிர்கள் போச்சு!

மானத்தை உயிராய் மதித்து
தானமாய் தம்மை ஈர்ந்தார்.
வானத்தை வெல்லும் வீரர்
ஈனத்தை வென்று நின்றார்.

சதையது உடலம் வீழ்ந்தும்
விதையென உணர்வு தந்தார்
மிதியதை ஆதிக்கத்தை
விதியிதை மாற்று என்றார்.

மதியினை கொண்ட மாந்தர்
மிதிபட்டு வாழ்தல் வெட்கம்
சதியினை வென்று வாழ
குதியடா களத்தில் என்றார்.

குன்றியே நாங்கள் வாழ
குடத்தினில் விளக்கல்ல வீரம்?
குன்றென நிமிர்ந்து நிற்போம்
குன்றிலிட்ட விளக்கெங்கள் வீரம்.

அந்நியன் காலை நக்கி
அடங்கியே வாழும் மனிதர்
நித்தியம் செத்து வாழ்வர்
மடங்கியே புழுவாய் நிற்பர்.

அன்புக்கு அடிமை நாங்கள்
அம்புக்கு பயந்ததில்லை!
தென்பெங்கள் நெஞ்சில் உண்டு
பண்புக்கு மட்டும் பணிவோம்!

ஏனடா மரமாய் ஆனீர்;
ஏனடா மந்திப் புத்தி?
தூணடா நீங்கள் எல்லாம்
வானடா எங்கள் எல்லை
ஏனடா தயங்கி விட்டீர்?
ஏவடா பாணம் யாவும்
மூண்டது யுத்தம் என்றால்
தீண்டுமோ தோல்வி எம்மை?
தாண்டடா தாண்டு பகையை
மாண்டதா சொல்லு வீரம்?
கொட்டடா முரசு கொட்டு
வெட்டடா சிரசு வெட்டு
முட்டடா முட்டு பகையில்
தட்டடா வெற்றிப் பறையை!

புல்லல்ல புழுவுமல்ல
கல்லல்ல முள்ளுமல்ல
மனிதர் நாம் மறவர் நாமே
நசிபட்டும் கொதியா இரத்தம்
நம்மில் ஓடித்தான் யாது இலாபம்?"

வீரமும் வசையும் கலந்து
தீரனாய் நின்றுரைத்தான்
களத்தினில் கட்டப் பொம்மன்.

வசையல்ல அதுதான் இசை
திசையெங்கும் வீரம் பாய்ச்சும்- உரத்
தசை கொண்ட படைக்கு இசை.

"புகழ்வதும் உண்டு பொம்மன்
இகழ்வதும் உண்டு பொம்மன்.
இரண்டுமே இசையாய் கேட்கும்
இரண்டிலும் எழுச்சிப் பண் ஒலிக்கும்!"

களத்தினில் பட்ட அனுபவம்
துணைவியின் காதில் கொட்டினான்
அவன் பெயர் நாச்சியப்பன்
யானைப் படைக்கு தலைவன்

போரினில் பட்ட புண்கள்
பூவிதழ் பட்டு ஆற
போரிலும் காணாத கணைகள்
பொன்னுடல் மீது கண்டு
தேனினிலும் இனிய அமுதம்
நாவினால் கலந்து பெற்று
பூரித்த நாச்சியப்பன்
பூவினில் வண்டாய் ஆனான்.

மெத்த தித்திப்பு கலந்த இதழால்
மொத்த சுவைய்யும் உவந்து தந்தாள்.

துப்புறச் சிவந்த வாயால்
செப்புற நனைந்தான்- கடலில்
குப்புறக் கவிழ்ந்தாற்போல
செப்புற மூழ்கிப் போனான்.
ஒப்புற அணைத்துக்கொண்டு-கள்ளி
செப்புற இரு கணையால் மோத- மார்பின்
இப்புறம் தைத்த கணைகள்
அப்புறம் வந்ததோ என்று
எண்ணித்தான் பயந்து போனான்!

அவளும்தான் பயந்துபோனாள்
தன் கணை இரண்டும் மோதி
தன்னவன் மார்பு தாண்டி
போனதோ என்று எண்ணி
முதுகினை தடவிப் பார்த்தாள்.

தன்னவள் தேடல் கண்டு
காரணம் தன்னை அறிந்து
"தப்பினேன் கூர் கணைக்கு
தாங்கிய என் நெஞ்சம் வாழி"
என்றுதான் செப்பினானே!

கண்ணினில் தீயை காட்டி
கள்ளியும் முறைத்து நின்றாள்.

"உறைக்காத கனிகள் உன்னில்
முறைக்காதே கண்ணே" என்றான்.

"இனிப்பாக பேசல் வேண்டாம்
பழிப்பாக பேசிவிட்டு!"

சொன்னவள் தேகம் நோகாது
மெல்லத்தான் நயமாய் தழுவி
கிண்ணமாம் இதழில் நழுவி
எண்ணம்போல் அமுதம் பருகி
கன்னத்தில் கன்னம் வைத்தான்.

மேனியில் கரங்கள் ஓட
மோகனம் மனதில் ஆட
காரணம் புரியா அச்சம்
தோரணம் ஆகி நிற்க
மோகத்தில் மூச்சு முட்டி
தேகத்தில் நெருப்பு மூள
தாகத்தில் தவித்த இதழ்கள்
வேகத்தில் துடித்து நிற்க-அவள்
கொடுத்ததில் பாதி அமுதம்
அவன் திருப்பித்தான்
கொடுத்தனனே!

"தந்ததைத் திருப்பிக் கேட்கும்
பண்பில்லா இதழ்கள் கண்டேன்"
என்றவன் கேலி செய்தான்.

நெருங்கிய கூடல் மயக்கம்
வழங்கிய உரிமையாலே
மயங்கிய பெண்ணாள்
"போடா நீ அரக்கன்
பொல்லா துடுக்கன்" என்றாள்.

"திட்டடி நன்றாய் திட்டு
கொட்டடி வசையைக் கொட்டு"
சொன்னவன் ஓங்கி நகைத்தான்.

வசைந்தவள் வியந்தாள்
"படுகளத்திலும் திட்டவேண்டும்
பஞ்சணையிலும் திட்டவேண்டும்
இருகளத்திலும் உமக்கு
வசைதான் இசையோ அத்தான்?"

'ஆம்' என்று தலையசைத்தான்
ஏன் என்ற காரணத்தை
விளக்கியும் உரைத்து நின்றான்.

"போர்க்களம் மீதில் வீரர்கள் வசையும்
பூங் குழந்தைகள் வாயினால் வசையும்
பொன்நிகர் பெண்களின் மோக வசையும்
தேன் என இனித்து
செவியினில் பாயும்." என்றான்
அவன் சொன்ன கருத்தை
தமிழ்மொழி இலக்கியம்
விவேக சிந்தாமணியும் உரைக்குது பாரீர்;
**"கதலி வீரர் களத்திடை வையினும்**
**குதலை வாயில் குழவிகள் வையினும்**
**மதன லீலையில் மங்கையர் வையினும்**
**இதமுறச் செவிக்கு இன்பம் விளையுமே"**
(கதலிவீரர்-படைத்தலைவர், குதலை-மழலை)

## சிந்தியா பதில்கள்

* டியர் சிந்தியா! செவ்வாய்க் கிரகத்தில் விண்கலம் யாத்திரை செய்யும் காலம் இது. நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம்?

திருமதி சி. மங்களம், புளத்கொகுபிட்டி.

புளியங்குளத்துக்கு போனால் போதும்; அதுதான் சாதனை என்றளவில் உறுதியாக நம்பிக்கைகொண்டு நிற்கவைக்கப்பட்டிருக்கிறோம். இடைக்கிடையே ஒரு மாறுதலுக்காக ஜெயசூரியா அடிக்கும் சிக்ஸர் வானை நோக்கி உயரும் தூரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டுமிருக்கிறோம்!

* வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும். வாய்விட்டு அழுதால்?

மொஹமட் ரபிக், கொள்ளுபிட்டி.

நோய் கரைந்து போகும்.

* டியர் சிந்தியா! பிரேமானந்தாவுக்கு வழங்கப்பட்ட தண்டனையைக்கேட்டு சந்தோஷப்பட்டிருப்பீர்தானே?

செல்வி ஜி. லலிதா, கண்டி.

மகா மகா சந்தோசம். மகாமகா கவலை. ஒரு பிரேமானந்தாதானே மாட்டியிருக்கிறார்.

* ஹாய் சிந்தியா! கடவுள் மனிதனைப் படைத்தானா? மனிதன் கடவுளைப் படைத்தானா?

பி. அசார், திருமலை.

மனிதன் படைத்த கடவுளைத்தான் நான் பார்த்திருக்கிறேன். கடவுள் இத்தனை மோசமான மனிதர்களைப் படைத்திருப்பாரோ என்று சந்தேகம் கொள்கிறேன்.



* சிறந்த தலைவனுக்கு தேவையானது என்ன?

கே. அமரசிங்கம், வவுனியா.

மாவீரன் அலெக்ஸாண்டர் வாழ்க்கையில் இரண்டு பிரச்சனைகளை இரண்டு விதமாகக் கையாள்கிறார் பாருங்கள்.

ஒருமுறை அவரது அரண்மனையில் சிக்கல்கள் நிறைந்த கயிற்று முடிச்சு இருந்தது.

"இந்த முடிச்சை யார் பொறுமையுடன் அவிழ்க்கிறார்களோ, அவர்கள் இவ்வுலகம் முழுவதையும் ஆள்வார்கள் என்பது நம்பிக்கை. நீங்கள் இந்த முடிச்சை அவிழ்க்கலாமே? அவிழ்த்தால் உலகை வெல்லும் வாய்ப்புக் கிடைக்கும்!" என்றார்கள்.

அலெக்ஸாண்டர் யோசித்தார். மறு நொடியே தன் வாளை உருவி வீசினார். கயிற்று முடிச்சு துண்டு துண்டாகியது.

"என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? அவிழ்க்கத்தானே சொன்னோம், வெட்டிவிட்டீர்களே?" என்று கேட்டார்கள்.

அதற்கு அலெக்ஸாண்டர்: "முடிச்சை அவிழ்த்தால் உலகை வெல்லலாம் என்ற நம்பிக்கையை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு வீரன் முடிச்சை அவிழ்ப்பதில் நேரத்தை வீணடிக்கமாட்டான். உண்மையில் வாள்தான் உலகை வெல்லும்!" என்றார்.

அதே அலெக்ஸாண்டருக்கு பிறிதொரு நாள் மற்றொரு சோதனை: ஒரு முரட்டுக் குதிரையை யாராலும் அடக்க முடியவில்லை.

அலெக்ஸாண்டர் அதனை அடக்க வந்தார். அவர் தன் வீரத்தைக் காட்டுவார் என்று பலரும் நினைத்தனர். அவரோ குதிரை தன் நிழலைக் கண்டு பயப்படுகிறது என்பதைப் புரிந்துகொண்டு பக்குவமாக குதிரையை வழிக்குக் கொண்டுவந்தார்.

முன்னதில் வீரம்; பின்னதில் விவேகம். எப்போது எதை எங்கே பிரயோகிப்பது என்பதை அறிந்தவனே தன்னையும் ஆளலாம், தரணியையும் ஆளலாம். தலைவனும் ஆகலாம்.

* டியர் சிந்தியா! 'பந்தா' என்றால் என்ன?

சி. விஜயதாஸ், பதுளை.

குறைகுடங்களின் தளம்பல். சமீபத்தில் படித்த கதை ஒன்று ஞாபகம் வருகிறது.

ராஜா ஒருவர் தனது மந்திரியுடனும், சேவகனுடனும் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். நடுக்காட்டில் பிரிந்துவிட்டனர். வழியில் துறவி ஒருவர் கண்களை மூடியபடி தவம் செய்து கொண்டிருந்தார். அவரது இரு கண்களும் பார்வையில்லாதவை.

அவரிடம் முதலில் சேவகன் வந்து, "ஏய் சந்நியாசி! இந்தப் பக்கம் அரசன் வந்தாரா?" என்று கேட்டான். "இல்லை" என்றார் துறவி.

சிறிது நேரம் கழித்து மந்திரி வந்தார்; "அப்பா சந்நியாசி! இந்தப் பக்கம் அரசர் வந்தாரா?" என்று கேட்டதும் சந்நியாசி, "இல்லை சேவகன்தான் வந்துபோனான்." என்றார்.

பின்னர் அரசர் வந்தார்; "மகா பிரபு! இந்தப் பக்கம் யாராவது சென்றார்களா?" என்று கேட்டார்.

அதற்கு சந்நியாசி; "முதலில் சேவகன், பின்னர் மந்திரி வந்து போனார்கள். இப்போதுதான் அரசர் வந்திருக்கிறீர்கள்!" என்றார்.

"கண் தெரியாத உங்களுக்கு அவர்களை எப்படி அடையாளம் தெரிந்தது?" என்று கேட்டார் அரசர்.

"அவரவர் கேள்வியின் தோரணையில் இருந்து அவர்கள் பதவியைக் கணிக்க முடிந்தது." என்றார் துறவி. அரசர் உண்மையை உணர்ந்து அவர்கள் சார்பாக துறவியிடம் மன்னிப்புக் கேட்டார்.

யார் பந்தா காட்டினார்கள் என்பது புரிகிறதுதானே!

* சிந்தியா! இந்திய அணி தோல்வியில் இருந்து மீள வழி என்ன?

பி. ரத்திகா, கண்டி.

சென்றவாரம்தான் இலங்கை அணியின் கூட்டுமுயற்சி பற்றி குறிப்பிட்டிருந்தேன். அரவிந்தா ரன் அவுட்டாக வேண்டிய தருணத்தில், தானே ஓடி அவுட்டாகி அரவிந்தா தொடர்ந்து ஆட உதவினார் அத்தபத்து. அது கூட்டுமுயற்சி. அணியை வெற்றிக்கு இட்டுச்செல்லும் நம்பிக்கையோடு ஆடிக்கொண்டிருந்த அசார், ரன் அவுட்டான தருணத்தில் அவருக்கு சந்தர்ப்பம் கொடுத்து விலக மொங்கியாவுக்கு வாய்ப்பு இருந்தும் நட்டகல்லாட்டம் நின்றார் பாருங்கள். அதுதான் கோணல் முயற்சி. இந்த இலட்சணத்தில் மீள்வது கடினம்தாங்க!

* வில்லன் சத்யராஜ், கதாநாயகன் சத்யராஜ். யார் சூப்பர்?

ஆ. யஸ்மின், கந்தளாய்.

கதாநாயக வில்லன் சத்யராஜ். உதாரணம்: 'அமைதிப்படை', 'பகைவன்'.

* தமிழ் படவுலகில் இன்று நடிகைகளில் உங்கள் வாக்கு யாருக்கு?

எம். குணசீலன், வவுனியா.

உடைத்தேர்தலிலா? இடைத் தேர்தலிலா? என்று குறிப்பிட மறந்துவிட்டீர்களே!

* சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனை சரணடைய வைப்பதில் ஒரு பத்திரிகையாளர் பிரதான பாத்திரம் வகித்திருக்கிறார். உங்களுக்கும் பெருமைதானே!

கே. தவக்குமார், கொழும்பு-06.

புலனாய்வு பத்திரிகையியலில் 'நக்கீரன்' சாதனை பாராட்டத்தக்கது. அரசால் கண்டு பிடிக்க முடியாத வீரப்பனை கண்டுபிடித்தது தான் அந்தச் சாதனை! ஆனால் வீரப்பன் சரணடைவு விவகாரத்தில், வில் தமிழக அரசு. வில்லாளன் கலைஞர் கருணாநிதி. அம்புதான் நக்கீரன் ஆசிரியர் கோபால்.

* இலங்கை கிரிக்கெட் அணியின் தொடர் வெற்றி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கா. மகேஸ், மொரட்டுவ.

"இலங்கையின் புதிய மதம் கிரிக்கெட். வெற்றிவாகை சூடும் அணி கடவுள்!" இதை நான் சொல்லவில்லை. நம் அயல்நாட்டு சஞ்சிகை 'இந்தியா டுடே' சொல்லியிருக்கிறது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் உபாலி தர்மதாசா இந்தியா டுடேக்கு சொல்லியுள்ள சுவாரசியமான தகவல் ஒன்று: "ஜெயசூரியா 340 ரன்களை எடுத்த அன்று 25 குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்கு 'சனத்' என்று பெயர் சூட்டப்பட்டது."

* தமிழ் சினிமா உலகப் பிரச்சனையில் சூப்பர் ஸ்டார் ரஜினி மௌனமாக இருப்பது ஏன்?

வி. பரீட், மருதானை.

கமலைப்போல குரு சொன்னாலும் குற்றம் குற்றமே என்று சொல்லி குருவை எதிர்த்து நிற்க ரஜினி விரும்பவில்லை. கலைஞர் கருணாநிதி தலையிட்ட பின்னரும் பிரச்சனை தொடர்வதையும் அவர் விரும்பவில்லை. "நான் யார் பக்கமும் இல்லை!" என்று கடந்தவாரம் சிறப்புப் பேட்டி கொடுத்திருக்கிறார் ரஜினி.

* தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டால் என்னாகும்?

ஆர். ராஜேஸ்வரன், திருக்கோணமலை.

இப்போது மட்டும் என்னவாம்? செயலில், குணத்தில், நேற்றுச் சொன்னதை இன்று வசதிக்கேற்ப மாற்றிச் சொல்வதில் என்றெல்லாம் பொது ஒற்றுமை நிலவத்தானே செய்கிறது! பெயர்கள் வேறுதானே தவிர கட்சிகள் ஒன்றுதான். தலைவர்கள்தான் பலர். அவர்கள் எல்லோரும் பலராகவே இருப்பர். ஒன்றானால் ஒருவர்தானே தலைவராக இருக்கலாம்; அங்கேதான் பிரச்சனையே!

* மைக் டைசன் ஹொலிஃபீல்டின் காதைக் கடித்தது பற்றி உமது கருத்தென்ன?

ஐ.எம்.பைசல், யடவத்த.

நல்லவேளை காதோடு விட்டாரே!

## ஸ்போர்ட்ஸ்

# தொடருவார் அசார்



இலங்கைக்கு எதிரான சுற்றுப்பயணத்தின் போது டெஸ்ட் போட்டிகளில் இரண்டு சதங்களையும், ஒருநாள் போட்டிகளில் ஒரு சதத்தையும் அடித்துத் தனது நிலையை மறுபடி ஸ்திரப்படுத்தியுள்ளார் இந்திய முன்னாள் கப்டன் முகமட் அசாருதீன்.

"இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு இந்திய அணிக்காக தொடர்ந்து விளையாடுவேன்," என்று அண்மையில் பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

கிரிக்கெட் உலகில் நுழைந்தவுடன் முதல் 3 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக 3 சதங்களை அடித்துச் சாதனை படைத்தவர்.

மேற்கிந்தியத் தீவு மைதானங்களை விட ஏனைய நாட்டு மைதான்ங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்துள்ள அசாருதீன், இதுவரை 85 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 5000 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 19 சதங்களும், 16 அரைச் சதங்களும் அடங்கும்.

உலகில் சிறந்த களத்தடுப்பு வீரர்களில் ஒருவரான அசாருதீன் டெஸ்ட் போட்டிகளில் 92 கட்ச்களைப் பிடித்துள்ளார்.

இவரது அண்மைய சாதனை, சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 7000 ஓட்டங்களைக் கடந்தது. ஒருநாள் போட்டிகளில் 7000 ஓட்டங்களைப் பெற்ற முதலாவது இந்திய வீரர் அசார். உலகில் மூன்றாவது வீரர்.

8649 ஓட்டங்களுடன் மேற்கிந்தியத்தீவு வீரர் டெஸ்மண்ட் ஹெய்ன்சும், 7381 ஓட்டங்களுடன் பாகிஸ்தானிய வீரர் ஜாவெட் மியான்டாட்டும் முதல் இரு இடங்களில் இருக்கின்றனர்.

இவர்களது சாதனைகளை அசார்- அணியில் தொடர்ந்து விளையாடினால் முறியடித்து விடுவார்.

# மகளிர் கிரிக்கெட்

**6வது** மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி வருகின்ற டிசம்பர் 5ம் திகதி தொடக்கம் 28ம் திகதிவரை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இந்திய மகளிர் கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், தென்ஆபிரிக்கா, இலங்கை, டென்மார்க், அயர்லாந்து, கனடா, ஹொலண்ட் ஆகிய 12 நாடுகளின் அணிகள் கலந்து கொள்கின்றன.

மொத்தம் 37 போட்டிகள் 16 இடங்களில் நடைபெறுகின்றது. எல்லாப் போட்டிகளும் பகலில் நடைபெறவுள்ளன.

# ஒன்றில் தவறவிட்டவர்கள்



இலங்கை- இந்திய அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சனத் ஜெயசூரிய 199 ஓட்டங்களை எடுத்து ஒரேயொரு ஓட்டத்தால் இரட்டைச் சத வாய்ப்பினைத் தவறவிட்டார்.

இதேபோன்று டெஸ்ட் போட்டிகளில் ஒரு ஓட்டத்தால் முடசார் நசார், முகமட் அசாருதீன், மத்தியூ எலியட் ஆகியோரும் இரட்டைச் சதத்தைத் தவறவிட்டவர்கள்.

இவர்கள் தவறவிட்ட இரட்டைச் சதங்கள் பற்றிய விபரங்கள் இதோ:

| வீரர் | நாடு | எதிர் அணி | ஆண்டு |
|---|---|---|---|
| 1. முடசார் நசார் (199) | பாகிஸ்தான் | இந்தியா | 1984-85 |
| 2. முகமட் அசாருதீன் (199) | இந்தியா | இலங்கை | 1986-87 |
| 3. மத்தியூ எலியட் (199) | அவுஸ்திரேலியா | இங்கிலாந்து | 1997 |
| 4. சனத் ஜெயசூரிய (199) | இலங்கை | இந்தியா | 1997 |

www.padippakam.com

# "வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு"

## நக்கீரன் ஆசிரியருடன் வீரப்பன் விவாதம்

காட்டிலாகா அதிகாரிகள் ஒன்பது பேரை வீரப்பன் கடத்திச் சென்றான். அவர்களை மீட்கவும் வீரப்பனின் பொது மன்னிப்பு கோரிக்கையை பற்றிப் பேசவும் தமிழக அரசால் தூதராக அனுப்பப் பட்டார் நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால். அவருக்கும் வீரப்பனுக்கும் இடையே ஒரு பொது ஒற்றுமை பெரிய மீசை. வீரப்பனுடன் நக்கீரன் ஆசிரியர் நடத்திய பேச்சுவார்த்தையின் முழு விபரமும் இங்கே வரிக்குவரி தரப்படுகிறது.

**வீரப்பன்:** வணக்கம்! வாங்க!

**நக்கீரன்:** வணக்கம்!

**வீரப்பன்:** என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள்?

**நக்கீரன்:** வேதாளம் முருங்கைமரம் ஏறுவதைப் போல, மறுபடியும் 9 பேரைக் கடத்திவிட்டு, என்ன விஷயமாக என்று கேட்கலாமா? உங்கள் 11 கோரிக்கைகளை என்னிடம் கொடுத்தீர்கள். நான் அரசாங்கத்திடம் கொடுத்திருக்கிறேன். அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.



வீரப்பன்

இதற்கிடையில் நீங்கள் செய்திருக்கும் இந்த ஆள் கடத்தல், நக்கீரனைப் பொறுத்தவரையில் தலைகுனிவான விஷயமாக, வெட்கப்பட வேண்டிய செயலாக அமைந்துவிட்டது. பலரும் என்னிடம், இப்படிப்பட்ட வீரப்பனுக்காகவா நீங்கள் தலையிட்டீர்கள் எனக் கேட்கிறார்கள். 9 பேரை நீங்கள் கடத்தியதும் கர்நாடக அரசு தமிழக அரசை தொடர்புக்கொள்ள, தமிழக அரசு நக்கீரனைத் தொடர்பு கொண்டது.

இது 9 மனிதர்களின் உயிர்ப் பிரச்சனை என்பதால், மனிதாபிமானத்தோடும், காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையோடும் அரசின் வேண்டுகோளை ஏற்று, அரசுக்கும் உங்களுக்கும் இடைப்பட்ட ஒரு மூன்றாவது மனிதனாக இங்கே வந்திருக்கிறேன். வந்தீர்கள்; உட்கார்ந்தீர்கள்; பேசினீர்கள்; ஒன்பது பேரையும் அனுப்பச் சொல்கிறீர்களே என்றெல்லாம் நினைக்கக் கூடாது. மறுபடியும் மறுபடியும் வீரப்பன் தவறு செய்வதை நக்கீரன் விரும்பவில்லை. தமிழக மக்களும் கர்நாடக மக்களும் விரும்பவில்லை. மக்களின் ஒட்டுமொத்த விருப்பமாக, தூதராகத்தான் நான் வந்திருக்கிறேன்.

**வீரப்பன்;** ஜெயலலிதா, ஆட்சியில் இருந்த போது எக்கச்சக்கமான படைகளை இங்கே அனுப்பி, அவர்களும் எக்கச்சக்கமான பெண்களை கெடுத்து, மக்களை சின்னாபின்னமாக்கி, மலைப்பகுதியே ரணகளமானது. பிறகு கலைஞர் ஆட்சிக்கு வந்தார். அப்போது நீங்கள் இங்கே வந்தீர்கள். அமைதியாக இரு! கலைஞரிடம் கூறி இதற்கு ஒரு நல்ல முடிவைக் காண்போம் என்று கூறிச் சென்றீர்கள். ஆயிற்று- ஒன்றரை வருடம் ஆயிற்று. ஒன்றும் நடக்கவில்லை. நீங்கள் கூறியதால் இதுவரை ஆயுதத்தை பயன்படுத்தாமல் இருக்கிறேன். ஆனால், கர்நாடக அரசு முன்னைக் காட்டிலும் தீவிரமாக தேடுதல் வேட்டையில் இறங்கிவிட்டது. வேறு வழி தெரியவில்லை. கடத்திக்கொண்டுவர வேண்டியதாகிவிட்டது.



வீரப்பனும் நக்கீரன் ஆசிரியர் கோபாலும் (வலதுபுறமிருப்பவர்)

**நக்கீரன்:** எப்படிக் கடத்தினீர்கள்?

**வீரப்பன்:** அது என் தொழில் இரகசியம். தொழில் இரகசியத்தைச் சொல்லக்கூடாது.

**நக்கீரன்:** அந்த 9 பேரை எப்படி நடத்துகிறீர்கள்? அவர்களைச் சித்ரவதை செய்வதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளதே?

**வீரப்பன்:** சித்ரவதை செய்வது, கரண்டுவிடுவது எல்லாம் பொலிஸ்காரன் வேலை. நான் பொலிஸ்காரன் அல்ல; வீரப்பன் அப்படிச் செய்யமாட்டேன்.

**நக்கீரன்:** பூலான் தேவியும் கோரிக்கை வைத்துத்தான் சரணடைந்தார். மூன்றே மூன்று கோரிக்கைகள் மட்டும். அவை என்ன தெரியுமா? கையில் விலங்கு போட்டு அழைத்துச் செல்லக்கூடாது. திறந்த வெளிச் சிறையில்தான் என்னை அடைக்க வேண்டும். என்னைச் சார்ந்தவர்களைச் சிரமப்படுத்தக் கூடாது; என்னைச் சந்திக்க அவர்களுக்கு அனுமதியளிக்க வேண்டும் என்ற 3 கோரிக்கைகள் மட்டுமே. நூற்றுக்கு மேற்பட்ட தனது ஆட்களோடு சரணடைந்த மல்கான் சிங்கோ ஒரே ஒரு கோரிக்கைத்தான் வைத்தார். எங்கள் ஊர் கோயிலுக்கு சொந்தமாக இருந்த நிலங்களை மீண்டும் கோயிலுக்கே வழங்க வேண்டும் என்ற ஒரே ஒரு கோரிக்கை மட்டும்தான். ஆனால், நீங்களோ 11 கோரிக்கைகளை கொடுத்திருக்கிறீர்கள்.

**வீரப்பன்:** நானும் அப்படிச் சரணடையத்தான் இருந்தேன். ஜெயலலிதா ஆட்சியில் 93-ம் வருடத்திலேயே சரணடையத் தயார் என்று பலர் மூலம் சொல்லி அனுப்பினேன். எனது சரண்டரை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்ப நிலைமையே வேற. என் குடும்பமே அழிந்துவிட்டது. என் சொந்தக்காரர்களை எல்லாம் அழித்துவிட்டார்கள். என்னுடைய இழப்பு வேறு. இப்படிப்பட்ட கொடுமை பூலான் தேவிக்கோ மல்கான் சிங்கிற்கோ ஏற்படவில்லை.

**நக்கீரன்:** முதலில் நாம் ஒரு தீர்வுக்கு வந்துவிடுவோம். சரணடைந்த பிறகு நீங்கள் வெளியே வந்துவிடத்தான் போகிறீர்கள். அதன்பிறகு உங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிப் பேசலாம்.



வீரப்பனுடன் 'நக்கீரன்' ஆசிரியர் பேட்டி–வீடியோப் படப்பிடிப்பு

**வீரப்பன்:** வெளியே வந்தால் என்னைப் புதைத்துவிடும் அரசாங்கம்.

**நக்கீரன்:** நம்பிக்கையோடு பேசுங்கள்!

**வீரப்பன்:** நம்பிக்கையோடுதானே என் தம்பி அர்ச்சுனனை அனுப்பினேன். என்ன செய்தார்கள்? சயனைட் கொடுத்துக் கொன்று, நரசிபுரம் சந்தையில் அர்ச்சுனனுக்கும் ரங்கசாமிக்கும் ஐயன்துரைக்கும் சமாதி கட்டினார்களே.... அந்த அரசாங்கத்தை எப்படி நம்ப? அந்த 3 சமாதிக்கும் பலிக்குப் பலியாக 9 சமாதிகளைக் கட்டத்தான் இந்த 9 பேரை கடத்தி வந்தேன்.

**நக்கீரன்:** இப்படி நீங்கள் பேசுவதைக் கேட்கவா நான் வந்திருக்கிறேன்?

**வீரப்பன்:** எனக்குப் பொது மன்னிப்புக் கிடைக்கவில்லை. என்றால் இவர்களை கட்டாயம் கொல்வேன் இது சத்தியம்! பொதுமன்னிப்புத்தான் வேண்டும். ஒரு நாள் ஜெயிலுக்குள் நுழைந்தாலும் பிறகு சாகும்வரை என்னை வெளியே விடமாட்டார்கள்.

**நக்கீரன்:** பொதுமன்னிப்பு என்பது ரொம்ப கஷ்டமான கோரிக்கை. இந்தியாவில் இதுவரை யாருக்குமே கிடைக்காத, கொடுக்கப்படாத ஒன்று.

**வீரப்பன்:** ஏன் கொடுக்கப்படவில்லை. காஷ்மீர் தீவிரவாதிகளுக்குக் கிடைத்தது என்ன? இந்தக் கையில் துப்பாக்கி; அந்தக் கையில் மன்னிப்பு கொடுக்கவில்லையா? அவர்கள் பெரியவர்கள், நான் சின்னவனா?

**நக்கீரன்:** உங்கள் கதையே வேறு. யானை வேட்டை, சந்தனமரக் கடத்தல், நூற்றுக் கணக்கான அதிகாரிகள் கொலை.

**வீரப்பன்:** யானை வேட்டையும் சந்தனமரம் வெட்டியதும் யார்தான் செய்யவில்லை. அதற்காக என்னைப்பிடிக்கட்டும், கேஸ் போடட்டும், என் தங்கையை, குடும்பத்தை, ஊர் மக்களை காமவேட்டையாடி கொல்ல பொலிஸ்காரனுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

**நக்கீரன்:** உங்களுடைய பெரிய தவறு அதிகாரிகளைக் கொன்றதுதான். சிதம்பரத்தைக் கொன்றீர்கள். சீனிவாசன் தலையைத் தனியே வெட்டி எடுத்துச் சென்றீர்கள். ஹரிகிருஷ்ணா எஸ்.பி.யை கொலை செய்தீர்கள் இப்படி....

**வீரப்பன்:** என் தங்கையை கெடுத்து கொன்றவனின் தலையை வெட்டாமல் என்ன செய்வதாம்?

**நக்கீரன்:** நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். கர்நாடகத்திலோ, சீனிவாசனின் படத்திற்கு மாலை போட்டுக் கும்பிடுகிறார்கள். ஹரிகிருஷ்ணாவின் படு கொலையை இன்று வரை வேதனையோடு பேசுகிறார்கள். இப்படிப்பட்ட கொடூரமான வீரப்பனுக்கு பொது மன்னிப்பா எனக் கேட்கிறார்கள் மக்கள்.

**வீரப்பன்:** அதிகாரிகள் நல்லவர்கள் என்று கூறினால்தான் மக்கள் குடியிருக்கவே முடிகிறது. பாம்பு தின்னும் ஊருக்குப் போனால் நடுத்துண்டம் நமக்கென்று மக்கள் பிழைக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அப்படிச் சொல்கிறார்கள் மக்கள்.

**நக்கீரன்:** மீண்டும் மீண்டும் கோபம்தான் வருகிறது உங்களுக்கு அவர்கள் அரசாங்க அதிகாரிகள்.

**வீரப்பன்:** அதிகாரியாவது மண்ணாங்கட்டியாவது... எல்லோரும் மனிதன்தான்.

**நக்கீரன்:** இந்த டயலாக்கையெல்லாம் உங்கள் காட்டு ராஜாங்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். காட்டுக்குள்தான் உங்கள் அரசாங்கம். நாட்டில் அரசாங்கம் என்பது வேறு. சில விஷயங்களை நீங்கள் ஜீரணிக்க கற்றுக்கொள்ளுங்கள். நான் இங்கே-உள்ளே வருவதற்கு 24 மணிநேரம் நடந்து வரவேண்டியிருந்தது. எதற்காக...? இந்த ஒன்பது உயிர்களுக்காக! அதைப்பற்றி பேசுங்கள்.

**வீரப்பன்:** ரொம்ப ஈஸி! எனக்கு மன்னிப்பு கொடுத்தால் போதும், விட்டுவிடுகிறேன். ஆனால் ஒரே ஒரு நிமிஷம்கூட உள்ளே இருக்கமாட்டேன். ஜெயிலில் இருந்து சாவதைவிட ஒரு ரெண்டாயிரம் பேரை கொன்றுவிட்டு சாகிறேன் போ!

**நக்கீரன்:** இன்னும் ரெண்டாயிரம் பேரையா...?

**வீரப்பன்:** ரெண்டாயிரம் பேரை என்ன, ரெண்டு இலட்சம் பேரைக்கூட கொல்வேன். என் தம்பியை கொன்றவனை தண்டிக்கத் துப்பில்லை. சயனைட் கொடுத்து என் தம்பியைக் கொன்றதை மந்திரியாயிருந்த தேவகௌடாகூட கண்டித்தார். பங்காரப்பாகூடக் கண்டித்தார்.

**நக்கீரன்:** அதே பங்காரப்பாதான் இப்போது நீங்கள் வனத்துறையினரை கடத்தி வந்ததையும் கண்டித்திருக்கிறார்.

**வீரப்பன்:** அரசியல்வாதியின் குணத்தைக் காட்டிவிட்டாரா?

**நக்கீரன்:** நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்புங்கள்! கர்நாடக முதல்வரும் தமிழக முதல்வரும் 'உங்கள் உயிருக்கு உலகம் அறிய உத்தரவாதம்' தந்திருக்கிறார்கள்.

**வீரப்பன்:** அதையெல்லாம் நம்பமுடியாது. பொலிஸ்காரர்கள் வீட்டில் ஒப்பாரிக்கு ஏற்பாடு செய்தால்தான் இவர்களுக்கு சரிப்பட்டு வரும்.

**நக்கீரன்:** வெறியோடு பேசாதீர்கள். கர்நாடக அரசு எவ்வளவோ இறங்கிவந்திருக்கிறது. நீங்கள்தான் முரண்டு பிடிக்கிறீர்கள். நீங்களும் அரசாங்கத்தோடு நெருங்கிவர வேண்டாமா?

**வீரப்பன்:** எதை நெருங்க! அரசாங்கம் ஒரு நெருப்பு. அதை நம்பவே முடியாது.

**நக்கீரன்:** பொது மன்னிப்பு, பாதுகாப்பு, துப்பாக்கி, தலைக்கு 50 இலட்சம் அதிகாரிகள் மீது நடவடிக்கை என்று சாத்தியமற்ற கோரிக்கைகளைப் பிடித்துக் கொண்டு தொங்கும் நீங்கள்தான் நெருப்பென்று அரசாங்கம் கூறுகிறது.

**வீரப்பன்:** இந்த மரத்தின் மேலிருந்து குதித்தால் சாவு நிச்சயம் எனத் தெரிந்த பின்னால், குதி குதி என்று சொன்னால் குதிக்க முடியுமா? எவனாவது குதிப்பானா?



வீரப்பன் தம்பி அர்ஜுனன்

**நக்கீரன்:** அப்படியானால் அரசாங்கத்தின் மீது உங்களுக்கு நம்பிக்கையே கிடையாதா?

**வீரப்பன்:** கிடையாது!

**நக்கீரன்:** அரசாங்கம் கொடுக்கும் பொதுமன்னிப்பை மட்டும் எப்படி நம்பப்போகிறீர்கள்?

**வீரப்பன்:** அதற்குத்தான் எங்கள் உயிருக்கு பட்டா கேட்கிறேன். கலைஞரும், பட்டேலும், பிரதமரும் ஜனாதிபதியும் கையெழுத்துப் போட்ட பட்டா. அதற்காகத்தான் உங்களிடம் 11 கோரிக்கைகளைக் கொடுத்தனுப்பினேன்.

**நக்கீரன்:** அந்த 11 கோரிக்கைகளில் ஏதாவது மாற்றம் உண்டா?

**வீரப்பன்:** எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் தலா 50 இலட்ச ரூபாய் கேட்டிருந்தேன். அதைக் குறைத்துக் கொள்கிறேன். அவர்கள் விருப்பப்பட்டு தருவதை சந்தோஷமாக வாங்கிக்கொள்கிறேன்.

6 தந்தங்களை வைத்துக்கொள்ள அனுமதி கேட்டேன். அதை அரசாங்கத்திடமே கொடுத்துவிடுகிறேன். அவர்கள் கோயிலுக்குக் கொடுக்கட்டும்.

அதிரடிப் படைகளை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டிருந்தேன். பொது மன்னிப்புக் கொடுத்தபின் அதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

பொதுமன்னிப்புக் கிடைத்தால் வழக்குகள் தானாகவே இல்லாமல் போய்விடுமல்லவா... அந்தக் கோரிக்கையும் அவசியமில்லை.

மற்ற அத்தனை கோரிக்கைளும் கட்டாயம் வேண்டும். அப்புறம்... சினிமா எடுப்பது...

**நக்கீரன்:** நீங்கள் வெளியே வந்தாலும் அரசாங்கத்திற்குத் தலைவலியாகத்தான் இருப்பீர்கள் போலிருக்கிறது. உங்களிடம் பணயக் கைதிகளாக உள்ள 9 பேரையும் ஒப்படைக்க, அரசிடம் என்னதான் எதிர்பார்க்கிறீர்கள்?

**வீரப்பன்:** பொதுமன்னிப்பு. மற்ற என் கோரிக்கைகள் நிறைவேற வேண்டும். இலையைப் போட்டு, காகிதங்களில் தனித்தனியே லட்டு, போண்டா, சோறு கறி என்று எழுதி இலையில் போட்டு சாப்பிடு என்று தமிழர்களை ஏமாற்றுகிறார் சந்திரிக்கா... அப்படி என்னை ஏமாற்ற நினைக்கிறது அரசாங்கம்.

பெருநாட்டில் சுரங்கம் தோண்டி தீவிரவாதிகளிடமிருந்து பணயக் கைதிகளை மீட்டதுபோல ஏதாவது செய்து, இந்த ஒன்பது பேரையும் மீட்டுக்கொண்டு செல்ல நினைத்தால்... வீரப்பன் எதிலும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுதான்... அப்புறம் இந்த 9 பேரின் தலையும் 'கட்'தான்! ■

## வீரப்ப வேட்டை

இதுவரை இரு மாநிலங்களும் சேர்ந்து வீரப்பனைத் தேடும் வேட்டையில் சுமார் 200 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாக நம்பப்படுகிறது. (நாம்நாட்டு மதிப்பில் சுமார் 340 கோடி ரூபாய்). சுமார் 120 பொலிஸ் மற்றும் வனத்துறை அலுவலர்கள் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளால் கொல்லப்பட்டனர். இதுதவிர கிராமவாசிகள் சுமார் 300 பேர் (பொலிஸ் கணக்குப்படி அவர்கள் வீரப்பன் கூட்டாளிகள்; வீரப்பன் கணக்குப்படி அவர்கள் காட்டிக் கொடுத்தவர்கள்- மொத்தத்தில் பொதுமக்கள்) பொலிஸ், வீரப்பன் இருவராலும் கொல்லப் பட்டனர். வீரப்பன் மீது 55 வழக்குகள் கர்நாடக மாநிலத்தில் உள்ளன.

வீரப்பனின் தாக்குதலில் பலியானவர்களில் கணிசமானவர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள். அதனால்தான் அவனுக்குப் பொதுமன்னிப்புக் கொடுப்பதற்கு தமிழகத்தைவிட கர்நாடகத்தில் பரவலான எதிர்ப்பு இருக்கிறது. தாக்குதல்களில் கொல்லப்பட்ட கர்நாடக பொலிஸ், வனஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் பட்டியல்:

* 1989, ஏப்ரல் 4: வீரப்பனின் சந்தனக்கடத்தல் லொறியை மடக்கிய கர்நாடக வனத்துறை ஊழியர் மோகனய்யா சுட்டுக்கொல்லப்பட்டார்.
* 1990, ஜனவரி 4: வீரப்பன் தாக்கி இரு கர்நாடக பொலிசார் காயம்.
* 1990, ஏப்ரல் 9: மைசூர் நகர போக்குவரத்து பொலிஸ் படையைச் சேர்ந்த 3 சப் இன்ஸ்பெக்டர்கள், மற்றும் ஒரு ஜீப் சாரதியை காவிரிக் கரையோரம் வீரப்பன் சுட்டுக்கொன்றான். அதில் வீரப்பனைப் பிடிப்பதில் தீவிரம் காட்டிய கர்நாடக பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் தினேஷ் என்பவரும் அடக்கம். இதைத் தொடர்ந்துதான் கர்நாடக பொலிஸ் அதிரடிப்படை 12.04.1990 அன்று அமைக்கப்பட்டது.
* 1990, ஒக்டோபர் 10: உதவி வனத்துறை அலுவலரான கன்சர்வேட்டர் பி. ஸ்ரீனிவாசு கொடூரமாகக் கொல்லப்பட்டு அவரது தலையை ஆற்றில் மிதக்க விட்டான் வீரப்பன்.
* 1992, மே 19: மைசூர் மாவட்டம் ராமாபுர காவல் நிலையத்தைத் தாக்கி அங்கிருந்த 5 பொலிசாரை சுட்டுக்கொன்று விட்டு, காவல் நிலையத்தில் இருந்த துப்பாக்கிகளையும், மற்ற தளவாடங்களையும் வீரப்பன் கொள்ளையடித்தான்.
* 1992, ஒகஸ்ட் 14: கர்நாடக அதிரடிப்படையின் தலைவரும் மைசூர் சரக எஸ்.பியுமான டி.ஹரிகிருஷ்ணா, சப் இன்ஸ்பெக்டர் ஷகீல் அகமது மற்றும் 4 பொலிசார் வீரப்பனின் துப்பாக்கிச் சூட்டில் பலியானார்கள்.
* 1993, மே 24: மாதேஸ்வரன் மலையடிவாரத்தில் வீரப்பன் கோஷ்டிக்கும், கர்நாடக மாநில அதிரடிப்படையினருக்கும் நடந்த துபாக்கிச் சண்டையில் 6 பொலிசார் பலியானார்கள்.
* 1994, ஜனவரி 17: மாதேஸ்வரன் மலை, கொரட்டி ஒசூரில் வீரப்பன் தம்பி அர்ஜுனன் நடத்திய தாக்குதலில் ஒரு கர்நாட பொலிஸ்காரர் கொல்லப்பட்டார்.
* 1997, ஜூலை 12: கர்நாடக வனத்துறை ஊழியர்கள் 10 பேரை வீரப்பன் சிறைபிடித்தான்.



"என்னாச்சு?"

"குழந்தை அழுவுது...?"

"வீரப்பன் போட்டோவை காட்டு.... நீ குழந்தையா இருந்தப்ப அதைத்தான் காட்டினேன்." ■

## வீரப்பன் விவகாரத்தில் ஒரு நாடகம்

### வெளியே தெரியாத தகவல்

இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கை செய்திகளிலும் இப்போது வெகு பிரபலமாகி விட்டான் வீரப்பன்.

வீரப்பன் வெகு பிரபலமாக காரணமாக இருந்தது நக்கீரன் சஞ்சிகை.

தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் பொலிசார் காடுகளில் வீரப்பனை சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தார்கள்.

வீரப்பன் எப்போதோ செத்துவிட்டான். அவன் பெயரைச் சொல்லி வேறு யாரோ நாடகமாடுகிறார்கள் என்றும் கருதப் பட்டது.

அப்போதுதான் பொலிசாரால் பிடிக்க முடியாத வீரப்பனை நக்கீரன் நிருபர்கள் காட்டுக்குள் சந்தித்து பேட்டி கண்டுவந்து பரபரப்பு ஏற்படுத்தினார்கள். இதன் பின்னர் கடந்த தமிழக தேர்தல் நேரத்தில் வீரப்பனை சந்தித்து அவன் பேட்டியை நக்கீரன் ஆசிரியர் கோபால் வீடியோவில் பதிவு செய்து வந்தார்.

அ.தி.மு.க அமைச்சர் கண்ணப்பனுக்கும் நடிகை சுகன்யாவுக்கும் இடையிலான தொடர்புகள், அமைச்சர்களின் ஊழல்கள், ஜெயலலிதா ஆட்சியின் கொடுமைகள் என்று வீரப்பன் பல விஷயங்களை பேட்டியில் அலசித்தள்ளியிருந்தான்.

தேர்தல் பிரசாரத்திற்கு சாதகமாக அந்த வீடியோவை பயன்படுத்தியது தி.மு.க.

கலைஞர் கருணாநிதியின் குடும்ப நிறுவனமான சன்.ரி.வி.யில் வீரப்பன் பேட்டி பரபரப்பாக ஒளிபரப்பானது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வீரப்பனுக்கு பொதுமன்னிப்பு தரப்படும் என்று தி.மு.க.

தரப்பு வீரப்பனுக்கு இரகசிய செய்தி அனுப்பியதாகவும் கூறப்படுகிறது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. வீரப்பன் காத்திருந்தான். அதன்பின்னர்தான் கடந்த ஜூலைமாதம் 12ம் திகதி காட்டிலாகா அதிகாரிகள் 9 பேரை வீரப்பன் கடத்திச் சென்றான்.

இந்தக் கடத்தல் தொடர்பாக இருவேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

வீரப்பனுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் வீரப்பன் கோபப்படலாம் என்பதால் தி.மு.க தரப்பின் யோசனைப்படி காட்டிலாகா அதிகாரிகளை கடத்தினான் வீரப்பன். அதனை ஒரு சாக்காக வைத்து வீரப்பனை வெளியே கொண்டுவர தி.மு.க. அரசு நடத்திய நாடகமே இது என்கிறார்கள்.

ஏனெனில் கர்நாடக அரசு வீரப்பனை ஒழித்துக்கட்டுவதில் முனைப்பாக நின்றது. கர்நாடக அரசின் எதிர்ப்பில்லாமல் வீரப்பனை காப்பாற்ற நடத்தப்பட்ட நாடகம்தான் கடத்தல் விவகாரம் என்கிறார்கள்.



நக்கீரன் ஆசிரியர் தி.மு.க.வுக்கு சற்று நெருக்கமானவர். அவர் மூலமாக நாடக காட்சிகள் அரங்கேற்றப்பட்டன. வீரப்பனுடன் நடந்த பேட்டிகள், காரசாரமான விவாதங்கள் என்று நக்கீரன் ஆசிரியர் வெளியிட்டதும் சந்தேகம் ஏற்படாமல் இருக்கத்தானாம்.

மற்றொரு சாரார் வேறு மாதிரிக் கூறுகிறார்கள். கருணாநிதி வீரப்பனுக்கு கொடுத்த வாக்குறுதியை ஆட்சிக்கு வந்த பின்னர் மறந்துவிட்டார். அதனால் கோபம் கொண்ட வீரப்பன் காட்டிலாகா அதிகாரிகளை கடத்தி சவால்விட்டான். வீரப்பன் விவகாரத்தை தனது அரசுக்கும் வீரப்பனுக்கும் புரிந்துணர்வு இருக்கிறது என்று யாருக்கும் சந்தேகம் ஏற்படாமல் தீர்த்து வைக்க முயல்கிறார் தந்திரியான கலைஞர் என்கிறார்கள்.

வீரப்பன் காட்டிலாகா அதிகாரிகளை கடத்தியதற்கும் தி.மு.க. அரசுக்கும் தொடர்புண்டோ இல்லையோ, வீரப்பனுக்கும் தி.மு.கவுக்கும் இடையே புரிந்துணர்வு உண்டு என்பது மட்டும் உண்மை.

தேர்தல் நேரத்தில் வீரப்பன் செய்த பிரசார உதவிக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறது தி.மு.க. அந்தக் கடனை இப்போது திருப்பிச் செலுத்துகிறார்கள். ■

**கவனிக்க**

இராமாயணம் அடுத்த வாரம் இடம்பெறும். காதிலை பூ கந்தசாமியாரையும் வரும் வாரம் சந்திக்கலாம்.




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

## நிஜ வில்லன்

"ஆட்பலம் அதிகமில்லை. அப்படி ஒன்றும் நவீனரக ஆயுதங்களும் கிடையாது. மிஞ்சி மிஞ்சிப் போனால் இருபது பேர்கூட அவனுடன் இருக்கமாட்டார்கள்." என்று தமிழ்நாடு பொலிசார் சொல்கிறார்கள். அது உண்மை போலத்தான் தெரிகிறது. ஆனாலும் பல நூற்றுக்கணக்கான பொலிசார் முயன்றும் அவர்கள் கண்ணுக்குள் விரலைவிட்டு ஆட்டிக்கொண்டிருக்கிறான் வீரப்பன்.

பல சினிமாப் படங்களில் வில்லனாக சித்தரிக்கப்பட்டாலும், வீரப்பன் ஒன்றும் நிழல் வில்லனல்ல. நிஜ வில்லன். தமிழ் நாடு, கர்நாடக எல்லையில் உள்ள காட்டுப் பகுதியில்தான் வீரப்பன் நடமாடுகிறான். இரு மாநிலப் பொலிசாரும் முகாமிட்டு தேடியும் பலன் பூச்சியம்தான்.

இராணுவத்தை அழைத்து தேட நினைத்தார்கள். ஒரு கடத்தல்பேர்வழியைப் பிடிக்க துப்பில்லாமல் இராணுவத்தை அழைப்பது கௌரவக் குறைச்சல் என்பதால் அந்த யோசனை கைவிடப்பட்டது.

புலிகள்தான் வீரப்பன் ஆட்களுக்கு ஆயுதமும், பயிற்சியும் கொடுக்கிறாகள் என்றும் ஒரு புரளியைக் கிளப்பிவிட்டனர். தமிழ்நாட்டில் இது ஒரு நோய் மாதிரி சில பத்திரிகையாளர்களிடம் தொற்றிக் கொண்டிருக்கிறது. அங்கே என்ன சாகசம் நடந்தாலும் உடனே புலிகளுடன் முடிச்சுப் போட்டுவிடுகிறார்கள். உண்மையில் வீரப்பன் பெரியாளாக மாறக் காரணம் தமிழ்நாட்டிலும், கர்நாடகாவிலும் உள்ள அரசியல்வாதிகள்தான்.

சமீபத்தில்கூட தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் சந்தனமரக் கடத்தலில் சம்பந்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். பொலிசாரின் இரகசிய திட்டங்கள்கூட வீரப்பன் காதுக்கு முன்கூட்டியே எட்டிவிடுகிறது. அதனால் அவன் உஷாராகி தப்பிச் சென்றுவிட்ட பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. தகவல் கொடுப்பது அரசியல்வாதிகள்தான்.

"கடந்த பத்துவருடகாலமாக காட்டுராஜாவாக இருக்கும் வீரப்பனை பிடிக்கவே முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். அதனால்தான் வீரப்பனுடன் பேச்சு நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைவிட வெட்கக்கேடு வேறென்ன இருக்கிறது?" என்ற புழுங்குகிறார்கள் சில பத்திரிகையாளர்கள்.

பூலான்தேவியுடன் வீரப்பனை ஒப்பிடமுடியாது. பூலான்தேவி கொள்ளைக்காரியாக விரும்பி உருவானவள் அல்ல. சமூகக் கொடுமை, சாதி ஒடுக்குமுறை போன்ற காரணங்களால் அதனை எதிர்த்து உருவானவள். வீரப்பனின் ஆரம்பக்காலத்தொழிலே சந்தன மரக் கடத்தல்தான். அதனால் பூலான்தேவி விவகாரத்தை கையாண்ட முறையை வீரப்பன் விடயத்தில் கையாளக்கூடாது" என்பது ஒரு சாராரின் அபிப்பிராயம்.

வீரப்பன் கடத்தல்காரன்தான். ஆனால் பெண்கள் விஷயத்தில் தன் ஆட்கள் தவறாக நடந்தால்கூட தண்டித்துவிடுவான். கிராம மக்களுக்கு தாராளமாக உதவுவான். எந்தக் கெட்ட காரியங்களிலும் ஈடுபடமாட்டான்" என்றெல்லாம் நல்ல பெயரும் இருக்கிறது. அந்த வகையில் வில்லன். வீரப்பன் கதாநாயகனாகவும் கருதப்படுகிறான்.

சரணடைந்த பின்னர் தனது கதையை படமாக எடுப்பதில் வீரப்பனுக்கு மகா ஆசை. அப்படி எடுத்தால் இதுவரை வில்லனாக சித்தரிக்கப்பட்ட வீரப்பனை கதாநாயகனாக சித்தரித்தாக வேண்டும். வில்லன் நடிகர்கள் மட்டுமல்ல, நிஜ வில்லன்களும் கதாநாயகர்களாக மாறும் காலம் இது. ■

வர்ணக் கலவையில் குளித்துவிட்டு வந்ததுபோல காட்சிதரும் இந்தப் பறவையின் பெயர்: 'பார்பெற்'. புறூனே என்றதும் உலகில் பெரிய பணக்கார மன்னன் சுல்தான் பெயர் தான் ஞாபகம் வரும். இனிமேல் இந்தப் பறவையும் ஞாபகம் வரட்டும். புறூனே நாட்டின் ஈரவலயக் காடுகளில்தான் இப் பறவை காணப் படும்.

சாப்பாடு சுத்த சைவம். தாவர உணவைத்தான் சாப்பிடும். இவை உணவை கவ்விச் செல்வதே ஒரு தனியழகு. மிக அழகான இப்பறவையைக் காண புறூனே மக்களுக்கு ஆசையோ ஆசை. கலர் பார்க்கும் ஆசை எனலாம். ■



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657




## வர்ணக் கலவை



## எங்கெங்கு காணினும்

பாப்பா முதல் பாட்டா பாட்டி வரை பார்த்து மகிழும் விளையாட்டு கிரிக்கெட். முன்னர் கிரிக்கெட் என்றால் 13 முட்டாள்கள் விளையாட 13 ஆயிரம் முட்டாள்கள் பார்த்து இரசிக்கும் விளையாட்டு என்று புறக்கணித்தவர்களும் இருக்கிறார்கள்.

கிரிக்கெட்டை வெறுத்த பலரே தற்போது கிரிக்கெட் பைத்தியங்களாக மாறிவிட்டார்கள். அந்தளவுக்கு கிரிக்கெட்டின் மவுசு ஏறியிருக்கிறது.

முற்றும் துறக்காதோர் முதல் முற்றும் துறந்தோரையும் கிரிக்கெட் பற்றி இழுக்கிறது. இப் புகைப்படம் இந்தியாவில் ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள டார்ஜிலிங் என்ற இடத்தில் 'கிளிக்' செய்யப்பட்டது.

பௌத்த மடாலய வளவிற்குள் இளம் பௌத்த துறவிகள் 'கிரிக்கெட்' ஆடுகிறார்கள். துறக்க இயலாத விளையாட்டு. ■


இரத்தினக்கல் நகைகள் காட்சியகம் திறப்பு விழா
பல ஆண்டு காலம் நகை உலகில் தனக்கென தனி முத்திரை பதித்த நாம் இன்று இரத்தினக் கற்களையும் இணைத்து இன்னொரு படிமேல் செல்லுகின்றோம் என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.
திகதி - 05.09.97 நேரம் - 06.04 - 07.34
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
அருள் ஜுவலர்ஸ் ARUL JEWELLERS
இல-03, செட்டியார் தெரு, கொழும்பு-11

குறிப்பு:-
மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்கவும் விற்கவும் எம்மை நாடுங்கள்.
ARUL JEWELLERS
Tel.: 436331




## மறக்க முடியுமா

இது இந்தியாவில் காஷ்மீர் மாநிலத்தில் உள்ள கல்லறை. காஷ்மீரை தனிநாடாக்க வேண்டும் என்று போராடி மரித்தவர்களின் உடல்கள் இங்கே அடக்கம் செய்யப்பட்டுள்ளன. காஷ்மீரின் கோடைகாலத் தலை நகரான சிறீநகரில் இது அமைக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் போராளிகளை பாகிஸ்தான் தூண்டிவிடுவதாக இந்தியா குற்றம் சாட்டுகிறது.

அதில் உண்மை யில்லாமல் இல்லை. காஷ்மீர் பிரச்சனையை தன் காலத்தில் தீர்த்துவைத்து புகழ் பெற ஆசைப்படுகிறார் இன்றைய இந்தியப் பிரதமர் குஜ்ரால். ஆனால் உடனே நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை.

1990 முதல் இன்றுவரை காஷ்மீர் பிரச்சனையில் போராளிகள் உட்பட 20 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். பலியான தம் உறவினரின் கல்லறையில் என்றும் நிலையான நினைவுகளுடன் கண்ணீர் சிந்தும் உறவினர்கள் இவர்கள்.

அசப்பில் இதே போலவே புலிகளின் மாவீரர் மயானங்களும் அமைந்துள்ளன. ■



... தினமுரசு பதிப்பகத்தாரால் 25, வெல்பார, நாவலயில் உள்ள ... அச்சகத்தில் ஆகஸ்ட் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
படிப்பகம்